263



91-2

187

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



# விபூதிவிளக்க

மூலமும்,



# விபூதி மஹாத்மிய

வசனமும்.

விலை அணா 4.

1935.





ACC No 36136



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்துருத்தி - இந்திரபீடம்
ஸ்ரீ கரபாத்திர சுவாமிக ளாதீனத்தின் வழிவந்த
ஸ்ரீ. ஈசூர். சச்சிதாநந்த சுவாமிகளின்
திருவடித்தொண்டர்களுள் ஒருவராகிய
39.ஆவது பட்டாளம் சுபேதார் மேஜராயிருந்த
ஆத்மஞானி. ஸ்ரீ. ஐயாக்கண்ணு தேசிக மூர்த்திகளின்
பாதசேகரர்
தயாவிருத்தி பரிபாலனம்.
ஸ்ரீமத். தே. அ. சாமி குப்புசாமியவர்களியற்றிய

# விபூதி விளக்க மூலமும்,

திருப்போரூர். ஸ்ரீ. சிதம்பரசுவாமிக ளாதீனம்
பதினோராவது பட்ட மடாதிபதி
ஸ்ரீமத். திரு - சிவப்பிரகாச சுவாமிக ளெழுதிய

# விபூதி மஹாத்மிய வசனமும்.

இவை
ஆசிரியர். ஸ்ரீமத். கோ. வடிவேல் செட்டியா ரவர்களால்
பார்வையிடப்பட்டு,
ஷ ஸ்ரீமத். தே. அ. சாமி குப்புசாமி யவர்களின் திருவடித்
தொண்டர்களுள் ஒருவராகிய
புராணிகர்
காளத்தி. இ. சிதம்பரசாமி பாண்டியரால்

சென்னை. சுந்தரம் பிரஸில் பதிப்பிக்கப்பட்டன.
இரண்டாம் பதிப்பு.
1935

விலை ] [அணா 4.

முதற் பதிப்பு
1927-ஆவது வருடம்
பதிப்பிக்கப்பட்டது.

உ

சிவமயம்.

KOVILOOR ANDAVAR
A. No. 36136
LIBRARY, KOVILOOR

# சிறப்புப் பாயிரம்.

ஆசிரியர்.

## ஸ்ரீமத். கோ. வடிவேல் செட்டியா ரவர்களியற்றிய

### நிலமண்டில ஆசிரியப்பா.

நன்மை நம்மனோர் நன்குறு மாறு
தன்மய சங்கரன் சதுர்வே தாகமம்
சொன்ன முறையினைச் சுவாநு பவமா
இன்ன லொழிய விணக்கமா வறியாப்
பித்துறு மாந்தர் பித்தந் தெளியவும்
சித்த விகற்பந் தீரா துழல்வோர்
திடஞா னத்திற் றிரமா யுறவும்
அடற்புல னெறியி லார்வமாச் செல்வோர்
அனர்த்தமென் றதனை யையமற் றுணரவும்
முனர்த்த மெல்லா முரணற மாணவர்
இங்கித மாக வியலொ டுணரவும்
திங்களார் சடையன் றிருவரு ளதனால்
விளக்க மெட்டினை வியப்புறச் செய்தவன்
அளக்கரு குருஸ்தவ மன்பா வுரைத்தவன்
துன்மதி யுடையோர் தூய வருட்பெற
நன்மதி தீப நவையறச் சொற்றவன்
எங்குந் தானா மென்றருள் செய்த
சங்கர சற்குரு தாரணி யோருய
அமைத்த பீட மநேக மவற்றுள்
இமைத்தலில் விழியவ ரென்றும் போற்றும்
இந்திர பீடத் தெழிற்குரு வாகிச்
சுந்தரர் கரபாத் திரசா மிகளின்
மரபினில் வந்த மாணவர் பலரே

அவர்தாம்

கரவு நெறியினைக் கனவினுங் காணாத்
தத்தாத் திரேய சற்குரு நாதரும்
சித்தாய் விளங்கிய செங்கம லன்னெனும்
மெய்ஞ்ஞான தேசிக விமல தேவனும்
பொய்ஞ்ஞா னத்தைப் போக்கிச்சித் தாய
முத்தைய சுவாமியென் முழுதுணர் ஞானியும்
மித்தையென் றுலகை விளங்க வுரைத்த

சுப்பிர மணிய தேசிகோத் தமனும்
தப்பறு நாகைத் தயங்கரு ணுசல
சாமியும் பிறைசை சாரரு ணுசல
சாமியு மீசூர்ச் சச்சிதா நந்த
சாமியு மவனடி தாங்குமை யாக்கண் ணு
சாமியு மாவர் சற்குரு வாகிய
ஐயாக் கண்ணெனு மமல மூர்த்தியை
மெய்யாத் தனக்கு விமலதே சிகனுக்
கொண்ட வுத்தமன் குணமெலா நிறைந்தவன்
அண்டினே ரைவிடா வருஞ்சீ ராளன்
பன்னுதா னங்கள் பலவற் றினிலுயர்
அன்னதா னத்தை யணிகல ளுகப்
பூண்ட சீலன் பூமக ணட்புத்
தாண்டவ மாடுந் தன்மையன் சாமி
குப்பு சாமியென் கோமான் பலர்சொல்
செப்பினை யுடையான் றேகதே கிகளின்
பகுப்பினை யுணர்ந்த பரமமெய்ஞ் ஞானி
தொகுத்துவே தாந்த சொரூப முணர்ந்தவன்
மானத விகற்ப மாற்றிய பண்டிதன்
ஞானமா வனைத்தையு நன்ருக் காண்பவன்
வித்தையு ளுயர்ந்த வேதாந்த வித்தை
சித்தியா தற்குச் சிறந்தசா தனமா
உற்ற பத்தினு ளொன்றுவ தாகி
நற்றவர் பிணிக்கு நன்மருந் தாகிச்
சிவனுரு வதனிற் சென்மித்த தாகிச்
சிவனுரு வென்னத் திகழுவ தாகிச்
சமாதி நிட்டையர் சாத்துவ தாகிச்
சமாதி யாறுந் தருவ தாகி
முத்தர் யாவரு முத்திசா தனமெனச்
சித்த மகிழ்ந்து செப்புவ தாகி
விளங்கும் விபூதி மேன்மை யுணர்ந்து
களங்கமற் றியாவருங் கண்டணிந் துய்யப்
பன்னூ லாய்ந்து பளகிலா வாறு
நன்னூ லொன்று நாவலர் புகழக்
களக்கமில் வெண்பாக் கவினுர் வடிவில்
விளக்கமா விபூதி விளக்கமென் பெயரொடு
அழகு பத்து மமைந்து விளங்க
மழவிடை யுடையான் மாணருள் பெருக
மயற்றிரு கறுக்கு மாண்பின தாக
இயற்றிப் புகழெலா மிங்கேய்ந் தனனே.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சாத்து கவிகள்.

---

ஸ்ரீ ஜகத்குருபீடம்
நியாய சந்திரரும், வேதாந்த பாஸ்கரரும்,
ஸ்ரீ ஆத்ம புராண ஸ்ரீ பகவத்கீதா கூடார்த்த தீபிகை முதலிய
நூல்களின் மொழிபெயர்ப்பாசிரியருமாகிய
ஸ்ரீமத். மகாமண்டலேசுவர வீரசேகர
சுப்பைய ஞானதேசிகேந்திர சுவாமியவர்களியற்றிய
எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வேதகற் சிரங்கள் வியந்துரைத் துவக்கும் விபூதின் விதவித மாய
ஓதரு மகிமை யாவையுந் தொகுத்திங் குயர்விபூ தின்விளக் கமென
ஓதின னெவரு மெளிதினி னுணர வுயர்சுக நிறைவதா மோட்ச
சாதன மாக்ச் சாமியாங் குப்பு சாமியென் றிடும்பெரி யோனே.

---

ஸ்ரீ. ஈசூர். சச்சிதாநந்த சுவாமியவர்களின்
மாணவர்களுள் ஒருவராகிய
வேதாந்த ரத்நாகரம்
ஸ்ரீமத். பி. ஆறுமுக முதலியா ரவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

விபூதி மகத்துவத்தின் மேன்மையெலா மோர்ந்து
விபூதி விளக்கம் விதித்தா—னபூர்வமதாய்
நாமிங்கிச் சாதனத்தா னன்மையெலாங் கொள்ளைகொளச்
சாமிகுப்பு சாமி தக.

---

சிவரகசியப் பதிப்பாசிரியர். சென்னை.
ஸ்ரீமத். க. சதாசிவ செட்டியார் B.A. அவர்கள் எழுதிய
வசனம்.

ஸ்ரீமான். தே. அ. சாமி குப்புசாமியவர்கள் இயற்றிய "விபூதி விளக்கம்" என்னும் புத்தகம் வரப்பெற்றுப் பார்த்தேன்; அது பிரமாண சாஸ்திரங்களாகிய வேதாகம புராண இதிகாச ஸ்மிருதியாதிய எல்லா நூல்களும் விபூதியைப் பற்றிக் கூறும் விஷய ஸங்கிரமான ஒரு நூலாக விளங்குகின்றது. இஃதொழிந்த விபூதியைப் பற்றிய வேறு நூல்களெல்லாம் பார்க்கப்பட்டபோதும்

பின்னும் நூல்களைப் பார்க்கும் அவஸ்யமுண்டாகும். இந்நூலோ அப்படியன்றித் தன்னைப் பார்த்த பிறகு வேறு நூல்களைப் பார்க்கும் அவஸ்யமில்லாமற் செய்யும். இந்நூலின்கண் விபூதி எல்லா மதவாதிகளாலும் தங்கள் தங்கள் வழிபாட்டில் வேறு வேறு விதமாய்ப் பாராட்டப்பெறுஞ் செய்தி கூறப்பட்டிருப்பது போற்றத் தக்கது; ஸரீர சம்பந்தமாகிய இம்மை பூதியம் ஆன்ம ஸம்பந்தமாகிய மறுமைபூதியம் என்னும் இரண்டையும் விபூதி பயப்பது என்பது காட்டப்பெற்றிருக்கின்றது; பரமேஸ்வர ஸ்ருஷ்டியில் நெற்றி ஊர்த்வமாயல்லாமல் திரியக்காய் அமைந்திருப்பது திரிபுண்டர தாரணத்திற்கெனக் காட்டியிருப்பது நல்லாராய்ச்சியின் பாற்பட்டதெனக்கூற ஆக்ஷேபமில்லை. வேறு பல கூறியென்ன ? இவர் இந்நூலைப் பல நூல்களைக் கற்றுக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து பெற்ற அநுபவத்தா லெழுதினரென வறிகிறேன். அன்றியும், இவர் இந்நூலை முதற்பாவாகிய வெண்பாவினல் அநாவஸ்யமாகிய அடைமொழியின்றித் தனித்தனிக் கருத்துக்கள் முடிவுபெறுமாறு இயற்றியிருப்பது சாதாரணமாகிய புலவர்கள் செய்யக்கூடாத கார்யமாகக் காணப்படுகின்றது. இந்நூல் என்றும் நின்று நிலவுமாறு இறைவனைப் போற்றுவேன்.

---

சென்னை. கீழ்ப்பாக்கம். ஸீ. எஸ். எம். கர்ல்ஸ் ஐஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

## ஸ்ரீமத். கொ. இராமலிங்கத் தம்பிரானவர்களியற்றிய

### பதினன்கு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மாற்றருந் தனிமை யானவோர் நெறியில்
வயங்குபொற் கிழியடைந் தாங்கு
மகிழ்தரும் விபூதி விளக்கமென் றரும்பேர்
மாட்சியுற் றுளிர்தரப் புனைந்தே
ஆற்றல்சால் மாயை வன்றலை மிதிக்கு
மறிஞர்க டிருவடி பரவி
யருள்பெறு சாமி குப்புச்சா மிக்கோ
னற்புத நூலினை யளித்தான்
சாற்றரு மந்த விபூதியுற் பத்தி
தரித்திடுந் தகைமைமற் றதனைத்
தரணியி லமைக்கும் வகையுட னணிவோர்
தாவறப் பெறுந்திருப் பேறு
கூற்றினைக் கடக்கச் செய்யத னாற்றல்
குலவுற வினிதியங் குதலாற்
கோதிலா விந்நூற் சீர்த்திமுற் றுரைக்கக்
கூறுமச் சேடற்கு மரிதே.

வித்துவான். சென்னை. வண்ணையம்பதி

## ஸ்ரீமத். வ. சே. சேஷாசல கிராமணியா ரவர்களியற்றிய

பன்னிருசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சங்கரர் வழியுப ரிந்த்ரபீ டக்குரவன்
தத்தாத்தி ரேயனருள்கூர்
தன்னொளி கெடாதசெங் கமலசா மியினடி
தழுவுமுத் தையசாமி
தங்குமன முளசுப்ர மண்யதே சிகசாமி
சார்நாகை யருணசல
சாமியன் புறுபிறைசை யருண சலச்சாமி
தண்ணளி மேவுமீசூர்த்
துங்கசச் சிதாநந்த சாமிநற் சீடனுந்
தூவையாக் கண்ணுசாமி
சொற்பய னுய்யுஞ் சாமிகுப் புச்சாமி
தொன்மறைகள் பன்னுமுறையே
பொங்குசீர் விபூதிவி ளக்கநூல் சொற்றனன்
பொற்புறந் நெறிபுல்லினோர்
பொறுமையுட னொருமைபடு வெறுமைமன துரிமைகொளும்
புனிதமுறு சாமிதாமே.

---

திருமயிலை. செந்தோம் ஹைஸ்கூல்

தமிழ்ப் பண்டிதர்

## ஸ்ரீமத். ம. செல்வநாத முதலியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சிவநேசச் செல்வ ரெல்லாந் திருநீற்றின் பெருக்க வீறு
பவநேசப் பற்ற றுப்பான் பரிவுடன்கொண் டுய்வ தற்கே
யவநேசஞ் சற்று மில்லா வருணெறியை யகத்தி லோர்ந்து
தவநேசர்க் கன்பு செய்யுஞ் சாமிகுப்புச் சாமி வள்ளல்

வேறு.

நயன் றருநற் பொருளாகச் சான்றோர்க ணவில்விபூதி விளக்க மென்ன, வியன் றருபற் பலநூல்கள் மொழிகின்ற மேன்மைவிதி பயன ளித்தல், செயன்முறைக ளொருங்கி லங்கச் செறித்தொரு நூற் றிருவருளாற் சிறக்கச் சொற்று, னியற்றவதன் மான்மி யத்தை யியம்பநனி யெவ்வெவர்க்கு மிறும்பூ தாமால்.

தென்பட்டினம்.

**ஸ்ரீமத். பொ. மீநாட்சி சுந்தரனார்**

M. A; B. L; DIP. EC; வித்துவான்.

சென்னை ஜில்லாக் கல்விச்சபை அங்கத்தினர் அவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

ஓதி யுணர்ந்தவா றுண்மைவடி வானன்வி
பூதி விளக்கம் புகன்றனனால்—பூதியெலாம்
பெற்றானெஞ் சாமிகுப்புச் சாமியெனும் பேர்பெற்றான்
கற்றார் புகழ்ந்துரைக்கக் கண்டு.

---

வித்துவான். சென்னை. இராயபுரம்

**ஸ்ரீமத்· சிந்நய நாயகரவர்க ளியற்றிய**

நேரிசை வெண்பா.

ஏரார் விபூதி விளக்க மெனு நூலைப்
பாரா தரித்துப் பரித்துய்யச்—சீராகச்
சாமிகுப்பு சாமியெனுஞ் சற்குணனன் றுத்தர்,தான்
நாமிதனைப் போற்றுவதே நன்று.

---

பெங்களூர். சென்ஜோசப் காலேஜ் மாஜி தமிப்பண்டிதர்

**ஸ்ரீமத்· தரங்கம்பாடி. சபாபதிப் பிள்ளையவர்களியற்றிய**

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

**மா**லொடு வானோர் மகிழ்ந்துரை செய்யு மணமவிர் விபூதிநல் விளக்கம், நூலொடு பழகி நுண்ணறி வாய்ந்த நுவலரு மெய்யடி யார்க்குப், பாலொடு கலந்த தேனமு தென்ன பகாரும் பசியநற் றமிழால், சாலொடு வெண்பாப் பாவினிற் குப்புச் சாமிநன் கியற் றின னம்மா

---

சைவ சித்தாந்த மகா சமாஜப் போஷகரிலொருவராகிய

பண்டித ரத்தினம்

**குகஸ்ரீ. புழலை. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்**

(மிராசுதார், செம்பியம், பிரம்பூர்.)

இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

**வே**தசிவா கமச்சிறப்பாய் விளங்குதிரு நீறணிந்து வியந்து போற்றும், மாதவரு தியர்மகிழ வருள்புரியும் விமலனடி மறவா தார்க்கிங், காதரவா யுறுகின்ற விபூதிவிளக் கந்தன்னை யன்போ டேத்துஞ், சாதனமா யுயர்தேனும் பேட்டைவரு சாமிகுப்புச் சாமி சொற்றான்.

---

சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத்
தமிழ்ப்பேராசிரியர்
ஸ்ரீமத். மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்
இயற்றிய
நேரிசை வெண்பா.

மின்னும் விபூதி விளக்கமென வோர் நூலைத்
துன்னுந் தமிழிற் சுவைகொழிக்கப்—பன்னுஞ்சீர்ச்
சாமிகுப்புச் சாமித் தமிழ்ப்புலவன் செய்தமைத்தான்
ஆமிதற்கொப் புண்டோ வறை.

---

பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர்
ஸ்ரீமத். கா. ர. கோவிந்தராஜ முதலியா ரவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பெரும்பொரு ளடக்கி யாடி பிறங்குறக் காட்ட லேபோல்
அரும்பொருள் விபூதி மாண்பை யழகுறத் தொடுத்துத் தந்தான்
விரும்புறு வகைவி பூதி விளக்கமென் பெயரான் மேன்மை
தருமொரு சாமி குப்புச் சாமியாம் புலவ்ன் மாதோ

---

ஸ்ரீமத். திருவருட் பிரகாச வள்ளலார் மரபு
காஞ்சிபுரம். ஸ்ரீமத். நிச்சல இராமாநந்த சுவாமிகளின் பாதசேகரர்
ஸ்ரீமத். கா. நிச்சல-சொரூபா நந்தமணியவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

வெய்ய வினைக்குறும்பை வீட்டிக் கதிகாட்டு
மெய்யாம் விபூதி விளக்கமது—வையமிசைத்
தானருளி வாழ்வித்தான் சாமிகுப்பு சாமியெனு
ஞான சிகாமணியிக் நாள்.

---

சம்பத்கிரி பிரமபீடம்-ஸ்ரீ. அச்சுதானந்த சுவாமிகளின் பாதசேகரர்
வித்துவான் - வல்லம்.
ஸ்ரீமத். வைத்தியலிங்கம் பிள்ளை யவர்களியற்றிய
நேரிசை யாசிரியப்பா.

தொடுகட லுடுத்த நெடுநில வைப்பிற்
சொல்வள முதலாம் பல்வளம் பராய
தேனும் பேட்டை யானுத் தவத்தி
னற்பயன் போலும் பொற்புறப் போந்தோ
னங்கப் பன்றரு தங்கப் புதல்வன்

கற்ற பயனுங் கழிநற் பிறவி
பெற்ற பயனும் பெரிதீண் டெய்த
விந்திர பீடத் தெழிலின் மேவிய
சச்சிதா நந்த தனிப்பெருங் குரவன்
மரபின் மலியுந் திரமுறு ஞான
பானுவா மெனத்தகு தானிகர் தலைவன்
மையறு மாதவத் தையாக் கண்ணு
தேசி கோத்தமன் றிருவடி மலரைத்
தன்முடிக் கணிந்து மன்னிய மறையின்
வாக்கிய வழியாற் போக்கரு பொருளாந்
தன்னை வினவித் தவாத முயல்வின்
வஞ்ச மனத்துச் சஞ்சலந் தபுத்து
மெய்யினைத் துணிந்த பொய்யில் புலவன்
தாளாற் பெற்றன தக்கார் தமக்கு
வேளாண் மைக்கெனும்வியன்மொழி யுணரா
வற்றவ ராகி யுற்றவர்க் கினிய
உண்டியே யுடையே யுள்ளிய பிறவே
நாளு மளிக்கு நன்முகில் போல்வான்
நாத்திகம் பேசி ஞாலத் துழல்வார்
உண்டொரு பொருளதைக் கண்டவர்க் கன்றி
யுய்யுமா றில்லை யோதிய வப்பொருள்
திருவருள் பெறுதற் கொருபெருஞ் சாதனம்
பூதியே யென்னும் புனித முறையும்
அத்தகு நீற்றை யாக்கு மியலும்
புனைதரன் முதலாந் தனைநிகர் விதியும்
அன்னைதன் மகவுக் கின்னமு தூட்டும்
பான்மையி னையப் பாடறப் புனைந்து
வித்தக விபூதி விளக்கமென் றொருநூல்
நல்கின னம்ம நயந்து
சாமி குப்பு சாமியே தகவே.

---

குடியேற்றம்-முனிசிபல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும்,

வேதாந்த தர்க்க போதகா சிரியருமாகிய

ஸ்ரீமத். கா. ஆ. செங்கல்வராய முதலியாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

சீர்பசும ஜாபால சேருபநி டத்திலுள
ஏர்பொருளை யீங்குரைத்தா னேமமுறக்—கார்பொருவும்
அங்கப்ப னீன்ற வரியகுப்பு சாமியாஞ்
சங்கப் புலவனிகர் சாது.

---

ஆசிரியர். ஸ்ரீமத். கோ. வடிவேல் செட்டியாரவர்கள்
மாணவருளொருவரும்
வேலூர்-ஊரீஸ் காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய

## ஸ்ரீமத். கி. வேணுகோபால நாயக ரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

**தி**க்கவனுஞ் சாமிகுப்பு சாமியென்பா னன்களித்தான்
மிக்க விபூதி விளக்கமதை—யொக்கவே
மாசீறு மாசீறு மாண்பெனவு மற்றணியில்
தீசீறு சீருந் தெளிந்து.

---

மதராஸ் பியராபீஸ் டிராபிக் ஓவர்சீயராயிருந்த
மதுரைத் தமிழ்ச் சங்கத்து வித்துவான்
மோசூர் - முனிசாமி முதலியாரவர்கள் குமாரரும்,
சென்னைப் பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப் பண்டிதராயிருந்த
பிரசங்க சூளாமணி
ஸ்ரீமத். க. வ. திருவேங்கட நாயடவர்கள் மாணவரும்,
சென்னைச் சிவனடியார் தலயாத்திரைச் சங்கத்தின் தலைவருமாகிய
ஆயுர்வேத தமிழ்ப்பண்டிதர்

## ஸ்ரீமத். மோசூர்-சண்முக முதலியாரவர்களியற்றிய

நிலமண்டில வாசிரியப்பா.

**சீ**ர்திருத் தூருத்தி கேத்திரத் தமர்ந்த
பேர்கர பாத்திரன் பேரருள் பெற்றோன்
இலக்கிய விலக்கண மியல்வே தாந்தம்
சொலற்கரி தாகிய தோமில் தருக்கம்
நலத்தகு சாத்திர நன்றாய்க் கற்றோன்
வலமுறு ஞானம் வகையா யெவர்க்கும்
திரமுட னுரைக்குந் திடவே தாந்தி
அரனடி யவரை யவனெனப் பணிவோன்
மெச்சிடு பேறோ டிச்சக முலவிய
சச்சிதா னந்த சாமியின் சரணம்
அடைந்த வையாக் கண்ணனு மமலன்
படர்ந்த பதந்தொழும் பண்பிற் சிறந்தோன்
நல்லறந் தன்னை நடத்திக் காட்டும்
இல்லற ஞானி யிவனென வாழ்வோன்
பண்டைநாட் டொடங்கிப் பாவலர் பரவும்
தொண்டைநாட் டிலகுந் தொல்பதி தேனும்
பேட்டையி லுதித்துப் பேரரு ளாகுங்

கோட்டையி லோங்குங் கோதறு சீமான்
அற்புதங் காட்டி யறியவே யாரும்
உ0. சொற்பதங் கடந்த தொல்லோன் புகழை
விம்மித மென்றே விள்ளவே பாவால்
தம்மத நிறுவிய சமய குரவர்கள்
பசுமரத் தாணி படியு மாறெனக்
கசிவுட னூட்டிய கவின்பெற் றோங்கும்
உரு. ஆதி பகவ னருட்டிரு மேனியிற்
சோதி யுடன்பூத் தொளிரும் விபூதி
விளக்கந் தன்னை விளம்பிட யாரும்
களக்க மறவே கழறின னம்மா
நேமி போற்று நேர்மையிற் சிறந்த
௩0. சாமி குப்பு சாமிநா வலனே.

---

சென்னை - பிரசங்கபானு

## ஸ்ரீமத். கா. இராஜாராம் பிள்ளையவர்க ளியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சிவநெறிக்கு வித்தாகித் திகழ்வதுநீ றெனச்சுருதி செப்பு மாற்று
லவநெறியோ ரறியாவி பூதிவிளக் கம்மெனப்பே ரமையு நன்னூல்
தவநெறியிற் றவறுத சாமிகுப்பு சாமியெனுந் தக்கோ னின்று
பவநெறிவிட் டலகோங்கத் தந்துதவி னுனன்ற பரிவி னம்மா.

---

பிரசங்க சூளாமணி ஸ்ரீமத். க. வ. திருவேங்கட நாயடவர்களின்

மாணவர்களிலொருவராகிய

திருத்தணிகை

## ஸ்ரீமத். சண்முக முதலியாரவர்க ளியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

எம்மருங்குந் திருநீற்றி னொளிவிளங்க வேண்டுமென வெழுந்த ஞானச், செம்மனத்தால் விபூதிவிளக் கம்மதனைச் செய் தளித்த செம்மை சான்ற, அம்மைநலம் பழுத்தொளிருஞ் சாமி குப்புச் சாமியவ னருந்தவத்தை, இம்மையுல கெத்திசையும் புகழ்ந் திடுமா விதன்பெருமை யிசைக்கற் பாற்றே.

---

சென்னை - கார்பொரேஷன் ரிடைர்ட் சானிடெரி இன்ஸ்பெக்டரும்
தியாகராய செட்டி இந்து செகண்டரி வித்தியாசாலைத்
தமிழ்ப் பண்டிதருமாகிய

## ஸ்ரீமத். ஏ. சொக்கலிங்கம் பிள்ளை யவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அளக்கலிலா வருட்பரம னடியார்கட் கறுசுவையோ டன்ன தானந்
தளர்ச்சியிலா மனங்களித்து நிதம்வழங்குஞ் சாமிகுப்புச் சாமி வள்ளல்
களக்கமிலாப் பொதுநடத்தன் றிருமேனி தனிலொளிருங் கவின்வி பூதி
விளக்கமெனு நூலியற்றி வியனுலகோர் பயன்பெறநல் விருந்திட் டானால்

---

க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபரும்,
தோ. சா. த. ப. சபைக் காரியதரிசியுமாகிய

## ஸ்ரீமத். த. விஜயதுரைசாமி கிராமணியா ரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சூரியனற் குலசத்தி ரியன்சொலுங்கா சிபகோத்ரன் சுத்த வாக்யன், வீரியனு மேனுநி நாதன்றன் வம்மிசத்தில் வந்த வேந்தன், நேரிலதாய் விளங்குதிரு வெண்ணீற்றி லளக்கவொணு நேயம் வைத்தோன், பாரிதனிற் பெரும்புகழான் சாமிகுப்புச் சாமியெனும் பாவல் லோனே. (1)

அன்னதா னப்பலனை யறிந்தவரி லிவன்முதல்வ னகிலந் தன்னில், கன்னனெனுங் கொடையாளன் காணரிய சுவாநுபவங் கைவந் துள்ளான், மன்னுபுகழ் விபூதிவிளக் கந்தனையிவ் வுலகினர்க்கு வழங்க வந்தான், இன்னவன்றன் பெருமையகி யரசாலுஞ் சொலற்கரிதே லென்னு லாமோ. (2)

---

வித்துவான் ஸ்ரீமத். அ. சா. ஜெகராவ் முதலியாரவர்களின்
மாணவர்களுள் ஒருவராகிய

## ஸ்ரீமத். வி. மு. இராமசாமிப்பிள்ளை யவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

உளக்கரிசு போக்கு முரஞ்சேர் விபூதி
விளக்கமது கண்டார் விரும்பி—அளக்கரிய
நேமிபுக ழில்லறத்தி னிற்குந் துறவியராம்
சாமிகுப்பு சாமியென்பார் தாம்.

மருங்காபுரி - சமஸ்தான வித்துவான்
ஸ்ரீமத். ஏகை. சிவசண்முகம் பிள்ளை யவர்களின் குமாரரும்
தமிழ்ப் பண்டிதர்
ஸ்ரீமத். கோ. இராமலிங்கத் தம்பிரா னவர்களின் மாணவருமாகிய
ஸ்ரீமத். ஏகை-சிவராஜம் பிள்ளை யவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திரைசாமி யுயர்வெண்டா மரைசாமி யிருவருக்குந் தெரியார் கொன்றை, விரைசாமி யமர்துருத்தி நகரிந்த்ர பீடத்து மிளிர் பொன் னென்றே, உரைசாமி யெனுங்கரபாத் திரசாமி தேசிகனு முயரா தீன, நிரைசாமி யுயர்சச்சி தானந்த சாமிதவம் நிலைக்குஞ் சாமி. (1)

யாரென்னி லவனையாக் கண்ணுசாமி யவன்கணெ னு மருமா ணுக்கன், பேரென்னிற் றயாவிருத்தி சாமிகுப்பு சாமியெனும் பெருமை யாளன், சீரென்னிற் பூதிருத்தி ராக்கமணி யணியு மெய்யன் றிறத்துட் சொல்லும், சீரென்னிற் சிவசிவவென் றுரைக்குநா வோனுளத்திற் கிளர்ச்சி கொண்டு. (2)

நீக்கமற நிறைகின்ற பேரொளியா யெவ்வுயிர்க்கு நிறைந்து ஞான, வூக்கமுறக் கருணைவளம் சொரிகின்ற சிவபெருமா னுடலிற் பூத்த, தேக்கியசீர்த் திருநீற்றின் மகிமையெலா மொருங்குணர்ந்து திரட்டி யிந்நாள், நோக்கியசீர் வெண்பாவிற் பண்பாக வியற்றியதை நோக்குங் காலை. (3)

மன்னுசிவ னடியார்செய் மாதவத்தின் பயனெனவே மாண்பு வாய்ந்து, தன்னுசைவ நெறியனைத்து மெளிதின்மிகப் படித்துணரத் துலங்குஞ் சொற்கள், பன்னுதமிழ்ப் புலவரெலாங் களிதுளும்பப் பத்தழகும் பயின்று தோன்ற, வுன்னுமறை விபூதி யெனும் விளக்கநூல் விளக்கமுற வுரைத்திட் டானால். (4)

---

சென்னை - தண்டையார்பேட்டை
ஸ்ரீமத். த. சி. சிங்காரவேல் கிராமணியா ரவர்களின் குமாரர்
ஸ்ரீமத். த. சி. கங்காதர கிராமணியா ரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

தீய விருவினைக டீய்த்தே வழகளித்துத்
தூய மனதாக்கித் தொண்டரொடும்—சேயன்
பிரியத் திருவடிசேர்ப் பிக்குமுளத் தெண்ணற்
கரிய விபூதிவிளக் கம். (1)

ஞானப்பா லுண்டுபெற்ப நன்மைசொனூர் சம்பந்தர்
தானப்பா லின்றிநனி சாற்றினரால்—வானப்பால்
தாங்கொளிசே ரத்வைத சாமிகுப்பு சாமியவர்க்
கீங்கொப்பா ரிவ்வமைய மில். (2)

---

சி. அப்துல் ஹக்கீம் நடுத்தரப் பாடசாலைத்
தமிழ்ப்பண்டிதர்
சென்னை - தண்டையார்பேட்டை

ஸ்ரீமத். ம. மாசிலாமணி கிராமணியா ரவர்களியற்றிய

நேரிசை யாசிரியப்பா.

திங்கள் சூடிய திருமுடி நேர்மையுந்
திருந்திய வாறு சமயமும் புரக்க
வானன மாறுடைத் தேவனை யீந்த
விதமுறு வனச வதனத் தூய்மையு
மமிர்த மோர்பா லோர்புடை நஞ்சங்
கலந்த காட்சியுங் காண்டகு நூபுர
வொலியுட னெண்டொடி யொன்றிய கோலமும்
பதிபசு பாசம் பகர்ந்திடு சூலமுங்
குண்டலி சத்தி குறிக்கும் பாந்தளுந்
தஞ்சமென் றோர்க்குத் தகுந்தகு மென்றே
யெஞ்சா தெடுத்த குஞ்சித பாதமும்
மன்றயினி லோது மந்திர நாத
னின்றென மற்றவர் கொன்றை சூடியுங்
கள்ள மில்லா ருள்ளத் தொளிரும்
பசுபதி பார்வதி பதிமால் விடைபதி
கருங்குழல் வெண்ணகைச் செய்யவாய்ப் பச்சிள
வம்மையின் கேள்வ னெம்மையாள் பரமன்
மாற்றிலா மேனியி னெழுதிரு நீற்றின்
பெருமை யாரணம் பகர்ந்தவா-றின்று
தொகுத்தும் வகுத்து முதற்பா வதனுன்
வித்துவர் போற்றும் விபூதி விளக்கமென்
றறிவினை யோரா வசட்டுப் போலி
வேதாந் திகளெனும் வேழங் குலையவுந்
தலைவ னில்லாத் தறுக ணாளக்
காகங் கதறவுங் கண்டோ னியாரெனின்
நன்னூ லாய்வு நல்லோ ருறவும்
புலவோர் போற்றும் புலமையுந் தூய்மையுஞ்
சதுர மறைசொல் லரிய சைவமும்
வள்ளுவர் நூலை யுள்ளினர் யார்க்கும்
வளங்கெழு செல்வம் வழங்கு முதாரமு

மெண்ணு மந்திர மெல்லா மன்ன
மந்திரந் தன்னின் மயங்குவ போலச்
சொல்லரு மெண்ணான் கறனி னல்ல
பொன்னுல குய்க்கு மன்ன தானமும்
வரையா தளிக்கும் வளமையுங் கொண்ட
கற்றோர் களிக்குங் கல்வி யாள
னீன்றோ ருவக்குஞ் சான்றோர் திலகன்
சென்னைக் கணிகல னென்னுந் தெய்வப்
பெருமாள் பேட்டை வாழுஞ்
சாமி குப்பு சாமிபா வலனே.

---

சென்னை - தண்டையார்பேட்டை

ஸ்ரீ. பால சந்த்ர விநாயகர் தேவஸ்தான தர்மகர்த்தராயிருந்த

ஸ்ரீமத். த. காத்தலிங்க கிராமணியார் குமாரர்

ஸ்ரீமத். த. க. கங்காதர கிராமணியா ரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நிலம்பூத்த நகர்க்கெல்லா மரசையுறு சென்னைநகர் நீடு வாழ்வோன், குலம்பூத்த பிறப்பொழுக்கங் கல்வியறி வியற்கைநலங் கூடப் பெற்றோன், தலம்பூத்த சாமிகுப்பு சாமியெனுந் திருநாமந் தகவாப் பூண்டோன், நலம்பூத்த வீடுதரு விபூதிவிளக் கம்மெனு நூ னயந்திட் டானால்.

---

I had the rare opportunity of going through **"the Viboothi Vilakkam,"** a small booklet in about 180 stanzas by **Sreeman T. A. Swamy Kuppusamy.** The author of this little book sketches in brief outlines the origin, the classification, and the achievements of Viboothi.

Assuming on the part of the readers some acquaintance with Viboothi, the author endeavours to place before us well exposed a few problems of the deepest interest that remain unreveaｌed however much we confine our attention to any one of them. He deals at great length with the innumerable blessings that are conferred upon one by its use, and he quotes instances of its inscrutable powers and miraculous workings.

In fine, the book is of immense value to every Saivaite and he, who strictly adheres to the principles and methods prescribed in the book for the use of Viboothi, will certainly continue to gain in graces with the Almighty the Giver of all good. He

will not only be crowned with glory in this world but is sure to attain all those blessings that await the faithful in the world to come. May the Almighty crown the author of this work with prosperity in life and success in similar undertakings so that he may be enabled to produce many more works of the like nature, thus enriching still more the large and beautiful collection of Saivaite Literature.

4th October, 1926 }
TONDIARPET, }
MADRAS. }

T. S. UMAPATHY GRAMONY,
Senior, B. A., Class,
PACHAYAPPAS' COLLEGE, MADRAS.

௸ ஆங்கில மொழிபெயர்ப்பு.

ஸ்ரீமத். சாமி குப்புசாமி அவர்களியற்றிய சுமார் 180 பாக்க ளடங்கிய "விபூதிவிளக்க" மென்னுஞ் சிறுநூலைப் பார்வையிடும் பாக்கிய மெனக்குக் கிடைத்தது. நூலாசிரியர் இதன்கண் விபூதியின் தோற்றம், வகை, பயன் முதலியவற்றை மிகத்தெளிவாக விளக்குகிறார்.

வாசகர்களில் விபூதியின் மகிமையை யொருசிறிதாவது உணராதா ரிராரென வோர்ந்து, எவ்வளவு முயன்றாலும் எளிதில்தெரிந்து கொள்ளக்கூடாத பல நுண்ணிய உண்மைகளைத் தெளிவாக விளக்குந் திறன்சாலப் போற்றத்தகுந்தது. விபூதியின் மகிமையைப் பற்றியும்; அதன் தெய்வீகத் தன்மையைப் பற்றியும்; அதை யணிவோர் பெறும் பேற்றைப்பற்றியும் வெகு விரிவாகக் கூறுகின்றார்.

சுருங்கக் கூறுமிடத்து; இந்நூல், ஒவ்வொரு சைவனுக்கும் இன்றியமையாததாகும். விபூதியணியவேண்டிய முறைகளை இந்நூலிற் கூறியவண்ணம் அனுஷ்டானத்திற் கொண்டுவருபவன் இம்மண்ணுலகில் இறைவன் கடாக்ஷத்தை மென்மேலும்பெற்று வாழ்வதன்றி, விண்ணுலகத்தும் சிறப்பெய்துவானென்பது திண்ணம். இந்நூலாசிரியருக்குச் செல்வத்தையும், இத்தகைய முயற்சிகளில் வெற்றியையுந் தந்து, இன்னதன்ன பலநூல்களைச்செய்து, சைவவுலகத்திற்கு அளிக்குமாறு எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவாராக.

இங்ஙனம் :

த. சே. உமாபதி கிராமணி,
பி. ஏ. வகுப்பு,
பச்சையப்பன் கலாசாலை,
சென்னை.

சென்னை, }
தண்டையார்பேட்டை, }
4—10—1926. }

---

இந்நூலாசிரியரின் திருவடித் தொண்டர்களுள் ஒருவராகிய
பிரசங்க சிந்தாமணி

**ஸ்ரீமத். த. கோவிந்தசாமிப் பிள்ளையவர்களியற்றிய**

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

**ஈ**சனுரு வினிற்பூத்தே யிலங்குதிரு வெண்ணீற்றை யெவரு மெய்யிற், பூசிமல மகன்றுய்ய விபூதிவிளக் கம்மெனு நூற் புகன்று னன்பர்க், காசகனல் லனநல்கிச் செவ்வேளை யகமுகமா யாண்டும் போற்றுங், தேசுநெறி யெனக்கருளுஞ் சாமிகுப்பு சாமியெனுந் தேவன் மாதோ.

---

திருமயிலை ஸ்ரீ. ஏனாதிநாத நாயனார் குருபூஜா
பரிபாலன சங்க காரியதரிசி

**கொண்ணூர்·ஸ்ரீமத். ம· ரா· சுந்தரமூர்த்தி கிராமணியா ரவர்களியற்றிய**

நேரிசை வெண்பா.

**தி**றலாப் புனைவோர் சிவமாகச் செய்யும்
விறலார் விபூதி விளக்க—வறநூலைச்
சாமிகுப்பு சாமிவள்ளற் றந்தா னுலகினர்க்குப்
பூமியிடைக் கண்டநிதி போல்

---

புராணிகர். தேவாரம்.
ஸ்ரீமத். சி. சம்பந்த முதலியாரவர்களின் மாணவரும்
வித்தியாவதானம்
ஸ்ரீமத். பிரம்பை. பொன்னுவேற் பிள்ளையவர்களின் சகோதரரும்
இந்நூலாசிரியரின் திருவடித் தொண்டர்களுள் ஒருவருமான
புராணிகர். தேவாரம்

**ஸ்ரீமத்.பிரம்பை. அப்பாதுரைப் பிள்ளையவர்களியற்றிய**

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

**பொ**ன்னென வொளிருஞ் சடையுடைச் சிவன்றன் புனித நற் சொரூபமே யாகி, முன்னெலாப் பொருளு நல்கிடும் வேத முடிமிசை யிலகுவ தாகித், தென்னெலா மளிக்குஞ் சைவசா தனத்திற் றிகழ்முதற் சாதன மாகிப், பன்னெலா மறுவுக் கும்முயி ராகிப் பாரெலா மிளிர்வது நீறே. (1)

**அ**த்தகை நீற்றின் மான்மிய மனைத்து மணுவுக்குள் கடலடைத் தாற்போல், வித்தக வெண்பா வினிலமைத் தொருநூல் விபூதிவி ளக்கமென் பெயரால், இத்தல முய்ய நல்கின ரவர்தா

மெவரெனி லியம்புவல் கேண்மோ, சித்துருச் சாமி சிவகா ருண்யஞ் செனித்திடுந் தானமாஞ் சாமி. (2)

**ந**ற்றவர் கற்றவ ரற்றவர் தமக்கு நயந்தன மளித்திடுஞ் சாமி, செற்றமில் சாமி பற்றிலாச் சாமி செந்தமிழ் வளர்த்திடுஞ் சாமி, உற்றவென் குடும்பந் தாங்கிடுஞ் சாமி யுண்மையே யுரைத்திடுஞ் சாமி, சற்றுமே பொறியிற் சார்ந்திடாச் சாமி சாமிகுப்பு சாமி யென் பாரால். (3)

---

இந்நூலாசிரியரின் திருவடித்தொண்டர்களுள் ஒருவராகிய

புராணிகர்.

### காளத்தி - இ. சிதம்பரசாமி பாண்டியரியற்றிய

நேரிசை யாசிரியப்பா.

**பொ**ன்னு ருலகின் மன்னு ருயிர்கள்
திருநீற் றின்சீர் தெரிந்து புனைந்து
சிந்தையு மொழியுஞ் செல்லா நிலையதாம்
அந்தமி லறிவா நந்தமாய் மிளிர
ஈசனுர் ஞான வெழிலுருப் பூத்ததாய்
மறைச்சிர மதனி லுறையும் பொருளதாய்ச்
சைவசா தனத்துள் தலைச்சா தனமதாய்
மந்திர மனைத்தையு முந்து முயிரதாய்
விளங்கு நீற்றின் களங்கமி லுற்பவம்
அருணீ றுலகினுக் கணைந்த முறைமை
வெண்ணீற் றின்வகை விளக்குந் தகைமை
பூதி யாலயம் புரியு மியல்பு
நீற்றைச் சிவமாப் போற்றும் பெற்றி
பற்ப மிடுங்காற் பகரு மந்திரம்
தனித்திரி புண்டர தாரணச் சேவ்வி
பொற்றிரி புண்டரம் புனையுங் காரணம்
ஆமயத் தானீ ருற்றுங் கருத்துச்
சார மணியத் தக்க தானம்.
பசித மதனைப் பரிந்திடு மளவு
ஓமநீ றதுசெய் வோரெலா மிலைதல்
திருநீ றிடாதார் தீயோ ரென்னல்
தெருணீ றணிந்த தெளிஞ ரிவரெனல்
பூதி புனையார் புவியி லிலையெனல்
நீறணி வார்பெறும் பேறள வின்றெனல்
பற்பம் பூசுநர் பரமனே யென்னல்

புண்ணிய தூடணம் பண் ணுவா ரிவரெனல்
நீற்று மான்மிய நிகழ்த்தற் கரிதெனல்
அறநீர் குடைபய னளிக்குநீ றென்னல்
ஆதிய வாய வநந்த விடயம்
விளக்கும் விபூதி விளக்கமென் றொருநூல்
ஈந்தன ரவரெவ ரென்னிற் சாற்றுவன்
இந்நிலந் திருத்த முன்னவ தரித்த
சங்கரர் முதலாஞ் சாதுக் களைப்போல்
அவதா ரஞ்செய் சிவமாஞ் சொரூபர்
தம்மிடை வதியுஞ் சற்சன ருடைய
கருது டைத்திடுந் திருத்து ருத்தி
இந்திர பீட மெழிற்கர பாத்திர
சாமியா தின சச்சிதா நந்த
சாமி யருளாற் சாமிதா னுக
மெய்யா மிளிர்ந்த வையாக் கண்குரு
பாத சேகரர் காத லகன்றோர்
கருணையிற் சிபியெ னுங் காவல னொப்பார்
பொறுமையிற் றரும பூபதி போல்வார்
தகுமெய் யுரையரிச் சந்திர னுவார்
பனுநீ தியினின் மநுவை நேர்வார்
தன்னறி வின்பிற் சனகனை யுறழ்வார்
அன்னங் கறியுட னளாய்ப்பரிப் பண்டியில்
ஏற்றிப் புவிமா தெழிலுடற் கிழிபட
வீதிக டோறு மெல்லச் செலுத்திச்
சோறிலா தேங்கிச் சோர்ந்து கிடக்கும்
அந்தகர் முடவ ரழுதொழு நோயினர்
மூகர் வெதிரர் முதிய ராதுலர்
உள்ள மகிழ வுண்டி யளிப்பதில்
இளைசை மாறற் கிணையா நிற்போர்
தெய்வப் புலமைத் திருவள் ளுவரருள்
திருக்குற டன்னி லொருகுறட் பாவைப்
பதவுரை சுருக்கிப் பகர்கருத் துரையொடு
மனனஞ் செய்தே வழுவா துரைத்தால்
ஓரணு வளிப்பதா வுலகிற் குணர்த்தி
எத்தனைப் பாக்க ளியாவரொப் பிக்கினும்
அத்தனை யணுக்களு மப்போ தேதரும்
வித்தக வள்ளற் சித்துரு வானோர்
பேயினுங் கடைப்படு பீழையே னுய்ய
சேயினும் பரிந்து சீரடி தந்த
தாயினு மினிய தயாள
சாமி குப்பு சாமிசற் குருவே.

உ

சிவமயம்.

# முகவுரை.

---

## நிலமண்டில வாசிரியப்பா.

**மா**தவர் நால்வர் மலரடி வணங்கி
வானும் வையமும் வாய்மை நிலைமை
உய்த்துணர்ந் தின்ப வுருவின ராம்படி
ஆன்ற வறிவனு மறுமுகச் சிவத்தின்
அவதா ரமதா வகிலத் தெழுந்து
மூன்றும் வயதினின் முதல்வனைப் பாடிய
ஞானசம் பந்த னல்லடி போற்றி
பொய்யுரை நூல்சில புகலு மமணராம்
களைகளைந் தறிவாங் கதிர்ப்பயிர் வளர்த்த
நாவுக் கரசுதா ணளினம் பணிந்து
சிவசுந் தரத்திற் றிகழ்ந்தவ தரித்த
சுந்தர மூர்த்தி சுவாமியின் பதமலர்
சந்தத நெஞ்சிற் சிந்தனை செய்து
கோதிலா ஞானங் குருந்த நிழற்கீழ்
வாதறக் கொண்ட மாணிக்க வாசகர்
தீதறு திருவடி சென்னியின் மிலைந்து
வேதத்தி னுண்மை விளக்கிய விமல
சங்கரன் பாத பங்கய மிறைஞ்சி
ஈசனை ஞானியை யிருவே றுருவாய்
எண்ணு தபேதமா யுண்ணினைந் துருகும்
புண்ணியர் தாண்மல ரெண்ணி வழுத்திப்
பூதியைச் சிவமெனப் போற்றிய ணியாது
சோதி யற்றுச் சுகநிலை யறியாக்
கோதுழன் மாக்கள் குவலயந் தன்னில்
பூதியே சிவமெனப் புகழ்ந்து புனைந்தே
அடையப் பரனரு ளாரிய சிவமென்
அகத்திடத் திருந்துபெய் யருளத னுலே
விபூதி விளக்க விமலநூ றந்தேன்
அதனுள் விபூதி யரிய வுற்பவம்
அத்திரு நீற்றி னவிர்தொகை வகைவிரி
பூதி புனையும் போதுசொன் மந்திரம்
உயர்நூல் கிளத்து முத்தூ ளனவிதி

# முகவுரை.

திரிபுண் டரதா ரணத்தின் றிகழ்முறை
அயனுதற் படைத்தமை யருணீ றிடற்கெனல்
பூதிமுக் குறியாய்ப் புனைவதன் காரணம்
நீற்றின்முக் குறிக்கு நிகழ்த்ததி தேவதை
பூதிகோ மயத்தினாற் புரிதரு காரணம்
திருநீ றணியச் செப்பிய தானம்
விபூதி மான்மியம் விளம்பு நூல்கள்
மறையவர் யாவரு மகத்துநீ றணிதல்
சீவன் முத்தர்கள் திருநீ றணிதல்
பசித மகியைப் பகருஞ் சரிதைகள்
எழினீ றில்லா விடமே யிலையெனல்
சிவனு நீறுஞ் சிவணு முறைமை
நீற்றுக் காயா நெருப்பே சிவமெனல்
விபூதி யணிவதால் விளையும் பயன்கள்
வேதாந் தியாயினோர் வெண்ணீ றணிதல்
பூதி தூடணம் புரிதரு காரணம்
நினைப்பு மறப்பிலார் நீறணி யாமை
நீறணி யார்க்கு நேருந் துன்பம்
திருநீ றிடாதார் தின்பன விடமெனல்
முதலிய விடய முதனூற் கியைய
அமைந்துள வதனை யறுமுகச் சிவனார்
விருப்பொ டமர்ந்த திருப்போ ரூரின்
அழகமை பதினோ ராவது பட்ட
மாதி பதியாய் வதியுமா தவனும்
சிவப்பிர காச தேசிக னாரும்
திருவெலா மலியுஞ் சென்னைமா நகர்வளர்
இந்து தியலா ஜிகலைஸ் கூலின்
தன்னிக ரில்லாத் தமிழ்ப்பண் டிதனா
விளங்குங் கோவடி வேற்பெரு மானும்
ஆய்ந்து பிழைகளைந் தளித்தன ரவர்தம்
அடியிணை யகத்துவைத் தல்லும் பகலும்
துதித்து வணங்கித் தொல்வினை போக்கி
எழிலறி வுருவா விருப்பனெஞ் ஞான்றுமே.

இங்ஙனம்,
☞ தே. அ. கு.



திருத்துருத்தி. இந்திரபீடம்.

ஸ்ரீ. கரபாத்திர சுவாமிக ளாதீன வழிவந்த,

ஸ்ரீ. பிறைசை. அருணாசல சுவாமிகளின் மாணவர்

ஸ்ரீ. சச்சிதாநந்த சுவாமி.



திருத்துருத்தி. இந்திரபீடம்.
ஸ்ரீ. கரபாத்திர சுவாமிகளாதீன வழிவந்த,
ஸ்ரீ. ஐயாக்கண்ணு தேசிகமூர்த்திகளின் மாணவர்
ஸ்ரீமத். தே. அ. சாமி குப்புசாமி.



திருத்துருத்தி. இந்திரபீடம்.
ஸ்ரீ. கரபாத்திர சுவாமிக ளாதீனவழிவந்த,

ஸ்ரீ. ஈசூர். சச்சிதாநந்த சுவாமிகளின் மாணவர்
ஸ்ரீமத். ஐயாக்கண்ணு தேசிகமூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

  

# விபூதி விளக்கம்.

## பாயிரம்.

---

### விநாயகக் கடவுள் வணக்கம்.

நேரிசை வெண்பா.

ஓங்கார ரூப வொளியா யுலகெங்கு
நீங்காச் சொரூப நிசவடிவாய்—ஓங்கும்
வளக்கை யிபமுகனை வாழ்த்திவி பூதி
விளக்க முரைப்பேன் விழைந்து. (௧)

### சொரூப வணக்கம்.

வாக்குமனக் கெட்டாத வத்துவாய்ப் பூரணமாய்த்
தேக்கறிவா யின்பந் திகழுருவாய்—யாக்கைநோக்
கின்றி விளங்குகின்ற வென்னிடத்து மாறாமல்
என்று மிருப்பே னினிது. (௨)

### சுப்பிரமணியக் கடவுள் வணக்கம்.

ஆதிபரஞ் சோதிவிழி யைந்தொன்றி லாறுபெறும்
சோதியுரு வாய்மேவுந் தூயகுரு—நாதனடி
போற்றிப் பணிந்துவி பூதி விளக்கநூல்
சாற்றுவனற் றண்டமிழாற் றான். (௩)

கந்தப் பெருமான் கழலிருழுத வக்கணமே
எந்தப் பவமு மிரிவதனல்—சந்ததமும்
போற்றியுள் ளேகொண்டு புண்ணியவெண் ணீற்று நூல்
சாற்றுவே னேற்றமுறை தான். (ச)

பரமசிவக்கடவுள் வணக்கம்.

உமையோடு கூடி யுலகைப் புரக்க
அமையும் பரமசிவ ஞர்தம்—இமையார்
பதமலரைப் போற்றியான் பற்ப விளக்கம்
விதமுறச்சொல் வேனுல் விழைந்து. (ரு)

பார்வதி வணக்கம்.

விருப்புவெறுப் பற்றூர்க்கு வீட்டை யளிக்கும்
பொருப்பரசிப் பார்வதியின் புண்ய—அருக்கமறு
வில்லா ரடியை விபூதிவிளக் கம்பகரச்
சொல்லாத் துதிப்பேன் தொடர்ந்து. (சு)

நடராசர் வணக்கம்.

பொன்னம் பலத்திற் பொருந்தி நடமாடும்
இன்னம் நடராச ரெந்தையடி—நன்னயமாய்
எத்திவி பூதி விளக்க மெனுநூலை
நாத்திகழச் சொற்கிற்பே னன்கு. (எ)

திருமால் வணக்கம்.

வேதப் பொருடான் விளங்க வெவர்க்குமே
ஏதமின்றிக் கண்ணனு விங்குரைத்த—நாதனடி
போற்றிவி பூதி விளக்கம் பொருந்துமா
சாற்றுவேன் சாத்திரமாத் தான். (அ)

இலக்குமி வணக்கம்.

அழுக்கா றுடையாரை யாதரவு செய்யா
முழுத்தா மரைமலராள் மெய்தாள்—வழுத்தியான்
வித்தகவி பூதி விளக்க நவின்றிடுவேன்
புத்தமுத மென்னப் புரிந்து. (கூ)

திருஞானசம்பந்த சுவாமிகள் வணக்கம்.

பன்னு திரு நீற்றுப் பதிகநன் னீற்றன்பு
மன்ன வுலகில் வழுத்தியருள் — முன்னவன்றாள்
மென்மனத்திற் கொண்டே விபூதிவி ளக்கநூல்
நன்னயமாச் சொல்வேனிந் நாள். (௧௦)

திருநாவுக்கரசு சுவாமிகள் வணக்கம்.

பேருடற்சேர் சூலைப் பிணியைத் திலதவதி
யாரளித்த வெண்ணீ றணிந்தகற்றும் — பேரறிவார்
பூவடியைப் போற்றிவி பூதி விளக்கம்வெண்
பாவதனாற் சொல்வேன் பரிந்து. (௧௧)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வணக்கம்.

சித்தவட மாமடத்திற் சேர்ந்தரனார் தாள்சூட்டக்
கைத்து மறுத்தக் கடவுளரு — ளைத்தரித்த
நாவலூ ராரடியை நான்றொழுது பூதியியல்
ஆவலுடன் சொல்லுவே னால். (௧௨)

மாணிக்கவாசக சுவாமிகள் வணக்கம்.

வெண்ணீ றணியாத வீணர்தமக் கஞ்சுவனென்
றண்ணீர்மை யான்முன் னுரைத்தருளும் — புண்ணியராம்
மாணிக்க வாசகர்தாள் வந்தித்து நீற்றுறுதி
பேணிப் பகர்ந்துறுவேன் பேறு. (௧௩)

திருமூலநாயனார் வணக்கம்.

நீற்றுக்கா தாரமாய் நின்ற பசுக்கடமைப்
போற்றியருண் மெய்ஞ்ஞான புண்ணியராம் — நாற்றிசையும்
ஏற்றுதிரு மூல ரிணைத்தாட் பணிந்தன்பாச்
சாற்றிடுவேன் சாந்தவியல் சார்ந்து. (௧௪)

திருவள்ளுவ நாயனார் வணக்கம்.

செய்யதமிழ் வேதத் திருவள் ளுவரடியை
ஐயமறச் சேவித் தறைகுவேன் — மையலற
நீற்று விளக்கநூ னீணிலத்தோ ரெந்நாளும்
போற்றிப் பணியப் புனைந்து. (௧௫)

### அல்லமதேவர் வணக்கம்.

எத்திக்கு நின்றேத்து மேகபரி பூரணநல்
வத்துவா மல்லமதே வன்னடியை—நித்தம்
துதிபுரியும் புண்ணியத்தாற் றாயதிரு நீற்றின்
விதிமுறையாற் சொல்வேன் விழைந்து. (கசு)

### வசவதேவர் வணக்கம்.

மாசார் புறச்சமய வல்லிருளை நீக்கியருள்
தேசார் வசவேசர் சீரடியை—யேசார்ந்து
விள்ளுவன்வி பூதி விளக்கநூ லெல்லவரும்
கொள்ளவே செந்தமிழிற் கூர்ந்து. (கஎ)

### மாநந்தி பராயணர் வணக்கம்.

மாநந் திபரா யணரடியை வந்தித்துள்
ஆநந்த மெய்தி யரன்பூதி—மானம்
விளங்கவி பூதி விளக்கநூல் சொல்வேன்
களங்கமிலா நூல்பலவுங் கண்டு. (கஅ)

### சங்கராசாரிய சுவாமிகள் வணக்கம்.

சங்கையறத் தன்னையறி சாதனமெ லாம்புகன்ற
சங்கரா சாரியனார் தாள்பணிந்து—பங்கமற
நீற்று விளக்கநூ னீணிலத்தோ ருய்யவே
சாற்றுவே னூன்முறையிற் றான். (கக)

### நாணல் - சிவப்பிரகாச சுவாமிகள் வணக்கம்.

வல்லசொரு பாநந்த வள்ளற் குபதேசம்
சொல்லிமெய்ஞ் ஞானச் சுடர்கொளுத்தும்—எல்லையிலா
சீராரு நாணற் சிவப்பிரகா சற்பணிந்
தேரார்நீற் றுண்மையுரைப் பேன். (உ௦)

### சொரூபாநந்த சுவாமிகள் வணக்கம்.

சொரூபசா ரம்புகலுந் தூயவறி வாய
சொரூபாநந் தன்றாட் டுணையைப்—பரிவின்
இருதயத்திற் சிந்தித் தெழினீற்று நூலைத்
திருவருளாற் செய்வேன் றெளிந்து. (உக)

### தத்துவராய சுவாமிகள் வணக்கம்.

திருநீற்றின் மேன்மைத் திறம்பணிக்கு மிந்நூல்
விரிநீ ருலகில் விளங்க—வரமருளும்
வித்துவ ராய வியன்ஞா னியரேத்தும்
தத்துவ ராயர்திருத் தாள். (உஉ)

### பட்டினத்துச் சுவாமிகள் வணக்கம்.

பரசிவமாய் நின்றொளிரும் பட்டினத்தார் பொற்றாள்
திரஞான மில்லாச் சிறியன்—அரியமனம்
வைத்துமே புண்ணியநூல் வாகாப் புகலுவனால்
பத்தியுற ஞாலம் பரிந்து. (உங)

### பத்திரகிரி சுவாமிகள் வணக்கம்.

பல்கலைக ளோதும் பசிதவிளக் கம்புகலச்
சொல்விற் பனமளித்துத் தூய்தாக்கச்—சொல்லுத்
தரகிரி வில்லானற் றாளிணைபோற் றும்பத்
திரகிரியார் பொற்பதத்தைத் தேடு. (உச)

### துறைமங்கலம்-சிவப்பிரகாச சுவாமிகள் வணக்கம்.

மண்ணுலகி லல்லமதே வன்சரிதை யைத்தமிழில்
நண்ண வருள்செய்த நங்குருவாம்—எண்ணுதுறை
மங்கலசி வப்பிரகா சன்மலர்த்தாள் வாழ்த்தியே
இங்குரைப்பே னிந்நூ லினை. (உரு)

### ஞானக்கூத்த சிவப்பிரகாச சுவாமிகள் வணக்கம்.

கல்லை றெழுந்து கடலை முனமுண்ணச்
சொல்லேர் மருவுந் துறைசைவாழ்—எல்லார்
சிவப்பிரகா சப்பெருமான் சேவடியைப் போற்றி
உவப்புடனிந் நூலுரைப்பே னோர்ந்து. (உசு)

### சாந்தலிங்க சுவாமிகள் வணக்கம்.

சாற்றுவை ராக்ய சதகா தியநூலைப்
போற்றி யுரைத்த புனிதனுத்—தோற்றுமெஞ்
சாந்தலிங் கேசனார் தண்ணருளா னீற்றுநூல்
தீந்தமிழிற் செய்வேன் றெளிந்து. (உஎ)

குமாரதேவர் வணக்கம்.

சாத்திரங்க ளீரெட்டுந் தந்து பழமலைக்கண்
ணுத்திகழ்கு மாரதே வன்னடியை—யத்தியே
வெண்ணீற்று மேன்மை விளக்கும் விளக்கநூல்
உண்ணீர்மை யாற்புகல்வே னோர்ந்து. (உஅ)

திருப்போரூர் - சிதம்பர சுவாமிகள் வணக்கம்.

நிதம்பணிபோ ரூர்ச்சந் நிதிமுறையைத் தந்தே
பதம்பணியென் மேற்கருணை பாலித்—திதஞ்செய்
சிதம்பரதே வைப்பணிந்து செப்புவனீற் றுண்மை
அதம்படவெம் பாவமெலா மற்று. (உகூ)

தாயுமான சுவாமிகள் வணக்கம்.

வண்டமிழ லங்கல் வனைவாரைச் சோதியான்
இண்டைமலர் சூடுகம் பீசனெனப்—பண்டுரைத்த
தாயுமா னூர்தஞ் சரணிறைஞ்சி யிந்நூலை
ஏயுமா சொல்வே னியைந்து. (௩0)

செம்பாக்கம் - பொன்னம்பல சுவாமிகள் வணக்கம்.

பன்னம் பலமுண்டு பன்னுசெம் பாக்கம்வாழ்
பொன்னம் பலக்குரவன் பொன்னடியைச்—சென்னிவைத்துப்
பொன்போல விவ்வுலகம் போற்றுமா புண்ணியநூல்
இன்னே யிசைப்ப னியைந்து. (௩க)

திருவாரூர் - தட்சணமூர்த்தி சுவாமிகள் வணக்கம்.

சித்திமுத்தி வேண்டினர்க்குச் சித்த முவந்தளிக்கும்
முத்தனுந் தட்சண மூர்த்திசரண்—நித்தியவி
பூதி விளக்கம் புகலவென் னுள்ளிருந்
தோதி யளிக்கு முவந்து. (௩உ)

ஈசூர் - சச்சிதாநந்த சுவாமிகள் வணக்கம்.

வாதித்துக் கற்றவர்பான் மன்னுபன் னூற்றந்த
ஓதுசச்சி தாநந்த வுத்தமனின்—போதத்
திருவடியைப் போற்றித் திருநீற்றின் சீர்த்தி
அருமைதனைச் சொல்வேனிங் கார்ந்து. (௩௩)

ஆத்துமஞானி - ஐயாக்கண்ணு சுவாமிகள் வணக்கம்.

மெய்யைப்பொய் யாக்கியே மீண்டுமெனை மெய்யாக்கும்
அய்யாக்கண் ணுமென் னருட்குருவை—மெய்யா
உளக்கமலத் தேநிறுத்தி போதுவனு னீற்று
விளக்கநூ றன்னை வியந்து. (௩௪)

மரபு வணக்கம்.

இந்திரபீ டத்தரசா மென்றைகர பாத்திரனர்
தந்தவழி வந்த தவத்தினரைச்—சிந்தித்துப்
பூதி விளக்கப் புனிதநூல் யாவர்க்கும்
ஓதி பளித்தே னுவந்து. (௩௫)

நூற்காரணம்.

ஞாலஞ்செய் புண்ணியத்தா னற்சிவனு ரென்னுளத்தில்
சாலக் குடியிருந்து தன்னுருவே—மாலற்ற
பூதியெனக் காட்டிப் புகலெனவே சொற்றனன்வி
பூதிவி ளக்கம் புகழ்ந்து. (௩௬)

அவையடக்கம்.

பூதியணி வாரைப் புராந்தகனுக் கொண்டியான்
கோதி லவரடியைக் கும்பிட்டுப்—பூதிப்
பெருமை யுரைப்பனதைப் பேதுற் றிகழார்
இருமை வகைதெரிந்தோ ரிங்கு. (௩௭)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பொன்மதி யுடையார் முன்வி பூதிமா விளக்கஞ் சொல்லல்
நன்மதி யாகா தேனு நாதனு ராடப் பேய்கள்
மன்னிநின் ருடி னுற்போன் மலமறு நாயே னன்பால்
சொன்னநூ லீதென் றோர்ந்து குகளற வுட்கொள் வீரே. ()

பாயிரமுற்றிற்று.

# நூல்.

---

## எடுத்த விடய மீதேன விளம்பல்.

வேதாந்த மென்று விளம்பு முபநிடதம்
ஓதாவி பூதி யெனவுரைக்கும்—மாதார்ந்த
பாகன்மெய்ந் நீற்றுற் பவமா தியவெடுத்
தேகமனத் தாலியம்பு வேன். (க)

## சிவசின் னங்களைத் தேர்ந்தெடுத் தோதல்.

பரம சிவனமலன் பத்தர்க்குச் சின்னம்
உருவுடலிற் கண்டியுநீ றும்மென்—னுரையால்
சிவநேசச் செல்வர் திருநீறு மிட்டுத்
தவமார்த னன்றென்னச் சாற்று. (உ)

## விபூதி வகை :—ங.

(க) சிவாக்கிநி விபூதி, (உ) வைதிகாக்கிநி விபூதி,

(ங) சைவாக்கிநி விபூதி.

பன்னுஞ் சிவாக்கிநி பற்பநல் வைதீகம்
என்னக் கிநிபற்ப மின்பமாத்—துன்னுசை
வாக்கிநியாம் பற்பமென வண்பூதி மூன்றாக
வாக்குறுதி செய்யு மறை. (ங)

## சிவாக்கிநி விபூதி வகை :—உ.

(க) குருபற்பம், (உ) லகுபற்பம்.

சொற்பெறுமிப் பூதியினுட் டோன்றுஞ் சிவாக்கிநியாம்
பற்பங் குருபற்பம் பன்னுலகு—பற்பமென
ஓதுமிரண் டாமிவற்று ளோங்கு குருபற்பம்
ஈதெனச்சொல் வேணு லெடுத்து. (ச)

(க) குருபற்பம் (மகாபற்பம்).

அக்கினிசொ ரூபருமா யவ்வக் கினிகரராய்
அக்கினிபூ தேசருமா யார்ந்திலகும்—மிக்க
சிவமே குருபற்பஞ் செப்புலகு பற்ப
விவரமெடுத் தோதுவனுன் மேல். (ரு)

(உ) லகு பற்பம் (பற்பம்).

அதன் வகை இரண்டு.

(க) நிருபாதிக விபூதி (இயற்கைநீறு).

(உ) உபாதிக விபூதி (செயற்கைநீறு).

பன்னுலகு பற்பநிரு பாதிகவு பாதிகமா
மன்னுமவை யேயியற்கை வண்செயற்கை—சொன்ன
இயற்கைநீ றீச னெரிமேனி தன்னில்
உயக்கொளத்தா மேபூத்த தும். (சு)

(க) நிருபாதிக விபூதி.

ஊழிவெள்ள நீரா யுயரண்ட மண்டபமா
ஏழுலகும் வேதிகையா வீண்டும்பர்—சூழவியாய்ச்
சீவர்களே நற்பசுவாச் செய்யநுதல் குண்டமாய்த்
தீவிழியே யக்கினியாய்ச் சேர்த்து. (எ)

ஈசன் புரியு மியாகத் தெழுநீற்றைத்
தேசம் புகழுமுச் சீவர்மல—மாசறுமா
றெண்ணித்தன் மேனியினி லிட்டநீ றும்மெனவே
மண்ணிற் சொலுமாக மம். (அ)

(உ) உபாதிக விபூதி.

இயற்கையா நீற்றி னியல்புரைத்தா மீண்டு
செயற்கையா நீற்றின் றிறத்தை—வியக்க
நிகமா கமத்தி னெறியே யுரைப்பன்
மிகுமா தரத்தின் விரித்து. (கூ)

ஆதிம காசிருட்டி யாரம்பத் தெம்பரமன்
சோதியுரு வாம்பரையைத் தோற்றுவித்—தோதும்
சிருட்டிமுத லைந்தொழினீ செய்யென் றருள
அருட்டிகழன் னுளமைறகு வாள். (௧0)

ஐந்தொழிலை யான்செய் யளவி லிடையூறு
வந்தணுகா வாறு வரமுதவி—உந்தம்
இலச்சினை யேதேனு மெற்கருள்க வென்றே
சொலச்சிவனு மன்பு சுரந்து. (௧௧)

வண்ணச்சி வாக்நி வடிவிற்பூத் தோங்குநீ
றெண்ணிலா வான்மாக்க ளெய்தவே—உண்ணினைந்து
சத்யோசா தாதிவத னத்துமண் ணாதியவாம்
தத்துவங்க ளைந்தினையுந் தந்து.

சத்யோசாதாதி வதனம்: சத்தியோசாதம், வாமம், அகோரம், தற்புருஷம், ஈசானம் என்னும் ஐந்து முகங்கள்.

மண்ணாதியவாந் தத்துவங்கள்: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்கள். (௧௨)

தந்தவத் தத்துவங்க டம்மி னிவர்த்திமுதல்
ஐந்து கலைக ளருளவதில்—நந்தையொடு
பத்திரை நற்சுரபி பன்னுசுசீ லைச்சுமனை
இத்தகைய வைம்பசுக்க ளேய்ந்து.

நிவர்த்திமுதல் ஐந்து கலைகள்: நிவர்த்திகலை, பிரதிஷ்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை என்பனவாம். (௧௩)

வந்தன வாலவற்றின் வண்ணந்தை யோகபிலை
சிந்தனை செய்பத் திரைகருமை—சந்தச்
சுரபிநிறம் வெண்மை சுசீலை புகையாம்
அருஞ்சுமனை செம்மைநிற மாம். (௧௪)

இந்நிறப்ப சுக்களெலா மெங்கள் சிவபெருமான்
சந்நிதியின் மேவிடபத் தைச்சூழ்ந்து—மன்னுவதைத்
தேர்ந்தரன் றன் மேனித் திருநீற் றினையன்பு
கூர்ந்தெறிய நந்தியுமுட் கொண்டு. (௧௫)

சிவப்பிர சாதமெனச் சேவனமே செய்தத்
தவப்பூதி யைக்கோமா தாக்கள்—உவப்புற்றுத்
தாங்கவே விந்தாய் தரவவைக ளேற்றதனை
ஆங்கோ மயத்தினடை வாய்.

சேவனம்செய்தல்—புசித்தல். கோமாதாக்கள்—நந்தை முதலிய ஐம்பசுக்கள். (கசு)

விபூதிபசி தம்பசுமம் வெண்சாரம் ரக்கை
அபூர்வநீ றைந்து மருளச்—சுபாவமா
அந்நீற்றைத் தந்நுதற்கண் ணாரவணிந் தெஞ்சியதை
நந்நுதலு மைக்கீந்து நன்கு.

சுபாவம்—நல்லெண்ணம். (கஎ)

ஈதுனக்கி லச்சினையா மென்றருள வாங்கிநுதன்
மீதணிந் தைந்தொழிலின் மேவினளால்—ஓததனைப்
பின்னு மரிபிரமர் பெற்றணிய நல்கியே
இன்னிலமஃ தேற்ப வியைந்து.

இலச்சினை—முத்திரை (அடையாளம்). ஐந்தொழில் :—சிருட்டி, திதி, சம்மாரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியங்கள். (கஅ)

விருப்பினு லீசன் வியன்பசுக்கா ணீவிர்
திருப்பாற் கடலிற் செனித்துத்—தரைப்பால்
சின்னு ளிருந்திங்குச் சேர்க வெனப்பணிக்க
மன்னு வினங்கண் மகிழ்ந்து. (கசு)

தேவா சுரர்கள் திருப்பாற் கடல்கடைநாள்
தாவாவப் பாற்கடலிற் றூந்தோன்றிப்—பூவாழ்ந்து
தம்மினக் கோக்களினைத் தாலத்தின் கட்பரப்பித்
தம்முலகிற் றங்கினவாற் சார்ந்து.

ஈண்டுத் தம்முலகென்றது மகாகைலாசத்தின் ஒருசார் விளங்கும் கோபுரத்தினை. (கோ—பசுக்கள், புரம்.தங்குமிடம்.) (உ0)

ஈசனைந் தானனத் திற்பிறந் தங்கத்தில்
தேசுறுமுப் பான்மும்மைத் தேவர்குழாம்—வாசமாய்
மன்பசுமேன் மையாக மத்துஞ் சௌனகரின்
வன்சரிதத் தானு மதி. (உக)

ஆதிம காசிருட்டி யாரம்பத் தெம்பரமன்
சோதியுரு வாம்பரையைத் தோற்றுவித்—தோதும்
சிருட்டிமுத லைந்தொழிலீ செய்யென் றருள
அருட்டிகழன் னுளறைகு வாள். (கo)

ஐந்தொழிலை யான்செய் யளவி லிடையூறு
வந்தணுகா வாறு வரமுதவி—உந்தம்
இலச்சினை யேதேனு மெற்கருள்க வென்றே
சொலச்சிவனு மன்பு சுரந்து. (கக)

வண்ணச்சி வாக்ரி வடிவிற்பூத் தோங்குநீ
றெண்ணிலா வான்மாக்க ளெய்தவே—உண்ணினைந்து
சத்யோசா தாதிவத னத்துமண் ணாதியவாம்
தத்துவங்க ளைந்தினையுந் தந்து.

சத்யோசாதாதி வதனம் : சத்தியோசாதம், வாமம், அகோரம், தற்புருஷம், ஈசானம் என்னும் ஐந்து முகங்கள்.

மண்ணாதியவாந் தத்துவங்கள் : பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்கள். (கஉ)

தந்தவத் தத்துவங்க டம்மி னிவர்த்திமுதல்
ஐந்து கலைக ளருளவதில்—நந்தையொடு
பத்திரை நற்சுரபி பன்னுசுசீ லைச்சுமனை
இத்தகைய வைம்பசுக்க ளேய்ந்து.

நிவர்த்திமுதல் ஐந்து கலைகள் : நிவர்த்திகலை, பிரதிஷ்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை என்பனவாம். (கந)

வந்தன வாலவற்றின் வண்ணந்தை யோகபிலை
சிந்தனை செய்பத் திரைகருமை—சந்தச்
சுரபிநிறம் வெண்மை சுசீலை புகையாம்
அருஞ்சுமனை செம்மைநிற மாம். (கச)

இந்நிறப்ப சுக்களெலா மெங்கள் சிவபெருமான்
சந்நிதியின் மேவிடபத் தைச்சூழ்ந்து—மன்னுவதைத்
தேர்ந்தரன்றன் மேனித் திருநீற் றினையன்பு
கூர்ந்தெறிய நந்தியுமுட் கொண்டு. (கரு)

சிவப்பிர சாதமெனச் சேவனமே செய்தத்
தவப்பூதி யைக்கோமா தாக்கள்—உவப்புற்றுத்
தாங்கவே விந்தாய் தரவவைக ளேற்றதனை
ஆங்கோ மயத்தினடை வாய்.

சேவனம்செய்தல்—புசித்தல். கோமாதாக்கள்—நந்தை முதலிய ஐம்பசுக்கள். (கசு)

விபூதிபசி தம்பசுமம் வெண்சாரம் ரக்கை
அபூர்வநீ றைந்து மருளச்—சுபாவமா
அந்நீற்றைத் தந்நுதற்கண் ணரவணிந் தெஞ்சியதை
நந்நுதலு மைக்கீந்து நன்கு.

சுபாவம்—நல்லெண்ணம். (கஎ)

ஈதுனக்கி லச்சினையா மென்றருள வாங்கிநுதன்
மீதணிந் தைந்தொழிலின் மேவினளால்—ஓததனைப்
பின்னு மரிபிரமர் பெற்றணிய நல்கியே
இன்னிலமஃ தேற்ப வியைந்து.

இலச்சினை—முத்திரை (அடையாளம்). ஐந்தொழில் :—சிருட்டி, திதி, சம்மாரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியங்கள். (கஅ)

விருப்பினு லீசன் வியன்பசுக்கா ணீவிர்
திருப்பாற் கடலிற் செனித்துத்—தரைப்பால்
சின்னு ளிருந்திங்குச் சேர்க வெனப்பணிக்க
மன்னு வினங்கண் மகிழ்ந்து. (கசூ)

தேவா சுரர்கள் திருப்பாற் கடல்கடைநாள்
தாவாவப் பாற்கடலிற் ருந்தோன்றிப்—பூவாழ்ந்து
தம்மினக் கோக்களினைத் தாலத்தின் கட்பரப்பித்
தம்முலகிற் றங்கினவாற் சார்ந்து.

ஈண்டுத் தம்முலகென்றது மகாகைலாசத்தின் ஒருசார் விளங்கும் கோபுரத்தினை. (கோ—பசுக்கள், புரம்.தங்குமிடம்.) (உ0)

ஈசனைந் தானனத் திற்பிறந் தங்கத்தில்
தேசுறுமுப் பான்மும்மைத் தேவர்குழாம்—வாசமாய்
மன்பசுமேன் மையாக மத்துஞ் சௌனகரின்
வன்சரிதத் தானு மதி. (உக)

அக்கோ மயநீ றதுவே செயற்கைநீ
றிக்கா சினியி லிதுவன்றி—மிக்காரும்
வைதிகவி பூதி வளர்சைவ பூதியினை
ஐதினெடுத் தோதிடுவ மால். (௨௨)

### வைதிகாக்கினி விபூதி வகை:—௩.

(க) சிரௌதம்; (௨) ஸ்மார்த்தம்; (௩) லௌகிகம்.

### (க) சிரௌத விபூதி.

அதன் வகை இரண்டு

(க) புராதனி; (௨) சத்தியோசாதை.

வைதிக பூதி வளர்சிரௌ தம் ஸ்மார்த்தமொ
டெய்துலௌ கிக மெனமூன்றும்—உய்திபெறச்
சாற்றுஞ்சி ரௌதம்பு ராதனிசத் யோசாதை
தோற்றிருவ கையதெனச் சொல்,

**சிரௌதம்:**—சுருதி சம்பந்தம்; ஸ்மார்த்தம்—ஸ்மிருதி சம்பந்தம்; லௌகிகம்—உலக சம்பந்தம். புராதனி—இயற்கைநீறு; அஃதாவது அநாதியாயுள்ளநீறு; சத்தியோசாதை—புதுவது புதுவதாகத் தோன்றும்நீறு. (௨௩)

நாட்டும் புராதனியோ நான்முகன்செய் யாகபற்பம்
வேட்டசத்தி யோசாதை மேதினியில்—ஈட்டுமறை
அந்தணர்க ளாற்றக் கினிகோத்தி ராதியவாம்
செந்தழனீ றுமெனவே செப்பு. (௨௪)

### ௨. ஸ்மார்த்த விபூதி; ௩. லௌகிக விபூதி.

போற்றுஞ்சு மார்த்தம் புகன்மிருதி சம்பந்தத்
தாற்றக் கினிகோத்ர மார்நீறுச்—சாற்றுவரால்
ஊனமில் லௌகிக மோதுலக சம்பந்தம்
ஆனபச நாக்கினிநீ றும்.

பசநாக்கினி—மடைப்பள்ளி நெருப்பு. (௨௫)

## சைவாக்கிநி விபூதி வகை.—உ.

(க) சைவம்; (உ) அசைவம்.

சைவாக் கிநிபூதி சைவ மசைவமென
ஐவா யிரண்டா மவற்றினுள்—சைவவி
பூதிசத்தி பாதந்தான் பூணு கமநூற்றீட்
சாதியர்க்கு மேயுரித்தாஞ் சார்ந்து. (உசு)

(க) சைவ விபூதி.

காண்டந் திரமுறையிற் காசினிக்கண் ணேபுரியும்
தாண்டரிய தாம்லோக தர்மிணியும்—பூண்ட
சிவதர் மிணியுமாய்ச் செப்புமழற் றேன்றும்
நவமாரும் பூதியென நாட்டு. (உஎ)

சைவ விபூதியின் வகை மூன்று.

(க) கற்பம்; (உ) அநுகற்பம்; (ங) உபகற்பம்.

கருதுறுமப் பூதியெழிற் கற்பமநு கற்பம்
உரைசெயுப கற்பமென வோத—வருமூ
வகையா மவற்றின் வயங்கிலக்க ணங்கள்
அவையுமெ டுத்தறைகு வாம். (உஅ)

(க) கற்ப விபூதி.

பஞ்சப் பிரமமுறைப் பாலாவின் கோமயத்தைக்
கஞ்சவிலை யாலேற்றுக் கவ்வியத்தால்—எஞ்சா
திசையப் பிசைந்தக் கிநியிட் டெடுத்தல்
நசையாருங் கற்பமென நாட்டு. (உகூ)

(உ) அநுகற்ப விபூதி.

காட்டெருவைக் கோசலத்தாற் காணப் பிசைந்துலர்த்தி
மூட்டு மெரிக்கண்ணே முன்மநுவை—நாட்டி
எரித்தநீ றேயா மிசைக்குமநு கற்பம்
பரித்தணியப் போமே பவம். (நo)

### (௩) உபகற்ப விபூதி.

கானகத்தீச் சாம்பற்செங் கற்சூளைச் சாம்பலிவை
மேனவிற்று மந்திரத்தான் மிக்குறவே—ஆனைந்தால்
காணப் பிசைந்தெரிக் கண்ணெரித்த வெண்ணீறே
தாணுவுப கற்பமெனச் சாற்று. (௩௧)

### (௨) அசைவ விபூதி (அகற்பம்).

அசைவவி பூதி யகற்பமே யாகும்
இசைய வதனை யியம்பின்—அசையா
வலிசெ யெழின்மேகம் வாய்திறந் தாங்கே
ஒலிசெயிடி வீழுமிடத் தும். (௩௨)

மண்ணிடத்து மோங்கு மலைகளிடத் துந்தானே
நண்ணுதிரு வெண்ணீறு நாடியதை—எண்ணரிய
பஞ்சகலா மூலம் பகர்ந்தசுத்தம் போக்கியே
எஞ்சா தணித லெழில். (௩௩)

கற்பமநு கற்பமுப கற்பநல கற்பமெனச்
சொற்பெறுநாற் பாலதாந் தூநீற்றைப்—பொற்பினுடல்
தங்க வணிவார்க டம்பயனை யீதென்றே
இங்குரைப்பார் யாவ ரெடுத்து. (௩௪)

### மற்றும் ஐவகையாய் வரும்நீ றுரைத்தல்.

சத்யோசா தத்திற் சனிக்கும்வி பூதிவா
மத்திற் பசிதம் வழங்குமகோ—ரத்தினிலே
சாற்று மெழிற்பசுமந் தற்புருடத் திற்சாரம்
தோற்றீசா னத்திரக்கை சொல். (௩௫)

### ஐவகை விபூதியி னணிநிறம் கிளத்தல்.

பூதிநி றங்கபிலை பூண்பசித மோசருமை
ஓதும் பசும முயர்வெண்மை—தீதிலாச்
சார நிறம்புகையாஞ் சாற்றிரக்கை செம்மைநிறம்
சாருமென வேயெடுத்துச் சாற்று. (௩௬)

### ஐவகை பூதி யணிவதா லாம்பயன்.

பொன்னுதவும் பூதியிடர் போக்குமே நற்சாரம்
பன்னுபவம் பாற்றும் பகர்பசுமம்—மன்னும்
சிவப்பொருடேற் றும்ப சிதமிவ் வுலகை
உவப்பினிற்காக் கும்மிரக்கை யோது. (௩எ)

### ஐவகை பூதி யணியுங் காலம்.

நித்தியகன் மம்பூதி நைமித் திகம்பசிதம்
பைத்தபசு மங்கழுவாய் பன்னிரக்கை—முத்திக்காம்
சாரமெல் லாவினைக்குஞ் சாரு மெனநூற்கள்
ஆரவுரைக் கும்மீ தறி. (௩அ)

### கால நியதி கடந்திடின் தீதெனல்.

செந்நிறவி பூதி சிறப்பழிக்குஞ் சம்பத்தைப்
பொன்னிறவி பூதியது போக்குமே—துன்னும்
கருநிறநோய் காட்டுங் கலக்குமே யாயுள்
கருதுபுகை நீறெனவே காண். (௩கூ)

### விபூதி பாத்திர விதங்க ளுரைத்தல்.

மான்றோல் புலியின்றோல் வண்பட்டி னுலாம்பை
தேன்சார் சுரைவில்வத் தின்குடுக்கை—வான்புகழும்
பொன்னாதி யாஞ்சம் புடமட் கலங்கள்
என்னுமிவற் றென்றுமென் றெண். (௪0)

மலர்வாச மிட்டு வடித்ததிரு நீற்றை
நிலவவதிற் சேர்த்து நிதமும்—பலவகையாம்
தூபதி பங்காட்டித் தொன்மனுவாற் பூசித்துப்
பாபமற வேதரித்தல் பண்பு. (௪க)

### தோற்பை நைட்டிகர் துறவிகட் காமெனல்.

நாற்சந்நி யாசிகட்கு நைட்டிகர்க்கு மேதோற்பை
எற்குமிதன் வாய்வட்ட மெட்டாகத்—தோற்றங்
குலவகல மாநீளங் கூறுமுந் நான்காய்
இலகங் குலமெனமே யெண். (௪உ)

அக்கினிநீ திப்பற்ப மாதியெழு மந்திரத்தால்
மிக்கவபி மந்திரித்த வெண்ணீற்றை—ஒக்க
அணிவா ரவரை யகங்கசிந்து நோக்கிப்
பணிவார் பவம்போம் பறந்து. (௪௩)

### சுந்தர நீற்றின் மந்திர மீதேனல்.

பஞ்சப் பிரமம் பகர்திரி யாயுஷம்
அஞ்சக் கரந்திரி யம்பகமோ—டெஞ்சலிலா
மானஸ்தோ கேயாதி மந்திரத்தி னுனீற்றைத்
தானமறிந் திட்டுய்மின் சார்ந்து.

பஞ்சப் பிரஹ்மமந்திரம்—ஈசாநாதி ஐந்து மந்திரங்கள்.
அஞ்சக்கரமந்திரம்—ஸ்ரீ பஞ்சாக்ஷரம். (சச)

பன்னுமபி மந்த்ரமநு பஞ்சாத் திரங்கலேகள்
அன்னம் பிராசாதஞ் சொற்குடிலை—மன்னைம்
பிரமம்பஞ் சாக்கரமாப் பேசுமிவ் வேழும்
திருநீற்று மந்திரமாத் தேர்.

ஐம்பிரசாத மந்திரம்—சிவாஸ்திரம், வியோம அஸ்திரம், பாசுபதாஸ்திரம், க்ஷுரிகாஸ்திரம், அகோராஸ்திரம் என்னும் பஞ்சாத்திரமந்திரங்கள்.

குடிலைமந்திரம்—பஞ்சப் பிரணவ மந்திரங்கள்.
ஐம்பிரமந்திரம்—ஈசாநாதி ஐந்து மந்திரங்கள். (சரு)

### விபூதி விரத விதியைக் கிளத்தல்.

பூதி யதனைப் புகலாரி யன்றீக்கை
எதிற் றரவேயேற் றீசன—தோதுருவாய்ப்
போற்றியுத் தூளன புண்டர மாய்த்தரித்தல்
சாற்றும்வி பூதிவிர தம். (சசு)

### உத்தூ ளனவிதி யுண்மை யுரைத்தல்.

மந்திர நூன்முறையாய் வந்ததிரு வெண்ணீற்றை
ஐந்துசுத்தி செய்துமே யாரவபி— மந்திரித்துச்
சுத்தமுற மெய்யிற் றுதையும் படிபூசல்
உத்தூ ளனவிதியென் றோர். (சஎ)

### திரிபுண்டர தாரணத் திறத்தினைக் கூறல்:

புண்டரமி ரண்டிற் புகலூர்த் துவமொழித்துக்
கண்டதிரி புண்டரமாக் காணவே—கொண்ட
அநுலோ மவிலோமத் தானீ றணிவார்க்
கினிமேற் பிறப்பிலேயென் றெண்

புண்டரம் இரண்டு என்றது:—ஊர்த்துவ புண்டரம் திரிபுண்டரம் என்பவற்றை; இவற்றுள், ஊர்த்துவபுண்டரம்—மேனேக்கியிடும் குறி; திரிபுண்ட

ரம்—(திரி—மூன்று, புண்டரம்—குறி ;) விபூதியால் முக்குறியாகத் தரிக்கப்படுவதாம்; இதனைத் திரியக்புண்டரம் எனவுங் கூறுவர் ; [திரியக்—விலங்கு (மிருகம்), புண்டரம்—குறி;] விலங்கு குறுக்கு வடிவினதாகலின், அதுபோலக் குறுக்காக இடப்படும் குறி என்பது அதன் பொருளாம்.

அநுலோமம் விலோமம் என்பது:—அங்குஷ்டம், மத்திமை, அநாமிகை விரல்களை முறையே அகார உகார மகாரங்களாகப் பாவித்து, மத்திமை அநாமிகை என்னும் இவ்விருவிரல்களால் இடப்பக்கந்தொடுத்து முதல் ரேகை மூன்றாவது ரேகைகளை யிழுத்து, அங்குஷ்ட விரலால் வலப்பக்கந்தொடுத்து நடுரேகையை யிழுத்தலாம். இதனை அநுலோமப் பிரதிலோம தாரண மெனவும் கூறுவர்.

திருநீற்று முத்திரையாவது அங்குஷ்டம், மத்திமை, அநாமிகை என்னும் மூன்று விரல்களையும் ஒன்று சேர்க்குங்குறியாம். (சஅ)

நெற்றி படைத்தமை நீறணி தற்கெனல்.

நான்முகனந் நெற்றி நவிற்றிரியக் காகவே
என்படைத்தா னென்னி லியம்பக்கேள்—வான்புகழும்
தூயதிரி புண்டரமாத் தூநீ றணிவதனுக்
கேயவெனச் சொல்வா ரெடுத்து. (சகூ)

திரிபுண்டர தாரணத் திறத்தின் காரணம்.

முக்குறியா நீற்றை முயன் றணித லேனென்றால்
முக்குண முக்குற்ற மும்மலமுத்—துக்கங்கள்
மூவவத்தை மும்மைவினை முப்பிடிமுத் தத்துவங்கள்
ஆவனபோக் கற்கென் றறி.

முக்குண மென்றது:— சத்துவம், இராசதம், தாமதங்களை.
முக்குற்ற மென்றது:— காமம், வெகுளி, மயக்கங்களை.
மும்மல மென்றது:—ஆணவம், காமியம்,மாயைகளை. [திங்களை.
முத்துக்க மென்றது:—ஆதிதைவிகம், ஆதியாத்மிகம், ஆதிபௌ
மூவவத்தையென்றது:—சாக்கிரம், சொப்பனம், சுழுத்திகளை.
மும்மைவினையென்றது:-பிராரத்துவம்,சஞ்சிதம்,ஆகாமியங்களை.
முப்பிடியென்றது:—ஞாதுரு, ஞானம், ஞேயங்களை.
முத்தத்துவங்களென்றது:—ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவங்களை. (ரு0)

முக்குறிகட்கு மொழியதி தெய்வம்.

மூற்குறிக்கு ருத்திரனு முன்னுமிரண் டாங்குறிக்குச்
சொற்பெறுமா கேசனுச் சொல்லுவரால்—பிற்குறிக்குச்
சாற்றுஞ்ச தாசிவனர் தாமதிதே வாமவரைப்
போற்றிநுதற் பூதியிடல் பொற்பு. (ருக)

பசுமல நீற்றின் பயனிது வென்னல்.

பசுமலத்தா னீற்றைப் பரவிச்செய் கென்றே
விசுவ மறிய விளம்பல்—நிசமாய்
மும்மைப் பசுக்கண் முபங்கைம் மலநீற்றும்
செம்மையினு லென்றெடுத்துச் செப்பு

மும்மைப்பசுக்கள் என்றது:—விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர்களாகிய மூவகை ஆன்மாக்களே.
ஐம்மலம் என்றது:—ஆணவம், கன்மம், மாயை, வைந்தவ்யம், திரோதாயி என்பனவற்றை (ருஉ)

திருநீ றணியச் சேப்பிய தானம்.

உச்சிநெற்றி கண்ட முரகாபி யொண்முழந்தாள்
மெச்சு புயமுழங்கை மென்மணிக்கட்—டுச்சிதமா
நண்ணுவிலாப் பக்க நவின்முதுகித் தானத்தில்
எண்ணுதிரு நீறிடுமி னேய்ந்து. (ருங)

அருணீ றணியு மளவினை யறைதல்.

நெற்றிக் கடைப்புருவ நீளமுரந் தோள்களினில்
உற்றவள வாறங் குலமோது—மற்றுமுள
தானமோ ரங்குலமாத் தானணிந்து வெண்ணீற்றை
ஞானமுறு முத்திநெறி நாடு (ருச)

யாக விபூதி யாவரு மணிவர்.

எம்மதப்பி ராமணரு மேனைத் துவிசர்களும்
தம்மகத்துப் பூதி தரித்துணலே—இம்மையினில்
கண்டுஞ் சிலரணியாக் காரணத்தா னீற்றுக்கிங்
குண்டோ குறைநீ யுரை.

ஏனைத்துவிசர்களும் என்றது:—க்ஷத்திரியர், வைசியர்களே. (ருரு)

## பூதி யணியார் பொல்லா ரென்னல்.

நீற்றிடையி னிற்றிகழு நித்தனென நக்கீரன்
போற்றியரு ளுற்ற பொருடேர்ந்தும்—நீற்றைப்
புணையாகக் கொள்ளாதார் பொல்லா நரகிற்
கணியாவா ரென்றே யறை. (ருசு)

## பூதி யணிந்த புனித ரிவரெனல்.

தத்தாத் திரேய தபோதனரும் பூதியைத்த
ரித்தா ரெனவேசாண் டில்யமறை—வித்தரித்
தோதுண்மை தேர்ந்து முலகிற் சிலரணியா
தேதிரியும் பாவமெனோ விங்கு. (ருஎ)

சனகனுமே பூதி தரித்தான் சுகனும்
அனகனுநற் பூதி யணிந்தான்—தினகரனேர்
வாமதே வன்முதலா மாதவரு மாலயனும்
தாமணிந்தார் நீறுதனைத் தான். (ருஅ)

பூதிநெறி வேதநெறி பொற்பார் புராணநெறி
நீதிநெறி யீண்டு நிலவவே—ஆதியினில்
துங்க பரசிவமே சொற்சங் கரவடிவாய்
அங்கமெலா நீறணிந்த தாய். (ருகூ)

## பூதியாற் பேறு பெற்று ரிவரெனல்.

கூன்பாண் டியன்சுரநோய் கோளறுக்குஞ் சம்பந்தர்
தான்றா மடைப்பள்ளிச் சாம்பரினால்—ஊன்செய்
உடல்விட் டகன்றமையை யோர்ந்தமண ரும்நீ
றிடவுஞ் சிலரே னிடார். (சூ0)

பூதியணி வோர்க்குப் பூதபை சாசநோய்ப்
பீதி யிலைசமணப் பேயருடன்—வாதிட்ட
சம்பந்தர் பாண்டியற்குத் தந்தநீற் றூற்சுரங்கூன்
அம்புவியி னீங்குமத னால். (சூக)

அன்று திலகவதி யாரளித்த வெண்ணீற்றால்
நன்றப்பர் சூலைநோய் நாடாமே—குன்றி
ஒழிந்தமைகேட் டுஞ்சில்லோ ரொண்ணுதலிற் பூதி
அழுந்தவணி யார்பவமென் னும். (கூஉ)

பறைமகட்சேர்ந் தன்னாள் பதியால்வெட் டுண்ட
மறையவன்மே லீமத்து மன்னி—யுறுநாய்க்கால்
சாம்பர் படவதனாற் சாலோக முற்றகதை
ஓம்பிப் புணைநீ றுவந்து. (கூங)

பற்பமணி வாரைப் பரமனாக் காண்டல்.

யாரேனும் பூதி யணிந்தோரை மானுடமாப்
பாரேன் பரனெனவே பாவிப்பேன்—நேரே
விழுந்திறைஞ்சு வேனென்ற மேதகைய வப்பர்
பழுதற்ற நன்னெறியைப் பற்று. (கூச)

நெற்றியினீ றிட்டவரை நின்மலனாக் கொண்டுதொண்
டற்றமின்றிச் செய்கவெனு மப்பருரை—கற்றிருந்தும்
பூதியணி யாததென் பூதவுடம் புள்ளளவும்
கோதறுநீ றிட்டின்பு கொள். (கூரு)

பூதிக் குளமதிப்புப் பொற்பணிக் கில்லையரன்
பூதி யணியாத புத்தருடன்—வாதிடுங்கால்
மாணிக்க வாசகரு மாநீற்றை முன்னுரைத்தார்
ஆணிப்பொன் றில்லைதனி லன்று. (கூசு)

கண்ணீருங் கம்பலையுங் காணவரன் றாள்போற்றி
மண்ணாசை யற்றமணி வாசகனார்—வெண்ணீ
றணியா தவர்க்கஞ்சு வேனென் றதனால்
பிணிகளையு நீறணியப் பேண். (கூஎ)

மெய்ப்பொரு ளாயனார் வெண்ணீ றணிபகைவன்
கைப்படையால் வெட்டுண்ட காலத்தே—யெய்த்துமே
பூதிபத்தி யிற்றிறம்பாப் பொற்பறிந்து நீவிரப்
பூதியணிந் துய்மின் புகழ்ந்து. (கூஅ)

வெட்டத் துணிந்துவரு வீரனதி சூரனுதல்
இட்டதிரு நீற்றி னெழிலேனோக்கிச்—சிட்டனென
ஏனாதி நாத ரிருந்தார்வாள் கைக்கொண்டு
வானாதி போற்ற மதித்து. (சுகூ)

நற்சேர மான்பெருமா ணயனார் யானையின்மேல்
விற்சேர வேபவனி மேவுங்கால்—முற்சேர்ந்த
ஏகாலி மேனியின்மே லெய்துவர்மண் ணீறெனவே
வாகாய்ப் பணிந்தார் மகிழ்ந்து. (எ0)

பூதி யணித னீதி யாமெனல்.

குற்றமிலா ஞான குருமணிக ளும்நீற்றைச்
சற்றுமிக ழாமற் றரிப்பரேல்—மற்றவர்கள்
பூதியணி யாமற் புலையுடலைப் போற்றிடுதல்
நீதிநெறி யாமோ நிகழ்த்து. (எக)

வேதாந்தத் துளது விபூதி யென்னல்.

பஞ்சசா பாலத்துட் பஸ்மஜா பாலமெனும்
செஞ்சொ லுபநிடதஞ் செப்புநீ—றெஞ்சாது
பத்தி யுடனணிவார் பன்னுநற் சாயுச்ய
சித்தியடைந் தாவார் சிவம். (எஉ)

சிவசா தனத்துட் டிருநீறு முன்னெனல்.

நாதனடி சார நவின்றபல சாதனத்துள்
பூதிமுதற் சாதனமாப் பொற்புறவே—வேத
புராணமிதி காசம் புகலுவதா னீற்றைப்
பராமரியா திட்டுய்தல் பாங்கு. (எங)

விபூதி வியாபக மென்ன விளம்பல்.

ஈசனுரு வாம்வன்னி யில்லா விடமின்றி
மாசறவே யெங்கு மருவுவதால்—தேசு
குளிர்ந்தவிடம் பூதி குலவுமீ தோர்வார்
தெளிவுடைய ராவார் திகழ்ந்து. (எச)

மதங்கடோறு மீசனுரு வாமனனீ றேய்ந்த
விதங்க ளுணர்ந்துடலின் மேவ—நிதம்புனையா
திக்குவல யத்தி லிருமாந் திருப்போரை
அக்கடவு ளெங்ஙனமாள் வான். (எரு)

கந்தமிலாப் பூவுங் கடவு ளிலாமதமும்
சிந்தனையி லாவுயிருந் தேடிலில—அந்தமுறை
வன்னியி லாவிடமும் வண்ணீ றிலாநெருப்பும்
உன்னி லுலகிலுண்டோ வோது. (எசு)

பூதிசிவம் வேறுப் புகலாதே வேதங்கள்
பூதியையே யச்சிவமாப் போற்றுமால்—ஓதின்
நெருப்புருவா மீச னிமலவுடற் பூத்தங்
கிருப்பதனு லென்றேநீ யெண். (எஎ)

திருநீற்றின் சீர்த்திதனைத் தேசிகன்பாற் றேரின்
கருநீற் றதுசிவமாக் காணும்—பெருவாதில்
வாதவூ ராளியவர் வன்றழலிற் காட்டியநல்
லேதுவினுற் பூதியுண்மை யெண். (எஅ)

பூதி வடிவம் புராரி வடிவமென
நீதியா வேத நிகழ்த்துவதை—ஓதினரும்
பத்தியிலா தாராய்ப் பசிதமணி யாதுபா
வத்தழுந்த லென்ன மதி. (எகூ)

### இதற்கீ தழகேன விசைய வுணர்த்தல்.

மூகத்திற் கழகாகு முக்கணனூர் வெண்ணீ
றகத்திற் கழகான்று ளாய்தல்—சகத்திறந்த
ஞானிக் கழகு நலந்தீங்கெண் ணுமையாம்
வானிற் கழகா மதி. (அ0)

### விபூதி யணிவதால் விளையு நன்மைகள்.

சிந்தனைக்கு மெட்டாச் சிவனடியைக் காட்டுவிக்கும்
பந்த மறுக்கும் பகைத்தோட்டும்—அந்தகனைச்
சுந்தரமா நீறுதனைச் சுத்தசித்தத் தோடுடலில்
சந்ததமும் பூணிலது தான். (அக)

பிறவிப் பிணியகலும் பேதைகுண மாறும்
திறஞான மேவித் திகழும்—குறவள்ளி
நாயகன் றாள்போற்றி நன்னுதலிற் பூதியினை
ஏய வணியி லெடுத்து. (அஉ)

கொலைகளவு கட்காமங் கூறுபொய் யாதி
அலகில் வினைபுரிந் தாரும்—மலமாற்றும்
வெண்ணீறன் பாயணியின் விட்டவற்றை யுய்வரெனப்
பண்ணார் மறைபகரும் பார். (அ௩)

## விபூதி யணிவார் விமலனு வாரெனல்.

கல்லானே யானுலுங் கண்ணுதலி னீறணியின்
எல்லாரு மேத்தி யிறைஞ்சுவார்—சொல்லாரும்
நீதிமா னுவ னிமலமன முற்றிடுவான்
ஆதிசிவ னாருளி னுல் (அச)

குரவனுக்கா ளாவார் குலவுபற்பம் பூண்பார்
அரனருளுங் கைக்கொள்வா ரன்றித்—திரஞானம்
முற்ற வடைந்திடுவார் மூடமன மின்றியருள்
உற்றிருப்ப ரெப்போது மோர்ந்து. (அரு)

நோயைநோ வச்செய்யு நுண்ணுணர்வைத் தந்தாளும்
மாயைப் பெருக்கை மடிவிக்கும்—பேயை
அகற்று மிருவினைக ளண்டா தொழிக்கும்
தகவணியி னீற்றையது தான். (அசு)

அண்ணுந்து நீற்றை யரகரா வென்றணிவார்
பண்ணுமா பாவம் பறந்தோடும்—விண்ணில்
நெடுங்காலம் வாழ்வார் நிமலனடி சேர்வார்
கடும்பிறவி மேவார் கதித்து. (அஎ)

அரகரசம் போவென்றே யண்ணுந்து நீற்றைக்
கரகமலத் தேற்றுநுதற் காண—விரவவணிந்
தாட்டைப் புரியரனு ரம்பொனடி போற்றிநிதம்
வீட்டையருள் வாயெனநீ வேண்டு. (அஅ)

பூதி யணிபோழ்து பொற்கரத்தி லொட்டியுள
பூதிதனை வாயினுற் பூபூவென்—றாதியே
பூதிநிலம் வீழ்த்திடுவோர் புன்கழுதை யாய்ப்பிறந்தே
மேதினியிற் றுன்புறுவார் மேல். (அசு)

விமலசம் பந்தர்முதன் மேலோர்க ணீற்றை
அமலமுற மெய்யதனி லன்பாய்த்—திமிரமறப்
பூசுமெனச் சொற்றனரா பூசியபின் னேதிருத்தி
மாசுபடச் சொற்றனரா வந்து. (கூ0)

தண்ணீரி னுனீற்றைத் தைவந் தணிந்ததனைக்
கண்ணுடி பார்த்துக் கலைத்தணிவார்—விண்ணேருர்
மண்ணிற் பிறந்திருந்து மாளாத் துயருறுவார்
திண்ணமீ தென்றே தெளி. (கூக)

பூதிப் பயனைப் புகன்றீர் முறையாயப்
பூதிவே தாந்திகடாம் பூசாமைக்—கேதென்னை
ஓதுகவோ தாதொழியி லுஞ்சொ லனைத்தையுமே
மாதுகதை யென்பேன் மதித்து. (கூஉ)

மூன்னுக்குப் பின்முரணு மூதுலக நூல்கற்றுக்
கன்னிமய லான்போற் கழறுகிருய்—முன்னவன்சொல்
நூன்முழுது நன்ருய்ந்து நுண்பொருடேர் வாயேனீ
தான்மயங்கிப் பேசாய் தடுத்து. (கூங)

வேதாந்தம் பேசுவார் வேட்கைபருர் நீறணியார்
வேதாந்தப் போலிகளாம் வீணரவர்—தீதாகத்
தம்மைத்தாங் கண்டாற்போற் றர்க்கித்து வாதிடுவர்
வெம்மைமொழி கூறி வெகுண்டு. (கூச)

உன்வடிவம் யாதென்று லுண்மையறி யாதுழல்வான்
தன்மநெறி தேர்ந்திருந்துந் தானீயான்—அன்பாச்
சிவனை வணங்கான் றிருநீ றணியான்
அவன்போலி வேதாந்தி யாம். (கூரு)

வெண்ணீ றணியா விதமென் னெனவினவின்
வெண்ணீற்று லென்னபயன் வேடமென்பான்—உண்மைநிலை
ஒன்றிருந்தாற் போதுமென்பா னுத்தமரைப் போற்புகல்வான்
நன்றறியா வேதாந்தி நாடு. (கூசு)

வேதாந்தங் கற்றும் விபூதி யணியானேல்
வேதாந்தங் கற்றபயன் வீணாகும்—வேதாந்தம்
பூதி யதனைப் பொற்பி னுடனணிய
ஓதிட லாலெனவே யுன். (கூள)

வந்தவகை தன்னைநல் வாய்மைநூ லாலுணர்ந்தும்
பந்தமறு மாறு பசிதத்தை—முந்தப்
பணிந்தணியாப் பாமரனே பார்புகழ்வே தாந்தி
அணிபவன்வே தாந்தியா வான். (கூஅ)

வேதாந்தி யாயினோர் வெண்ணீ றணிந்திடுவார்
போதாதி கொண்டரனைப் பூசிப்பார்—தாதாவாய்
ஏற்றோர்க் குளவரையி லில்லையென நீந்துவப்பார்
தூற்றார்க ணீற்றைத் துணிந்து. (கூகூ)

புனிதமா நீறணியாப் புன்மைவே தாந்தி
இனியவுரை சொல்லினும்யா மேலோம்—கனியப்
படித்தவெலாம் பாழாகும் பாரிலவன் செய்கை
பிடிக்கா தெவர்க்குமிவன் பேய். (க00)

உடலாகா துள்ள வுணர்வதனைக் கண்ட
திடஞானி தன்னுடலிற் செவ்வே—மடமகற்றும்
வெண்ணீ றணியானேல் வேண்டே னவன்மொழியை
அண்ணல் சிவத்தாணை யான். (க0க)

திருநீற்றுத் தூடணம் செய்வோ ரீவரேனல்.

நந்தி ததீசி நவில்கௌ தமர்பிருகு
சிந்துண் முனிவாம தேவாருள்—முந்துதவும்
கண்ணுவர்தஞ் சாபமுறுங் காதகரே நீறதனை
எண்ணு தவமதிப்பா ரிங்கு. (க0உ)

உண்மைவே தாந்தி யொழுக்க மிவையெனல்.

பிறப்பிறப்பிற் கஞ்சிப் பிறங்குதிரு நீற்றைச்
சிறப்பினுத் தூளன்மாய்த் தேகத்—துறப்புனைந்
துற்றுமெய்ஞ் ஞானத் துரவருள் பெற்றவனே
பற்றறுவே தாந்தியெனப் பார். (௧0௩)

உலகுடலைப் பேணு துணவூட்ட வுண்டு
கலகமெனப் பேசல் கழன்று—குலவும்
நினைப்புமறப் பில்லாரே நீறணிவ தில்லை
மனக்கலக்க முற்றுய் மதி. (௧0௪)

பூதி யணியார் புனிதரா காரேனல்.

புனிதமா மெய்யதனிற் பூதியணி யாக்கால்
இனிதாமோ வம்மெய் யிகத்தில்—மனிதவுடல்
பெற்றும் பயனில்லை பேசுதிரு நீற்றுண்மை
கற்றும் பயனில்லை காண். (௧0௫)

விபூதி மான்மியம் விளம்பற் கரிதேனல்.

நீற்றைச் சிவமாய் நினையா திகழ்ந்தவர்தாம்
ஆற்றுமீ ரெண்கருமத் தாம்பயனைத்—தோற்றே
அதிபா தகரா யருநரகிற் காளாய்
மிதிபுழு வாய்ப்பிறப்பார் மேல். (௧0௬)

பூதி சிவமாகப் போற்றுக் குடும்பத்தில்
நீதி யறங்க ணிகழாவாம்—நீதியிலார்
வாழ்ந்தாலுந் தாழ்ந்தாலும் வையகத்தோர்க் கென்பயனீ
தாழ்ந்தாய்ந்து நீறணிவீ ரால். (௧0௭)

பூதி சிவமென்று போற்றி யணியார்தாம்
நீதியற்று ரில்லிடத்து நீண்டநாள்—தீதினையுற்
றிட்ட பணிசெய்தே யேக்குறுவா ரன்னமின்றித்
துட்டமனப் பாவியராச் சோர்ந்து. (௧0௮)

பூதி யணிந்தியற்றும் பூசை சிறப்பாகும்
பூதி யணியார்செய் பூசையது—தீதிழைக்கும்
சுத்த சிவவடிவாஞ் சுந்தரமாம் பூதியணிந்
தத்தனுக்குப் பூசையினை யாற்று. (௧௦௯)

வெண்ணீ றரன்சீர் விளம்பி யணியாரேல்
வெண்ணீறு லோர்பயனு மேவாரே—மண்ணுலகில்
வெண்ணீ றணிந்திடுதல் வீணிடம்பங் காட்டற்கோ
உண்மாசு போக்கற்கோ வோது. (௧௧௦)

நீறணியா னுண்ணுவன நிந்திக்கத் தக்கநஞ்சாம்
நீறணிவா னுண்ணுவன நீளமுதாம்—தேறுங்கால்
நீறூர்ந்த மேனியினர் நீண்டகா லம்வாழ்ந்து
மாறா திருப்பர் மகிழ்ந்து. (௧௧௧)

பூதிபுனை வோர்தம்மைப் பூலோக தேவரென
நீதிநெறி யோர்ந்தோர் நிகழ்த்துவரால்—பூதியிடார்
பேசிடினு முண்டிடினும் பேரணிகள் பூண்டிடினும்
ஏசுமிரு கக்கிணையா வெண். (௧௧௨)

பூதியின்மேற் பற்றில்லார் புண்ணியநூற் கற்றென்னும்
பூதியின்மேற் பற்றுள்ளார் புன்மையிலார்—பூதியிலன்
புள்ளவரே ஞானநூ லோதற் குரியரலால்
கள்ளமனத் தாரன்று காண். (௧௧௩)

மூகத்தினீ றிட்டறியான் மூதேவி யாவான்
சகத்திற் றிரிந்தின்மை சார்வான்—இகத்தினிலே
செய்தவங்க ளற்றுச் செழுநரகில் வீழ்ந்திடுவான்
உய்திபெறு தேயுழல்வா னோர்ந்து. (௧௧௪)

பூதியிடா ரில்லிற் புகழ்புண் ணியமிலவாம்
பூதியிடா ரில்லத்திற் பொற்பின்றும்—பீதியுண்டாம்
குன்று மிருநிதியங் கூற்றுறைத்தா னேசமறும்
வன்றுயரே நேரு மலிந்து. (௧௧௫)

பூதியிடா ரில்லத்திற் புண்ணியர்க டாமுண்ணூர்
பூதியிடா ரில்லத்திற் பொய்பாவ—மேதிகழும்
நம்பனடி யார்க ணகைத்திகழ்வா ரவ்வில்லை
வெம்புதுய ரேவிளையு மேல். (கககூ)

மூதேவி யேவாழ்வள் மூர்க்கமக வேபிறக்கும்
சிதேவி யங்கே செறிதராள்—பூதேவி
உற்றூனு மேதரும மோங்கா தொடுங்குமால்
பற்றுநீ றிட்டறியார் பால். (ககஎ)

எக்குலத் தாரேனு மெம்பரம னீறணிந்தால்
நக்கனன்ப ராவரென நால்வேதம்—சிக்கறுத்துச்
சொற்ற தறியாதார் தூடித்துத் துன்புறுவார்
சற்றுமன் புற்றிடார் தாம். (ககஅ)

எந்தமத மென்றூ லெழிற்சைவ மென்பாரும்
நந்தலிலா நீறணிய நாணுவார்—நொந்தவரை
ஏனோ திருநீ றிடுகிலீ ரென்றக்கால்
மானுகம் போற்சீறு வார். (ககக)

நித்தியநை மித்திகஞ்சீர் நீள்காமி யம்பிராயச்
சித்தமெனு நாற்கருமச் செய்கையினும்—சுத்தமுறு
நீறணிந்து செய்யானே னிட்பலனு மென்றெடுத்துக்
கூறுநூ லெல்லாங் குறித்து. (கஉ0)

### விபூதி மான்மியம் விளம்பற் கரிதேனல்.

வெண்ணீற்றின் மேன்மைசொலல் வேதாவுக் கும்மரிதேல்
மண்ணுலகோ ரெங்ஙன் வழுத்திடுவார்—கண்ணீர்
ஒழுகச் சிவனருளுற் றேத்துறுதி கண்டோர்
தொழுதொருவா றேபுகல்வார் சூழ்ந்து. (கஉக)

வண்டுளருங் கொன்றை மலர்புனைவான் வெண்ணீற்றைக்
கண்டவரும் வாழ்த்திக் கழறினரும்—பண்டைவினைக்
கட்டறுத் தீசன் கைலையைச்சார் வாரெனினஃ
திட்டவர்சீர்க் கொப்பில்லை யெண். (கஉஉ)

தீர்த்தயாத் திரைப்பலன் றிருநீ றளிக்கும்.

மன்னுகங்கை யாதியவா மாநதியிற் றோய்ந்தபலன்
பன்னுவெண் ணீற்றாற் பரிந்துவரும்—என்னுநூல்
சத்தியமா மாதலினாற் றானணிவீர் வெண்ணீற்றை
நித்தியமுண் மாசறவே நீர். (கஉங)

திருநீ றணிந்துப தேசஞ்செய் வாரேனல்.

பற்றறுமெய்ஞ் ஞானிகளும் பற்ப மணிந்தொழுகி
உற்றுபதே சம்முற்றார்க் கோதிவரல்—செற்றமற்றுக்
கண்டார் விபூதியினைக் காமர் மறைநெறியே
தண்டா தணிவார்க டாம். (கஉச)

பற்றறுக்கு நீறதனைப் பத்தியுடன் பூசுநரை
நற்றவமெய்ஞ் ஞானியரு நாடிடுவார்—சுற்றமெனக்
கொள்வா ரவர்க்காசி கூறியிஞ் ஞாலமீ
தொள்வாழ் வுறச்செய்வா ரோர்ந்து. (கஉரு)

தீயரைச்சீ ராக்குந் திருநீ றணிந்தக்கால்
தூயர் மகிழ்வார்க டுயரெனக்—காயம்
புனிதநெறி யுற்றிடுமாற் போய்நரகில் வீழார்
இனியசிவன் றாளடைவா ரே. (கஉசா)

திருநீ றணிந்தவர்பாற் செய்வினைக ளொன்றா
கருமமலக் காட்டைக் கருக்க—குருவாய்ச்
சிவமேவந் தோர்மொழியைச் செப்புமவர்க் கென்னின்
அவர்பெருமை சொல்வாரிங் கார். (கஉஎ)

சிவனடியா ராவார் திருநீ றதனைப்
பவமறுக்கப் பூசுபவர் பார்த்திங்—கவர்தம்மை
நல்லா றெலாமடையும் ஞாலமெலாம் போற்றியிடும்
பொல்லாங்கு காணாது போம். (கஉஅ)

தினமுமற வாது திருநீ றணிந்தால்
மனமுந்தூய் தாகுமயல் மாறும்—இனமாம்
மலர்மாதர் நோக்கு மலைமாது நோக்கும்
நலமாக வுண்டாகு நாடு. (௧௨௯)

பொய்யை யொழிக்கும் புலாலை விடச்செய்யும்
செய்யுங் கொலைகளவைச் சேதிக்கும்—துய்ய
அறிவளித் தீசனடிக் காளாக்கும் பூதி
அறிமி னறிமி னமர்ந்து (௧௩0)

இந்து முடிதரித்த வீசனன்பர் வெண்ணீற்றைப்
பந்தமறப் பூசாத பான்மையுண்டோ—கந்தமலர்
சூடா தவருஞ் சுவாமியி லாமதமும்
பீடா ருலகிலுண்டோ பேசு. (௧௩௧)

நல்லாரைக் காணிலவர் நன்மைதீ மைகருதா
தொல்லா வுரைக ளுரையாது—சொல்லரிய
ஆதிசிவ னென்றே யவர்தாள் பணிவதுபோல்
பூதிகண் டாலுடனீ பூசு. (௧௩௨)

பூதிபொது வேனும் புகலுமதிற் றூரதம்யம்
ஆதிபரன் மேவா லயத்தடைந்த—பூதியினும்
நண்ணுமெய்ஞ் ஞானியர்க ணல்குநீ றேவிசிட்டம்
திண்ணமீ தென்றே தெளி. (௧௩௩)

நல்லமெய்ஞ் ஞானி நயந்தளிக்கும் வெண்ணீறு
பொல்லாப் பிறப்பறுக்கும் புத்திதரும்—வல்ல
புராணவிதி காசப் பொருளையறி விக்கும்
பிரானருளைக் கூட்டுமெனப் பேசு. (௧௩௪)

தான்தோன்றித் தம்பிரான் றானு யணிவதிலும்
தோன்றுபர மேசனடித் தொண்டர்களாய்—ஆன்ற
சிவனடியார் தந்தருளுந் திதறுவெண் ணீற்றைச்
சிவசிவா வென்றணிதல் சீர். (௧௩௫)

நல்லாரைக் காட்டு நலந்தீங் கறிவிக்கும்
பொல்லா வினையைப் பொடியாக்கும்—நில்லா
மனத்தை நிறுத்தும் வளர்பூதி பூசிற்
கனத்தபுக ழுஞ்சாருங் காண் (௧௩௬)

ஆதிசிவ னந்திக் கதிகார நந்திப்பேர்
ஓதிப் பிரம்பு முதவியது—பூதியணி
யாதவரவ் வான்முகநீ றந்தங்கண் டேயணிந்து
தீதகன் றுய்யவன்றே தேர். (௧௩௭)

கற்றுக்கேட் டென்பயனுங் காணவரி தாநீற்றை
நெற்றியினி னன்று நிரம்பவே—கற்றுப்போல்
உள்ளமோ டென்பு முயிருமன் பாற்குழையக்
கள்ளமின்றிப் பூசாதார் காண். (௧௩௮)

பூதிசிவ மொன்றுப் புகழ்ந்துமறை போற்றுமெனக்
கோதிலென் னரியனுர் கூறியதே—நீதியென
எல்லீரு நீறணிந் தெம்மா னருள்பெற்றே
பல்லூழி வாழ்மின் பரிந்து (௧௩௯)

**வாழ்த்து.**

வாழி திருநீறு வாழியர னக்கமணி
வாழி பரனு வழுத்தேழுத்து—வாழியன்பர்
வாழிசச்சி தாநந்தன் வாழியையாக் கண்குரவன்
வாழியிந்த நூருன் வளர்ந்து.

---

## விபூதி விளக்கம் முற்றிற்று.

பாயிரம் வாழ்த்துட்படச் செய்யுள்-௧௪௮.

---

சுபம் ! சுபம் ! ! சபம் ! ! !



சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

திருப்போரூர். ஸ்ரீ - சிதம்பர சுமாமிக ளாதீனம்

பதினோராவது பட்ட மடாதிபதி

**ஸ்ரீமத். திரு. சிவப்பிரகாச சுவாமிகள்**

எழுதிய

# விபூதி மஹாத்மிய வசனம்.

பரம கருணாநிதியாய் விளங்குஞ் சிவபெருமா னொருவரே பதிப்பொருளாவரென் னு முண்மையைக் கடைப்பிடித்துஅவரையே வழிபட்டொழுகும் மார்க்கத்திற்குச் சைவசமயமென் னும்பெயராம். சிலாசம்பந்தஞ் சைலமென்பதுபோலச் சிவசம்பந்தஞ் சைவமாம்; இது தத்திதாந்த பதமாம்.

அச்சிவசம்பந்தம் உடலுக்கோ உயிருக்கோ வெனின், உடலுயிர்களிரண்டிற்குமே இன்றியமையாச் சிறப்பிற்றும்; ஆயினும் பெத்தாவஸ்தையிலான்மா உடலுடன்கலந்து உடலாய்ப் பிரிவுபடாதிருத்தலின் முந்தி உடலுக்கே சிவசம்பந்தம் வேண்டும் ஆகவே,

"பரம சிவனமலன் பத்தர்க்குச் சின்ன
முருவுடலிற் கண்டியுநீ றும்."

என்ற வான்றோர் வாக்கின்படி, பரமேஸ்வரனுடைய திருவருட்படிவங்களாக வமைந்த விபூதி உருத்திராக்ஷங்களாகிய சிவ சின்னங்களைத் தரித்து விளங்கலே உடலுக் கியைந்த சிவசம்பந்தமாம். விபூதி உருத்திராக்ஷங்கள் சிவ ஸ்வரூபமாம்; அவற்றுள், விபூதி வெண்ணிறமும், உருத்திராட்சம் கருநிறமுமாய் விளங்கலால், அவற்றைச் சிவசத்தி வடிவங்களாகப் பாவித்துத் தரித்தல்வேண்டும். அவ்விபூதி உருத்திராட்சங்களின்னவென்பதும், அவற்றின் வரலாறும், வகையும், மகிமையும், அவற்றைத் தரிப்பதனாலுண்டாம் பயனுமாகிய இவை முதலியவற்றைச் சைவசமயிகளனைவரும் நன்குணர வேண்டுவ தத்தியாவஸ்யகமேயாம். ஆயினும்,

'யதா தேவஸ்ய மஹாத்ம்யந் துர்ஜ்ஞேயம் பார்வதிபதே:
நதைவ பஸ்நம: ப்ரோக்த்தம் வேத வேதாங்க பாரகை:'

என்னும் ஸ்காந்த வசனத்தால், ஸ்ரீபார்வதி நாதனுடைய மஹிமை எவ்வாறறிதற் கசாத்பமோ, அவ்வாறே, பஸ்ம மஹிமையையு மறிந்துரைத்த லசாத்தியமெனப் பெறப் படுதலுமன்றி,

"மூல மீறிலா முழுமுதற் பரமனை முடிவில்
கால மோரினும் புலப்படா னுங்கது கடுப்ப
நாலு வேதமுற் றுணர்ந்தவர் நாற்பொரு ளளிக்கும்
பால்வெண் ணீற்றிய லளப்பரி தாமெனப் பகர்வார்."

என உபதேசகாண்டத்தும் விதிக்கப்படுதலின், அவற்றின் மேன்மைக ளனைத்தையு மெடுத்துக் கூறவல்ல மல்லேமாயினும் ஒருவாறு சுருக்கிக் கூறுதும்:—

## விபூதி இன்னதென்பதும் அதன் வகையும்.

விபூதியாவது பரசிவ சம்பந்தமான சிவாக்கினியினின்றும், வேத சம்பந்தமான அக்நிஹோத்திர முதலிய வைதிகாக்கினியினின்றும், ஆகம சம்பந்தமான தீட்சை முதலிய சைவாக்கினியினின்றும் முறையே உண்டாகியதும், விதிப்படி தஹிக்கப்பட்டதுமாகிய பஸ்மமேயாம்.

அவற்றுள், சிவாக்கினி பஸ்பம்: குரு பஸ்மம், லகு பஸ்மமென விருவகைப்படும். இவற்றை முறையே, மகா பஸ்மமென்றும், பஸ்மமென்றும், சூதசங்கிதை முதலிய உபப்ரஹ்மணங்களெடுத்துக் கூறும்.

அவ்விரண்டனுள், குரு பஸ்ம(மஹாபஸ்ம) மாவது சிவமாகிய அக்கினியிற் பூத்த திருநீறும்; அஃதாவது சிவபெருமான், ஆகவநீயம் தக்ஷிணாக்கி—கார்ஹபத்யம் என்னும் மூவகை யக்கினிகட்குங் காரணராகி, தாம்பிரம்--அர்ச்சிடம்--ஊட்ம்—மச்வலினி-சுவாலினி-விஸ்புலிங்கினி—சுசிநிஸ்வரூபம்--கபிலம்—அவ்வியம்--கௌவியம்--வகாவென்னுந்தசவிதகாலாக்கினிமண்டலநடுவில்வீற்றிருப்பவராய், இரண்டு சிரசு-சிருங்கம்--கபர்த்தம்-சந்திரகலை--திரிநேத்ரம்--உபவீதம்—திரிமேகலை—மூன்று பாதம் என்பவற்றுடன் சுவாகாசத்தி—சத்தியக்னி—ஸ்ருக்கு-ஸ்ரவம் என்னுமிவைகள் விளங்கிய நான்கு வலக்கரங்களும், தோமரம்-தாலவிருத்தம் (விசிறி)-கிருதபாத்திரம் என்னுமிவைகள் விளங்கிய மூன்றிடக்கரங்களும், இரத்தநிறமும்—இரத்த வஸ்திரமும்-செஞ்சந்தன முதலியவற்று லலங்கரிக்கப்பட்ட

திருமேனியுமுடைய அக்நிஸ்வரூபரும், அக்கினியைத் தரித்தவரும், அக்நி பூதேசருமாய் விளங்கலானும், வேதங்களனைத்து மவரை ஹக்நீ எனத் துதிசெய்து நிற்றலானும், சமஸ்தாக்நிகட்கும்மூலகாரணாக்நி வடிவாக விளங்குஞ் சிவபரஞ்சுடரேயாம்.

லகுபஸ்மமாவது இயற்கைப்பஸ்மமெனவும் செயற்கைப் பஸ்மமெனவும் இருவகைப்படும். அவற்றுள், இயற்கைப்பஸ்மமாவது "ஆதி பகவன் ஞானவடி வழலிற் பூத்து நித்தியமா யணிந்தோர் தமக்கு வசிகரமா யருந்தி னோர்கட் காரமுதாய், நீதி யறியும் பசுமலத்தை நீக்கு மொருநற் குறிகாட்டி, நிகழ்பே ரின்பக் கடலூட்டி நின்ற புகழ்வெண் டிருநீறே" என்ற ஸ்ரீ சிதம்பர சுவாமிகளின் திருவாக்கின்படி, மேல் குருபஸ்மத்திற் காட்டிய சிவாக்கினி வடிவாய் விளங்குஞ் சிவபரஞ்சுடரின் திருமேனியினின் றுந் தானே பூத்தொளிர்வதாம்.

அஃதன்றியும், திருவருண்மயமாய் விளங்கும் முழுமுதற்றலைவியாகிய உமாதேவியார் தமக்குச் சத்தியாகவமைய, ஆன்மகோடிகளை அநாதியே பந்தித்துள்ள ஆணவமலத்தை நீக்கியருளும் பேரருளுடைய கருணாநிதியாகிய சிவபெருமான் பிரளய வெள்ளமே நீராகவும், பல்லாயிரங்கோடி யண்டங்களே யாகமண்டபமாகவும், கடல்சூழ்ந்த விந்நிலவுலகமே வேதிகைகளாகவும், திருமால்-பிரமன்-இந்திரன்முதலிய தேவர்களே அவியாகவும், ஏனையவான்மாக்களே பசுக்களாகவுங்கொண்டு, தமது திருநுதலாகிய குண்டத்தில் தமதக்கினி நேத்திரத்தினின்றெழுந்த அக்நியை மூட்டிப் பரமேஷ்டி (மேலான யாகம்) செய்தருளினரென்றும், அவ்வியாகாக்கினியிற் றோன்றிய பஸ்மமாகிய திருவெண்ணீற்றை ஆன்மாக்கள் இருவகைப் பற்றினின்றும் நீங்கிக் கடைத்தேறுமாறு தமது திருமேனியிற் றரித்தருளினரென்றும்,அதுவே யியற்கைப் பஸ்மமென்றும் வேதோபப்ரஹ்மணங்களான புராணாதிகள் கூறும். அவை எங்ஙனம் கூறினும் அது சிவபெருமானது தேகத்தினின் றொளிர்வதென்பதே சித்தமாம்.

செயற்கைப் பஸ்மமாவது அநாதி நிட்கள சொரூபராகிய பரமேஸ்வரன் சகளத் திருவுருவங் கொண்டு பராசத்தியைத் தோற்றுவித்து அம்முழுமுதற் றலைவியை நோக்கி, சிருஷ்டி—திதி—சங்காரம்—திரோபவம்—அநுக்ரகமென்னும் பஞ்சகிருத்தியங்களையும் நீயே செய்தருளுக எனக் கட்டளையிட்டனர். அதுகேட்ட அப்

பராசத்தியார், சிவபெருமானை வணங்கி, இறைவ! தமதாஞ்ஞை யின்படி பஞ்சகிருத்தியங்களையும் யாதோரிடையூறுமின்றி நடத்துவதற்குக் காப்பா(உபபலமா)கத் தேவரீரது திருவிலச்சினை (அடையாளம்) ஏதேனுந் தந்தருள்க வென்றனர். அஃதுணர்ந்த சிவபெருமான் தமது சிவாக்கினி வடிவிற்பூத்து விளங்குந் திருவெண்ணீற்றை ஆன்மகோடிகட்குஅநுக்கிரகிக்க வேண்டுமென்னுந் திருவருட்பாங்கினராய்த் தமது சத்தியோஜாதம்—வாமதேவம்—அகோரம்—தற்புருஷம்—ஈசானமென்னும் ஐந்து திருமுகங்களினின்றும் முறையே, பிருதிவி--அப்பு--தேயு--வாயு—ஆகாயமென்னும் ஐந்து தத்துவங்களையும், அத்தத்துவங்களினின்றும் நிவர்த்திகலை-பிரதிஷ்டாகலை--வித்தியாகலை--சாந்திகலை--சாந்தியாதீதகலையென்னும் பஞ்சகலைகளையும், அக்கலைகளினின்றும் நந்தை--பத்திரை--சுரபி--சுசீலை-சுமனை என்னுமைந்து பசுக்களையும் தந்தருளினர். அப்பசுக்களுள், நந்தை கபிலநிறமும், சுபத்திரை கருமைநிறமும், சுரபி வெண்மை நிறமும், சுசீலை புகைநிறமும், சுமனை தாமிரநிறமு முள்ளனவாய்ச் சிவலோகத்திலே சிவபெருமான் சந்நிதியில் வீற்றிருக்கும் திருநந்திதேவராகிய வீர இடபத்தின் இனமாய் அதனைச் சூழ்ந்திருந்தன. அவை தங்கியிருந்த ஸ்தானத்திற்குக் * கோபுரமென்றும், அவற்றிற்குக் கோமாதாக்களென்றும் பெயர் வழங்கும்.

பின்னர்ச் சிவபெருமான் தமது தேகத்திற் பூத்தொளிருந்திருவெண்ணீற்றிற்சிறிதெடுத்துத் திருநந்திதேவர்முன்னெறிய, அதைக் கண்ட நந்தியெம்பெருமான் அந்நீற்றைச் சிவப்பிரசாதமாய்க் கைக்கொண்டு மனக்களிப்புடனுட்கொண்டு தமது வீரியத்தை அப்பசுக்கள்பால் விட்டனர்.

அப்பசுக்கள் எம்பெருமான் திருமேனியிற்றோன்றிய திருவெண்ணீற்றின் அம்சங்கலந்த வீரிய விசேடத்தால் தமது கோமய மூலமாய், விபூதி—பசிதம்—பசுமம்—க்ஷாரம்—இரட்சையென்னும் ஐவகைப்பட்டவிபூதிகளை முறையே நல்கின. அவற்றிற் சிவபெருமான் சிறிதெடுத்துத் தமது திருநுதலிற் றரித்துச் சிறிது உமாதேவியார் திருக்கரத்திற்கொடுத்து இவ் விபூதியே யுனக்குக் காப்பாக விருக்கக்கடவதென்றனர். அதை யுமாதேவியார் மெய்யன்புடன் வாங்கித் தமது நெற்றியிலணிந்து பஞ்சகிருத்தியமும் புரிந்தனர்.

---

* கோ—பசு, புரம்—(அவை தங்கியிருக்கும்) கைலாயம்.

பின்பு சிவபெருமான் மகா மேன்மையமைந்த அக்கோமய விபூதியைப் பிரமன் விஷ்ணு முதலிய தேவர்களுக் கனுக்கிரகித்தது மன்றி, அத்தேவர்களின் வேண்டுகோளின்படி பூவுலகத்தவரும்பெறு மாறு திருவருள் சுரந்து மேற்படி கோமாதாக்களைத் திருப்பாற் கடலிற் பிறந்து பூவுலகிற் சிறிதுகாலஞ் சஞ்சரித்து வருகவெனக் கட்டளையுமிட்டனர். அவை அவ்வாறே தேவாசுரர்கள் அமிர்தபான நிமித்தம் திருப்பாற்கடலைக் கடைந்தநாளில் அதிலுற்பவித்து இவ் வுலகமெங்குந் தம்மினப் பசுக்களைப் பரவச்செய்து கோபுரஞ் சென் றிருந்தன. அத்தகைய கோமய விபூதியே செயற்கை விபூதியாம்

வைதிக விபூதியாவது வேதவிதிப்படி செய்யப்பட்ட அக்நி நிஷ்டோமாதி யக்நிஹோத்திராக்நியில் தஹிக்கப்பட்ட கோமய விபூதியாம். அது சிரௌதம், ஸ்மார்த்தம், லௌகிகமென மூவ கைப்படும்.

அவற்றுள், ஸ்ரௌதமாவது வேதமந்திர சம்பந்தமான யாகாக் கினிகளிற் றஹிக்கப்பட்ட கோமய விபூதியாம். அது புராதனி யென்றும், சத்தியோஜாதையென்று மிருவகையாம். அவ்விரண்ட னுள், புராதனியாவது பிரமதேவரது வேள்விக்குண்டத்தில் தஹிக் கப்பட்ட திருநீறும்; சத்தியோஜாதையாவது பிராமணர்கள் செய் யும் அக்கினி கோத்திராக்கினி, விரஜானலாக்கினி, ஔபாசனக்கினி முதலியவற்றில் தஹிக்கப்பட்ட திருநீறும்.

ஸ்மார்த்தமாவது ஸ்மிருதி சம்பந்தமான அக்நிஹோத்திர முதலிய அக்கினிகளில் விதிப்படி தஹிக்கப்பட்ட திருநீறும்.

லௌகிகமாவது உலகசம்பந்தமான பஜனக்கினியிற் றஹிக்கப் பட்ட திருநீறும்.

இம்மூன்றனுள், முன்னிரண்டும், பிராமணர்--க்ஷத்திரியர்-வை சியர் என்னு மிவர்கட்கும் பின்னொன்று (லௌகிக நீறு) ஏனை யோர்க்குமுரியதாம். வைதிக விபூதி கிடையாதபட்சத்தில் லௌ கிக விபூதியே யாவர்க்கு முரியதாம். இம்மூவகை விபூதியும் தம்மை யணிபவர்க்குப் புத்தி மாத்திரந் தரத்தக்கனவாம்.

சைவாக்நி விபூதியாவது சைவவிபூதி யெனவும், அசைவ விபூதியெனவு மிருவகைத்தாம்; அவற்றுள், சைவ விபூதியாவது இருவினையொப்பு மலபரிபாகமுற்ற சத்திநி பாதத்தவர்க்கும் சிவ தீட்சாவான்களுக்குமே யுரியதாய், சிவாகம சம்பந்தமான லோக தர்மிணி சிவதர்மிணி முதலிய தீக்ஷாக்கினிகளிற் றகிக்கப்பட்ட

திருநீறாம். அது கற்பம், அநுகற்பம், உபகற்பம் என மூவகைப் படும். இவற்றைக் கூறுவதன்முன், செயற்கைமுதலிய எல்லா விபூதிகளும் விளைதற்குக் காரணமாகிய கோமயத்தைத்தரும் பசுக்களின் மேன்மையுட் சிறிது கூறுதும்:—

## பசுக்களின் மகிமை.

சிங்கம்-யானை முதலிய மிருகங்கள் பலவற்றுள்ளும், பசுக்கள் மேன்மைபெற்று விளங்குதற்குக் காரணம் அவைமேலே செயற்கை விபூதியுட் குறித்தவண்ணம் சிவாமிசத்தாலுதித்தமையானும், தரும தேவதை வடிவாகிச் சிவபெருமானது திருமேனியிற் பூத்தவியற்கை விபூதியை யுட்கொண்ட வீர இடபத்தின் வீரிய சம்பந்தமடைந்து, சிவாஞ்ஞையால் திருப்பாற்கடலிற்றோன்றி, சமஸ்த தேவர்களுந் தந்தேகத்தில் வசிக்கப்பெற்று, சுத்தமாகிய தாவர பதார்த்தங்களையே புசிக்கும் பெரும்புண்ணிய முடையனவாய், சிவாபிஷேகம்-மற்றுந் தேவபூஜைகள்-வேள்விகள்-பிதிர்க்கருமங்கள்-சிவதீட்சைகள்-விரதங்கள்-விவாகமுதலிய சற்கிரியைகள்—அதிதி பூஜை முதலியவற்றிற்குப் பயன்படும் தயிர்-பால்-நெய்-கோசலம்-கோமய முதலிய பஞ்சகௌவியங்களையும், கோரோசனை யென்னும் விசேட பரிசுத்தப் பொருளையுந் தருவதானுமேயாம். இதனை "ஆவினுக் கருங்கல மரனைஞ் சாடுத" லெனச் சிறப்பித்தனர் திருநாவுக்கரசு சுவாமிகளும். இத்தகைய பசுக்களின் மேன்மையைக் காட்டுஞ் சரித்திரமொன்றுண்டு:—அஃதாவது முன்னொருகாலத்தில் மகாதபஸ்வீரட்டராகிய சௌனகமுநிவர் கங்கைப்புனலுள் மூழ்கிப் பன்னிரண்டுவருஷ மருந்தவஞ் செய்திருந்தனர். அஃதறியாத சில வலைஞர்கள் தங்கள் குலாசாரப்படி அவ்விடம்வந்து தங்கள் வலையை வீசினர். அவ்வலையிற் சில மச்சங்களோடு அம்முனிவரும் சிக்குண்டனர். அதுகண்ட வலைஞர்கள் பெருத்த மச்சங்கள் அகப்பட்டன வென்று களித்து வலையையிழுத்துக் கரையிற் கொணர்ந்துபார்க்க, மகரிஷியைக்கண்டு நாங்களறியாது செய்தபிழையை மன்னிக்க வேண்டுமென்றிரந்தனர். அதுகண்ட சௌனகர், நீங்களஞ்சுதலொழிக, உங்கள் குலாசாரப்படி வீசியவலையிற் கிடைத்த வென்னையும் மச்சங்கள்போலவே நினைத்து விற்றுவிடுங்களென்றனர். அவ்வலைஞரவரை விற்கமனமில்லாதவர்களாய் அந்நாட்டுக்கரசனுயிருந்த நகுஷ மகாராஜனுக்கு அதனை அறிவித்தனர். அவ்வரசன் உடனே சௌனகமுனிவரிடம்வந்து வணங்கித்துதித்து, வலைஞர் செய்த

பிழையை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ள, அம்முனிவர் அரசனே! என்னை மச்சமெனக்கருதிச் சந்தோஷித்த அவர்களெண்ணம் வீண்போகாமல் என் தேகத்திற்குண்டான விலையை இவர்க்குக் கொடுத்து என்னை மீட்டுக்கொள்கவென்றனர். அதுகேட்ட அரசன் வலைஞரை நோக்கி யிம்முனிவர்க்காக உங்களுக்கு ஆயிரம் பொன் தருகிறேன் அதைப் பெற்றுக்கொண்டு அவரை எனக்குக் கொடுத்துவிடுங்களென்றான். உடனே முநிவர் அரசனை நோக்கி நெடுந்தவம்புரிந்த இத்தேகம் ஆயிரம் பொன்ருனு விலைபெறுமெனவும், அரசன் பயந்து வலைஞரை நோக்கி இவர்க்கு விலையாக லட்சம் பொன் தருகிறேனென, அப்போதும் முநிவர் லட்சம் பொன்தானு விலை பெறும் அரிய மாதவம்புரிந்த இவ்வுடலின் விலை என்றனர். அதைக்கேட்டஅரசன் திடுக்கிட்டு நிதானித்து யாதொன்றுந் தோன்ருதவனுய், தன்னிடத்தன்புடைய கவிசாதரென்னு முநிவரை நினைக்க, அம்முனிவர் உடனே யரசனிடம் வந்து நடந்தவிர்த்தாந்தங்களை யறிந்து, அரசனே! இம்மகாநுபாவராகிய சௌநகருக்குப் பிரமதேவனு மீடாகமாட்டானெனின், லட்சம், கோடி முதலிய கணக்குள்ள திரவியங்களோ ஈடாகத்தக்கன: இத்தகைய மஹான்களுக்கீடாகத் தக்கபொருள்கள் பசுக்களும், விபூதி உருத்ராட்சதாரணராய் விளங்குஞ் சிவனடியார்களும், நல்லொழுக்கந்தவருத பிராமணர்களுமேயாம் ஆதலின், இத் தவஸ்ரேஷ்டருக்கு ஈடானபொருள். தருமவடிவான பசுகளைத்தவிர வேறில்லை. பசுக்களின் மகிமையை யறிந்துசொல்ல வல்லுநரெவர்? ஒருவருமில்லை. பசுக்களில்லாவிடிற் பதிதபாவனமென்பதே யில்லை. ஒருவன் ஒரு பசுவைச் சற்பாத்திரத்தில் தானஞ் செய்வானுயின், அப்பசுவினுடலிலிருக்கும் உரோமங்களொவ்வொன்றிற்கும் ஒவ்வோர்வருடமாக எத்தனை யுரோமங்களிருக்கின்றனவோ அத்தனைவருடகாலம் முத்தியுலகிற்றங்கி மேலான பயனைப் பெறுவானென வேதங்களியம்புகின்றன; அதிலுங் கபிலைப்பசுவின் தானம் உத்தமோத்தமமாம் என்றனர். அதுகேட்ட அரசன் அம்முனிவரை வணங்கிப் பசுக்களுள் கபிலைப்பசு விசேடமென்பதற்குக் காரணமென்னவோ? அதைத் தெரிவிக்கவேண்டுமென்றனன். அதற்கு முனிவர்பெருமான் சந்தோஷித்து அரசனே! ஒரு காலத்தில் அக்கினிதேவன் தேவர்கள்மேற் சினமுடையனுய்க் கபிலையின் வயிற்றில் மறைந்திருந்தனன். தேவர்களனைவரும் அக்கினியில்லாமையால் தத்தம் நித்திய கர்மங்களைச்செய்ய இயலாது வருந்தி அக்கினியை யெங்கெங்குந்

தேடியுங் காணுதவராய்க் கோபுரத்தில் வசிக்குஞ் சத்திய வாக்குடைய கபிலையைக்கண்டு, தர்மஸ்வரூபியே! அக்கினி பகவானைக் கண்ட்துண்டோவென வினவினர். அக்கபிலை தேவர்களே! அஞ்சாதீர்கள்; அக்கினிபகவான் என் வயிற்றிலிருக்கிறுனென் றுண்மையை வெளியிட்டது. உடனே அக்நிதேவன் வெளிப்பட்டுத் தேவர்கள் மேல் வெறுப்புற்றவனுயிருக்க, வானவரனைவரும் அவனுக்கு இதவார்த்தைகள் சொல்லி வேண்டும் வரங்களையுந் தந்து அவனை முன்போலுலகமெங்கும் வியாபித்திருக்கச்செய்தனர்; பின்பு கபிலையை நோக்கிப் புண்ணியரூபியே! உன்வயிற்றில் சர்வ பதார்த்தங்களையுஞ் சுத்திகரிக்கத்தக்க அக்கினி தேவன் வசித்திருந்தமையானும், உண்மையுரைத்தமையானும் எவ்வகைப்பட்ட பொருள்களையும் புனிதமாகச் செய்ய வல்ல மேன்மையுற்று நீ வாழ்கவென வாழ்த்திச்சென்றனர். இதனுல் கபிலை சிரேட்டமாய தென்றனர். அதைக்கேட்ட அரசன் அம்முநிவரை வணங்கித் தபோநிதியே! இப்பூலோகத்தில் அக்கபிலைப் பசுக்களின்னவெனத் தெரிந்துகொள்ளும் விதமும், மற்றும்பசுக்களின் மேன்மையும் விளங்கச் சொல்கவென்றுவனுடன் கேட்க, அம்முனிவர் நராதிபனே! பசுக்களெல்லாமொரு தன்மையவான வுருவுடையனவாகக் காணப்படினும் காது, கண், மூக்கு, சுரை (முலை) யென்னும் நான்குறுப்புக்களேனும் அல்லது அவற்றிலிரண்டோருறுப்புக்களேனும் கறுத்திருக்கின், அதுவே கபிலைப்பசு (காரா) என்றறிவாயாக. மேலும் பசுக்களினெவ்வொரு உறுப்பிலும் ஒவ்வொரு தேவதை வசிப்பதால் அவை சகல தேவதாசொரூபமெனப் பெரியார் கூறுவர், அத்தகைய பசுக்களைக் கோலரற்புடைத்தல், அவற்றின் முதுகில் பாரமேற்றுதல் முதலியன செய்தல் பாவத்திற்கிடமேயாம். அதிகாலையில் பசுக்களை நீராட்டி யவற்றின்முகத்திலும், வாற்புறத்திலும், விபூதி-மஞ்சள்-குங்குமம்-சுகந்த புஷ்பங்களைத்தரித்துப் பூசித்து வணங்குபவர் மேலான சற்கதியடைவார்கள். வேதவிதிகளைக் கடந்தவர்களும், கொலை களவு முதலிய கொடிய பாதகங்களைச் செய்தவர்களும், சிவநிந்தை சிவனடியார் நிந்தை குரு நிந்தை முதலிய மகாபாதகங்களைச் செய்தவர்களும், சிவத்திரவியங்கவர்ந்தவர்களுமாகிய அதிபாதகரும், பசுக்களைப் பூசித்து வணங்கி ஒருபிடி யறுகம்புல்லை உணவாகக் கொடுப்பாராயின், அப்பாதகங்களைக் கடந்து முத்தியுலகெய்துவர். * பசுபாலனம் புரிபவர்

---

* பசுபாலனம்—பசுவைக்காத்தல்.

அல்லது மேய்ப்பவர் தங்கையிற்கொண்ட பலாச (புனல் முருக்கு)க் கோலினுல் அப்பசுக்கள்வருந்தாவகை மெதுவாகவொற்றிக் 'கெச்ச நெறி' 'கெச்சநெறி' என்று மேன்மைச்சொற்களால் மெல்லென அதட்டி நடத்திக்கொண்டுபோய் முதுவேனிற்காலத்தில் குளிர்ந்த பெரிய மலைப்பக்கமுள்ளவனத்தில் தழைத்திருக்குஞ் சோலைப்பரப் புக்களிலும்,முன்பனி பின்பனிப்பருவங்களில் சூரிய கிரணம் பரந்து நிற்கும் பசும் புற்களடர்ந்த சுத்த வெளிப்பரப்புக்களிலும்,மற்றைக் கார்ப்பருவமுதலிய காலங்களில் துன்பமின்றி வசிக்கத்தக்க விடங் களிலும் மேய்த்து, மாலைக்காலத்தில் செங்கல், நதி, ஓடை,வில்வம், அரசு முதலியவற்றி னடிகளிலெடுத்த மண்ணுல் நாற்புறமுஞ் சுவர் கோலி, நாற்றிசையிலும் விதிப்படி வாயில்க ளமைத்து, சுண்ணச் சாந்தினுல் அழகுபெற நீவுதல்செய்து, மேன்முகடுவேய்ந்து, கிழ்த் திசைவாயிலி னிருமருங்கிலும் நந்தி—மாகாளரென்னுந் துவாரபால ரிருவர்க்கும், அதற்குக் கிழ்த்திசையில் துர்க்கைக்கும், தென்திசை யில் ஆனந்திற்கும், மேற்றிசையில் விநாயகர்க்கும், வடதிசையில் சந்திரனேடு இடபதேவர்க்கும் இடங்களமைத்துப் பிரதிட்டை செய்து, உட்புறத்தில் மும்மூர்த்திகளையுந்தாபித்து,முதிர்ந்த கன்று கள், இளங்கன்றுகள், ஆனேறுகள் முதலியவற்றிற்கு வெவ்வேறி டங்களமைத்து, நோய்கொண்டதும், சூல்கொண்டதுமாகிய பசுக் கட்கும், சாதாரண பசுக்கட்கும் வெவ்வேறிடங்களமைத்துத் தீப முதலியவைகளிட்டு அலங்கரித்த கொட்டிலுக்குள், 'சுவஸ்தி' என்று மங்கலவார்த்தையைச் சொல்லி மெல்லெனப் புகுவித்து, வேண்டும் புல் முதலிய ஆகார வஸ்துக்களில் கிடைத்தவற்றைக் குறைவின்றி யருத்தல்வேண்டும். பசுக்களைக்கட்டிப் புல் முதலியவைகள் போடா மல் புசித்தவர்கள் கொடிய ரௌரவநரகி லழுந்துவார்கள். அப்பசுக் கள் கறக்கும் பாலைச் சிவாலய மடாலயங்கட்கே யுபயோகப்படுத்தல் சிறந்த புண்ணியமாகும். அதிலும் கபிலைப்பசுவின் பாலைப் புசிப்ப வன் அதனுதிரத்தைப் புசித்தவனுவ னுதலால் அப்பால் முழுதை யும் தேவாலயங்கட்கே யுபயோகப்படுத்த வேண்டும். பசுக்களைப் போஷியாதவரும், அடித்து வருத்தினவர்களும், வேறு மிருகங் ளால் அவற்றிற்குத் துன்பம் நேருங்காலத்தில் தம்முயிரைக் கொடுத்தேனும் அவற்றைக் காவாதவரும், அவற்றின் முதுகில்பார மான சுமைகளிட்டவரும், நோய்வந்தகாலத்தில் பரிகாரந் தேடாத வரும் படுநரகடைவர். அப்பசுக்களின் மகிமையை யறிந்தே

சிவபெருமான், அவற்றின் ஏற்றைத் தமக்கு வாகனமாகவும், துவஜ மாகவும் கொண்டாரெனின், அவற்றின் மகிமையையறிந்து சொல்ல வல்லவர் யாவர்? ஆதலின், பசுக்களே அவர்க்கு ஈடான பொருளாகு மென்று சொல்ல, அதைக்கேட்ட அரசன் முநிவரை வணங்கி மாதவரே! தங்கள் வாக்கினுல் உலகப் பொருள்களுள், பிராம்மணரும் பசுக்களுமே சிரேஷ்டப் பொருள்களென அறிந்தேன். ஆயினும் ஒரு சந்தேகமுளது. அஃதாவது மேன்மைப் பொருள்களான பிரா மணர் முகத்திலும் பசுக்கள் முகத்திலும்மூதேவி வாசஞ்செய்கின்று ளென்று பலர் சொல்லக்கேட்டிருக்கிறேன்; அதனது உண்மையைக் கட்டளையிட்டருளவேண்டுமெனக் கேட்டான்; அம்முநிவர் நரேந்திரா! அதனுண்மையைக் கேளாய். பூர்வகாலத்தில் தவத்தில் வல்லவரான சுமித்திரரென்னும் பிராமண சிரேஷ்டர், பசுக்களினருமையை யறிந்து அன்புடையவராய்த் தமக்குச் சொந்தமாயிருந்த சில பசுக்களைத் தாமேமேய்த்துப் போஷித்துப்பூசித்து, அவற்ருேடுவிளையாடுவதும் அவைகளைப் போலவே நடப்பதுமாய் மாடென்றும் மனிதனென்றும் பேதமின்றிப் பழகிப் பாதுகாத்து வருங்காலத்தில் ஒரு நாள் ஒரு மடுக்கரையில் அவற்றை மேய்த்திருக்கையில், அம்மடுவில் அதிசௌந்தரியமுள்ள சில ஸ்ரீகள் நீர் விளையாட்டயர்வதைப் பசுக் கூட்டம் பார்த்துநீங்கள் யார்? வசிக்குமிட மெதுவெனக்கேட்க அம் மங்கையர் அப்பசுக்களை நோக்கி நாங்கள் பூர்வஜன்மத்தில் பசுக்களாயிருந்து யாகப் பசுக்களாய் உயிர்துறந்து இப்பெண் வடிவந்தாங்கிப் பசுலோகத்தில் வாழ்கின்ருேமென்றனர். அஃதுணர்ந்த மந்தைப் பசுக்கள் நாங்களும் பசு பதமடையச் செய்ய வேண்டுமென்ன அம் மங்கையர் நீங்களும் யாகப் பசுக்களாய் உபிர்துறப்பீராகில் பசுபதமடைவீர்களென, அப்பசுக்கள் அவ்வாறே உயிர்விடக்கருதி, நம்மை யிதுவரையில் பாதுகாத்துவந்த முநிவரைவிட்டுப் பிரிதல் அழகல்ல அவரையும்நம்முடனழைத்துச்செல்வோமெனின், அவர்வருவது அரிதாம்; ஆதலின், அவரைவலியக்கொன்றேனும் நம்முடன் கோலோகம் அடையச்செய்யவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு முநிவரிடம் சென்று அவர்முகத்தைப்பார்த்துச் சொல்வதற்குங் கொல்வதற்கும் அஞ்சி யொதுங்கின. அதைக்கண்ட அவ்வூர்ப் பசுக்கள் மந்தைப் பசுக்களைப் பார்த்து நீங்களேனஞ்சுகிறீர்கள், வேண்டுமானுல் நாங்கள் கொன்றுவிடுகிருேமென, அதற்கிசைந்து அம்மந்தைப்பசுக்கள் மறுபடியும் முநிவரிடஞ்சென்று தாங்களிதுவரையில் எங்களைப்

பாதுகாத்தமைக்குப் பிரதி பலனாக எவர்க்கும் கிடைத்தற்கரிய பசுபதந் தருகிறோம்; வருகிறீராவெனக் கேட்க, அதுகேட்ட முனிவர் அப்பசுக்களின்மேல் கோபங்கொண்டு முகத்தைச் சுளித்துக் கடுகடுத்தனர். பிராம்மணகுலத்திற் பிறந்து வேத ரகசியங்களையும் பசுக்களின் மேன்மைகளையு முணர்ந்தவராயிருந்தும், நன்மை கூறிய பசுக்களை முகஞ்சுளித்துச் சினந்தமையால், ஒருவன்செய்த பாதகம் அவன் வமிசத்தையும் பற்றுமென்னும் பெரியோர்வாக்கின்படி அது முதல் அவர்முகத்திலும் மற்றைப் பிராமணர் முகத்திலும் மூதேவி வாசமாயினள். அது கருதியே பிராம்மணர் பிராதக்கால ஸ்நானம், காயத்திரி மந்திர ஜெபம், அக்நிஹோத்திர முதலியவற்றைச்செய்து தம்முகத்தில் பிர்ம்மதேஜஸை விளைவித்துக்கொள்கின்றனர். நித்திரைவிட்டு எழுந்திருக்கும்போது அவர்கள் முகத்தில் மூதேவி பிரசன்னமாயிருப்பாள்; ஆதலின், மேற்கூறிய நித்தியகர்மக்கிரியைகளைப் பிராதக்காலத்தில் முடித்துக்கொண்டே பிராம்பணர்கள் மற்றவரெதிரில் வரவேண்டுமென்று தேவ வசனமுமுண்டாயிருக்கிறது. அது நிற்க, மேற்கூறிய சுமித்திர முநிவர் வைதிகப்பசுக்களின்மேல் கடுகடுத்தலும் அதைப்பார்த்திருந்த அவ்வூர்ப்பசுக்கள் அவர்மேற் பாய்ந்து அவரைமாய்த்தன. அவரது பிராணன் பசுலோகவாசிகளெதிர்கொண்டழைப்பக் கோபுரஞ்சென்றது. உடனே அம்மந்தைப் பசுக்கள் அந்நகரையாளும் அந்திராஜன் வேள்விக்குரிய யாகப்பசுக்களாய் உயிர்நீங்கி ஆனுலகடைந்து தம்மைப் போஷித்துவந்த சுமித்திர முநிவரையும் அவரைச்சார்ந்தவர்களையும் ஆங்குக்கண்டு வணங்கிப் புனித ஜன்மமடைந்து சுகித்திருந்தன. இனிப்பசுக்களின் முகத்தில் மூதேவி வசிப்பதற்குக் காரணம் கூறுகின்றோம்; கேள்: விந்திய பர்வதச் சாரலில் ஒரு பிராமண சிவயோகியானவர் நெடுநாள் தவஞ்செய்திருக்கையில் அவர் திருமேனியில் புற்றுக்களுண்டாயின; அப்புற்றினின்றும் அண்டமுகடளாவ மூங்கில்கள் வளர்ந்திருந்தன; அம்மூங்கிலைக் காமதேனுவென்னும் பசு நாவினால் நக்கிநக்கியம்மூங்கிலையசைப்பித்து வருகையில் அம்முநிவருக்குஉபத்திரவமுண்டாய் 'சீ சீ மூதேவி' என்று திரும்பிப் பார்த்துரைத்தனர். அப்பெரியோர் வாக்கு வீண்போகாதபடி அதுமுதல் பசுக்களின் முகத்தில் மூதேவி வாசஞ்செய்யலாயினளென்று கவிசாத முநிவர் சொல்ல, நகுஷமகாராஜன் கேட்டு மனமகிழ்ச்சியுடன் சௌநக முநிவரிடம் வந்து வணங்கி, சுவாமி தங்களுக்கிடான பொருள் பசுவேயன்றி வேறொன்றுங்காணேன்; தங்கள் கட்டளைப்படி நடந்துகொள்கிறேனென்று விண்ணப்பஞ்செய்ய, அம்முநிவர்கோமான் முகமலர்ந்து, இதுதான் என் தவவுடலுக்குத் தக்க விலையென்று மகிழ்

வுடன் சொல்ல, அரசன் உடனே அவ்வலைஞர்க்கு ஒரு கபிலைப் பசு வைக்கொடுத்து முனிவரை மீட்டனன். அவ்வலைஞரோ அச்செள நகரை வணங்கி, விருப்பு வெறுப்பற்ற மகானுபாவரே! அடியேம் கடைத்தேறுமாறு இக்கபிலையைத் தானமாக அங்கீகரிக்கவேண்டு மென்றனர். அம்முனிபுங்கவர் அவ்வலைஞர்மேல்வைத்த ஜீவகாருண் ணியத்தால் அதனை யேற்றுக்கொண்டு அவர்கட்கு அனுக்கிரகஞ் செய்யப்புகுஞ்சமயத்தில் அம்முனிவருடன் வலையிற்சிக்கிய மீன்கள் தேவரூபமடைந்து முனிவரைத்துதித்து நின்றன. முனிவர் வியந்து 'தேகத்துடன் சுவர்க்கம் அடைக, என ஆசீர்வதித்து, வலைஞரை நோக்கி'நீங்கள் எனக்குக் கோதானஞ்செய்தபடியால் உங்கள் குடும் பத்துடன் சற்கதி யடைக' எனக் கட்டளையிட்டு நகுஷ மகாராஜ னைப்பார்த்து 'அரசனே! நீயென்னுடலுக்கு விலைகொடுத்து அதனை மீட்டமையால் தேவேந்திரனுக, என வரங்கொடுத்துத் தாம் தவ மேற்சென்றனர். எவ்வகை விபூதிகட்கும் காரணமாகிய பசுக்களின் மேன்மை யித்தன்மையதாம்.

## கோமயவிசேடம்.

அநாதி முத்த நின்மலனுகிய பரமேஸ்வரன்; பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவமென்னும் பஞ்சமூர்த்திகளா னும்முறையே சங்கரிக்கப்படுகின்ற நிவிர்த்தியாதி பஞ்சகலைகட்குட் பட்ட தத்துவபுவனங்களின் சங்காரங்களாகியபிர்மாண்டப்பிரளயம், பிராகிருதப்பிரளயம், மத்திமப்பிரளயம், மகாப்பிரளயம்,ப்ரதமமகா ப்பிரளயம் என்னும் ஐவகைய சங்காரங்களுள் சுத்தமாயாபுவனுந்த மட்டுஞ் சங்கரிக்கப்படுகின்ற அமையத்து அனுசாதாக்கியரிறுதியா கவுள்ள தேவர்களது உடலங்களையெல்லாம் தாம்தமது பாலநேத்திர த்தினின்றும் தோன்றிய ஓர் தீப்பொறியினல் தகித்துச் சாப்பாக்கி அதனைத் தமது திருமேனிக்கண் விரவப்பூசிவிளங்கினர்; பின் தம் போல் ஆன்மகோடிகளும் தரிக்கத் திருவுளங்கொண்டு, இரண்டு கொம்புகளின் அடியில் பிரமவிஷ்ணுக்களும், இரண்டுகொம்புகளுக்கு மிடையில் (அஃதாவது சிரத்தில்) சிவபெருமானும், நெற்றிநடுவில் உமாதேவியும், நெற்றியின் இருமருங்கிலும் விநாயகரும் குமரக்கட வுளும், கொம்புகளின் நுனியில் கோதாவிரிமுதலிய திவ்வியதீர்த்தங் களும் சராசரப்பொருள்களும், நாசி நுனியில் வீரபத்திரரும், நாசித் துவாரங்களில் அஷ்டவித்யேஸ்வரர்களும், இரண்டு காதுகளில் அசுவனிதேவர்களும், இரண்டு கண்களில் சந்திரசூரியர்களும், பற் களில் வாயுக்களும், நாவில்வருணதேவனும், உதடுகள் இரண்டிலும்

பிராம் ஹ்ரி-ரௌத்திரியென்னும் சந்தியாதேவதைகளும், ஊங்காரத்தொனியில் சரஸ்வதியும், மணித்தலத்தில்(கபோலத்தில்) இயமனும் யட்சர்களும், கழுத்தில் இந்திரனும், முரிப்பில் பன்னிரண்டு சூரியர்களும், மார்பில் சாத்தியரும், கால்களில் அநிலனும், முழந்தாள்களிலும் குளம்புகளின் நுதியிலும் நாகர்களும், அவற்றின் அடியில் கந்தர்வர்களும், அவற்றினடுவில் அரம்பையர்களும், முதுகில் ஏகாதசருத்திரரும், கணுக்களில் அஷ்டவசுக்களும், கொங்கைகளின் அடிப்பரப்பில் பிதிரர்களும், அவற்றின் நுனியில் கடல்களும், அவற்றின் நடுப் பாகத்தில் அமுதகூபாளர்களும், யோனியில் சத்தமாதர்களும், முகத்தில் இலக்குமியும், வாலில் ஆதிசேஷனும், வால் உரோமங்களில் ஆத்திகரும், கோசலத்தில் ஆகாயகங்கையும் சூரிய கிரணங்களும், கோமயத்தில் யமுனையும், உரோமங்களில் நாற்பத்தெண்ணுயிர மகருஷிகளும், வயிற்றில் பூமிதேவியும், ஜடராக்நியில் கார்ஹபத்தியாக்நியும், இருதயத்தில் ஆகவனியாக்கினியும், முகத்தில் தக்ஷிணாக்கினியும், அஸ்திகளில் அக்நிஷ்டோமாதியக்ஞங்களும், சுக்கிலத்தில் யாகோபகரணங்களும், மற்றைய உறுப்புக்களில் கற்புடைய மடவாருமாகச் சமஸ்ததேவர்களும் வசிக்கப்பெற்ற பசுக்களின் சாணத்தை விதிப்படி தகித்து அத்திருநீற்றை யணிய விதித்தனர். ஆதலின்,விபூதி யுற்பத்திக்கு மூலமாயும், சிவார்ச்சனைக்குரிய வில்வம்—நீலோற்பல முதலிய வற்றினுற்பத்திக்குக் காரணமாயும், இலக்குமிக்கு வாஸஸ்தானமாயும், எவ்விதமாய ஆசூசங்கள்—உச்சிட்ட தோஷங்கள்-அசுத்தங்கள் முதலியவற்றையும் நீக்கிச் சுத்திகரிக்கவல்லதாயும், யமுனாநதி வசிக்கப்பெற்றதாயும், சர்வான்மாக்களும் உஜ்ஜீவிக்க ஹேதுவான பயிர், பூண்டு, செடி, கொடி, விருட்சமுதலியவற்றைச் செழிப்பிக்கவல்லதாயுமிருப்பது கோமயமேயாம்.

## கோமயப்பசு.

விபூதி விளைவிப்பதற்குக் கோமயங் கொள்ளுங்கால், கன்றீன்று பத்து அல்லது பதினைந்துநாள் சூதகமுள்ளதும், முதிர்ந்த கன்றுள்ளதும்,இரட்டைக்கன்றீன்றதும், கன்றீனாததும், நோய்கொண்டதும்,முதிர்வயதுள்ளதும், மலடானதும், பவ்வீநுகர்வதும், சினைப்பட்டதும், வாய் காது கொம்புகள் அறுப்புண்டதும், சரிந்த முரிப்புள்ளதும், மதங்கொண்டதும், குருடு செவிடு முடம் முதலிய அங்கஈனமானதுமாகிய பசுக்களை நீக்கி; கன்றுள்ளதும், தேகபுஷ்டியுள்ளதும், ரூபலட்சணமுள்ளதும், நடுத்தர வயதுள்ளதும், மங்களகரமான உருவுள்ளதுமாகிய பசுக்களுள், பிராமணர் வெண்ணிறப்பசு

வினும், க்ஷத்திரியர் செந்நிறப்பசுவினும், வைசியர் பொன்மை அல்லது பல நிறப்பசுவினும், சூத்திரர் கருநிறப் பசுவினும் அதனைக் கொள்வது உத்தமமாம்; அந்நிறப்பசுக்கள் நேராவிடில் எந்நிறப் பசுவினும் கொள்ளலாம்.

## கோமய மேடுக்கும் காலமும் மந்திரமும்.

பங்குனி மாதத்தில் பசானமென்னும் நெல்லினது தாளை மேய்ந்த தோஷரகிதமான பசுக்களினிடத்தில் அஷ்டமி-சதுர்த்தசி-பௌரணை-அமாவாசை முதலிய திதிகளிலும், கிரகண காலத்திலும், ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்த்திய மடி அல்லது பட்டு வஸ்திரம் தரித்து விதிப்படி நித்தியானுஷ்டானமுடித்துப் பசுக் கோட்டத்துட்சென்று, கோமயமேற்கக் குறித்தபசு* கபிலநிறப்பசுவாயின் 'ஓம் கபிலே நந்தே நம:' என்றும், கருநிறப் பசுவாயின் 'ஓம் கபிலே பத்திரே நம:' என்றும், புகைநிறப்பசுவாயின் 'ஓம் கபிலே சுசீலே நம:' என்றும், வெண்ணிறப் பசுவாயின் 'ஓம் கபிலே சுரபே நம:' என்றும், செந்நிறப்பசுவாயின் 'ஓம் கபிலே சுமனே நம:' என்றும் அதற்கு விதித்த மந்திரங்கூறி, மஞ்சள்-சந்தனம்-குங்குமம் புஷ்பம் முதலியன வணிந்து, நைவேத்திய தாம்பூலங்கள் வைத்துத் தூபதீபங்கள் கொடுத்து, திருப்பாற்கடலிற்றோன்றி தேவவடிவாக விளங்கி ஆன்மாக்களின் எவ்வகைத் துன்பங்களையும் நீக்க வல்ல பயோதரத்தையுடைய கோமாதாவே! இதனை ஏற்கவென்று ஒரு பிடி அறுகம்புல்லேனுங் கொடுத்து, கோசாவித்திரி மந்திரத்தை நூற்றெட்டுருச் செபித்துத் துதித்துப் பின்னரே கோமயத்தைக் கொள்ளல்வேண்டும்.

## கோமயம் ஏற்கும் முறை.

கோமயம் ஏற்கும் வகை; சாந்திகம், பௌஷ்டிகம், காமதமென மூத்திறப்படும். அவற்றுள், சாந்திகமாவது கோமயமிடுகையில் பசுவின் குதத்தானப் பிற்றட்டிலே கைவைத்தேற்பது. பௌஷ்டிகமாவது சாணம் பூமியில் விழுமுன் தாமரையிலை, பலாசிலை, வாழையிலை ஆகியவற்றிலொன்றி லேற்றுக்கொள்வது. காமதமாவது பூமியில் விழுந்தபின் மேல் வழும்பு முதலியவற்றை நீக்கி நடுவிலுள்ளதை எடுத்துக்கொள்வது. இவற்றுள், பௌஷ்டிகம் - உத்தமம், சாந்திகம்-மத்திமம், காமதம்-அதமமென்றறிக.

* கபிலநிறம்—கருமைகலந்த பொன்னிறம்.

## சைவ விபூதியுள் கற்ப விபூதி.

மேற்குறித்த சைவ விபூதி மூன்றனுள், கற்ப விபூதியாவது மேலே கோமயமேற்கு முறையிற்கண்ட பௌஷ்டிக விதிப்படி சத்தியோஜாத மந்திரோச்சாரணத்துடனெடுத்த கோமயத்திலுள்ள மேல் வழும்புகளை நீக்கி அதனோடு,நொச்சி,விளா,கூவிளம்,கிளுவை, மாவிலிங்கமாகிய பஞ்சவில்வங்களையுஞ் சேர்த்தல் வேண்டும். பால் ஐந்துபலமும், தயிர் மூன்றுபலமும், நெய் இரண்டுபலமும், கோசலம் ஒருபலம், கோமயம் அங்குஷ்டப்ரமாணமும் சேர்த்து விதிப் படியமைத்த பஞ்சகௌவியத்தை 'ஓம் வாமதேவாய நம:' என்று விட்டு, 'ஓம் அகோராய நம:' என்று மெதுவாப் பிசைந்துருட்டி, சம்பா நெற்பதர் அல்லது உமியைச் சுத்தமான ஸ்தானத்திற் பரப்பி,அதன்மேல் அவ்வுருண்டைகளை வைத்து,மேலுமவற்றையே பரப்பிச் சிவாக்கினியால் தகித்து எடுப்பதாம். கோமயமேற்ற தினமே உருண்டைசெய்து தகித்த லுத்தமோத்தமமாகும்; உலர்ந் தபின் தகித்தலுமாம். நன்றாய் வெந்து விளைந்த விபூதியை எடுக் குங்கால் கருநிறவிபூதி வியாதியைத் தருமெனவும், செந்நிற விபூதி புகழைக் கெடுக்குமெனவும், புகைநிற விபூதி ஆயுளைக் குறைக்கு மெனவும், பொன்னிற விபூதி செல்வத்தைக் கெடுக்குமெனவும் அறிந்து அவைகளை நீக்கி வெண்ணிற விபூதியையே யெடுத்தல் வேண்டும். பஞ்சவில்வஞ் சேர்க்காமலும் செய்யலாம் என்பது ஆகமபேதமாம்.

## அநுகற்ப விபூதி.

அநுகற்பவிபூதியாவது சித்திரைமாதத்திலே பசுக்கள் நிற்கும் மந்தையிற்சென்று உலர்ந்துள்ள கோமயங்களைக்கொணர்ந்து ஓரிடத் தில் குவித்து உரலிலிட்டுப்பொடித்து வடித்து, அதிலே கோசலத் தை 'ஓம்வாமதேவாய நம:' என்று விட்டுப்பிசைந்து, 'ஓம் அகோ ராயநம:' என்று உருட்டி, சம்பாப்பதர் அல்லது உமியின் நடுவில் 'ஓம் தத்புருஷாய நம:' என்று வைத்து முன்போல் தகித்து, 'ஓம்ஈசாநாய நம:' என்றெடுப்பது அநுகற்பவிபூதியாம். இங்ஙன மன்றிப் பஞ்ச வில்வங்களைச் சேர்க்காமல் கற்பவிதிப்படி விளைவிக் கும் விபூதியையே அநுகற்பமென சில ஆகமங்கள் கூறும்.

## உபகற்ப விபூதி.

மேற்காட்டிய கோமயங் கிடையாதபோது காட்டில் மரங்களொன்றோடொன்றிணைந்து உராய்வதால் தானே யுண்டாகிய அக்கியினல் வெந்துவிளைந்த சாம்பரையேனும், அல்லது செயற்கையாயுள்ள குயவன் சூளை—செங்கற்சூளை முதலியவற்றின் சாம்பரையேனுமெடுத்து, 'ஓம் வாமதேவாய நம:' என்று பஞ்சகௌவியமிட்டுக் கலந்து, 'ஓம் அகோராய நம:' என்று பிசைந்து உருட்டி, பதர் அல்லது உமி நடுவில் 'ஓம் தற்புருஷாய நம:' என்று வைத்து, சிவாக்கினியில் தகித்து 'ஓம் ஈசாநாயநம:' என்றெடுப்பதே உபகற்பவிபூதியாம். அநுகற்பததுக்குப் பஞ்சகௌவியமும் உபகற்பத்துக்குக் கோசலமும் விட்டுப் பிசைகவெனவும் சில ஆகமங்கள் கூறுகின்றன. அங்ஙனமன்றி மேல் அநுகற்பவிதிப்படி செய்வதையே உபகற்பமெனவுங் கூறுவர்.

## அசைவ விபூதி அல்லது அகற்ப விபூதி.

அசைவவிபூதியாவது எவ்வகை விபூதியுங் கிடையாவிடத்து இடிவிழுந்த இடத்துண்டாகிய விபூதியையும், மலையுச்சியிலும் * பூமியிலும் யாதொரு காரணத்தினுலேனு முண்டாயிருக்கும் விபூதிகளையும் தரிக்கலாம். அதுவே அகற்ப விபூதியென்பர். இவ் விபூதியைத் தரிப்பதானல் பஞ்ச கலா மந்திரங்களாலும், சிவமூல மந்திரத்தாலும், சுத்திசெய்தே தரிக்கக்கடவர். இவ்வகையன்றி அதீட்சதர்களால் செய்யப்பட்ட விபூதியை அகற்பமெனக் காமிகங்கூறும். இச்சைவ விபூதிகள் புத்தி முத்திக ளிரண்டையுந் தருவதன்றி, தீராத கர்ம நோய்களையும் பூதப்ரேத பைசாசாதி கணங்களாலுண்டாகுந் துன்பங்களையும் அறவே யொழிக்கும்.

---

* பூமியில் விபூதி விளையுந்திருத்தலங்கள் பலவுள:—அவை கோயம்புத்தூரைச் சார்ந்த மருதமலை, பேரூர் அல்லது மேலைச் சிதம்பரம், திருக்குறுக்கை, திருநீற்றுமலை, திருவண்ணாமலை, வில்வாரண்யம், திருவிராமேச்சுரம், கதிர்காமம், திருவாவினன்குடி, கங்காநதிக்கரையிலுள்ள பற்பல க்ஷேத்திரங்கள் முதலியன. அவ்விபூதிகள் மிக்க மகிமையுடையனவாய் புத்தி முத்திகளைத் தருவதன்றித் தீராத கர்மநோய்களையும், பூத பைசாசங்கள் முதலியவற்றால் வரும் துன்பங்களையும் போக்கும்

## * விபூதிப் பேட்டகம்.

மேற்கூறிய வைதிக சைவ விபூதிகளைப் பரிசுத்தமாகிய புதிய மட்பாத்திர முதலியவற்றில் வெண்மையாகிய புதிய வஸ்திரங் கொண்டு வடித்துச் சங்கிலேனும், பொன்-வெள்ளி-பித்தளை தாமிரம்-மண் முதலிய பாத்திரங்களிலேனும், சுரைக்குடுக்கையி லேனும் வைத்து, அகில், சண்பகம், புன்னாகம், பலாசு, சிறு சண் பகம், பாதிரி, தாமரை, மல்லிகை, முல்லை முதலிய புஷ்பங்களும், வெட்டிவேர், விலாமிச்சைவேர், தக்கோலம், அபாமார்க்கமென்னுஞ் செந்நாயுருவி, தருப்பைநுனி முதலியவைகளையும், சத்தியோஜாதாதி பஞ்சப் பிரமமந்திரம் கூறிக் கலந்து, அவ்விபூதியைச் சிவ ஸ்வரூப மாகப் பாவித்து, பஞ்சப்பிரமம், சடங்கம், ப்ராசாதமூலம், விபூதி காயத்திரி முதலிய மந்திரங்களை உச்சரித்து, சுத்தவஸ்திரத்தால் பரிவட்டமிட்டுக் கவசத்தால் அவகுண்டனமும், அஸ்திரத்தால் திக்பந்தனமும், மூல மந்திரத்தால் தேனு முத்திரையும் கொடுத்து சுத்தமான ஸ்தானத்தில் வைத்து, வேண்டும்போது சிவமூல மந் திரோச்சாரண பூர்வகமாகச் சிறிதெடுத்து, மான்தோல், புலித்தோல் பட்டு வஸ்திர முதலியவற்றால் எட்டங்குல அகலமும், பன்னிரண் டங்குல உயரமும், வாய்வட்டமுமுள்ளதாக அமைத்த விபூதிப்பை யிலேனும், பஞ்சலோகச் செயற்கையால் அமைத்த சம்புடத்தி லேனும், வில்வம், சுரை முதலிய குடுக்கைகளிலேனும், பொன் முத லிய லோகங்களினாலாவது வில்வம்-அசோகு-சந்தனம்-தேவதாரு-குங்குமம்-மா முதலிய மரங்களினாலாவது ரிஷபமுகம்-சிங்கமுகம் மயூரமுகம் இவைகளுள்ளனவாக அமைத்த ஆதாரங்களிலேனும் வைத்துக்கொள்ளல்வேண்டும்; குடுக்கைகளிலன்றிப் பிறவற்றி லுள்ள விபூதியைக் கவிழ்க்கலாகாது; கவிழ்க்கின் கவிழ்ப்பவர் ரௌரவாதிய நரகிற் புகுவரெனச் சிவாகமங்கள் கூறுகின்றன. விபூதிப்பைகளுள் தோலினால் செய்யப்பட்டவை, நைஷ்டிகப் பிரம சாரிகட்கும் நால்வகை சந்நியாசிகட்குமே யுரியன.

## விபூதியின் பேயர்.

"சத்யோஜாதாதவிபூதிச்ச வாமாத்பஜிதமேவசா-அகோராத் பஸ்மஸம்ஸா தத்புருஷாத் க்ஷாரநாமச" என்றற்றொடக்கத்து ஆகம

---

* விபூதி சிவஸ்வரூபம், பெட்டகம் சத்திஸ்வரூபம், கயிறு பிரமஸ்வ ரூபம் என ஆகமங்கூறும்.

வசனப்படி சிவபெருமானுடைய ஐந்து திருமுகங்களினின்றுந் தோன்றிய காரணத்தால், விபூதி, பசிதம், பஸ்மம், க்ஷாரம், இரக்ஷை எனப் பெயர்பெறும்.

அவற்றுள், விபூதி என்பதன்பொருள் வி-மேலான, பூதி-பஸ்மம் எனப்படும்; எனவே, தன்னை யணிந்தவர்களின் சர்வ பாவங்களையும் நீருக்கவல்ல திருநீறு என்பது இதன் திரண்டபொருள், இதனை "அசத்த: ஸமயாசாரே மநஸாபாப மாசந்ஸ்ஸஞ்சிரேவபவேந் நித்யம் த்ரிபுண்டரஸ்யது தாரணாத்" என்னும் ஸ்மிருதிஸார சமுச்சயத்தாலும், "நீறுபுனை வார்வினைபை நீறுசெய்த லாலே, வீறுதனி நாமமது நீறெனவிளம்பும்" என்னும் பிரமாணத்தாலுமறிக. அன்றியும், விபூதி என்பதற்கு வி-மேலான, பூதி-ஐஸ்வரியம் எனப் பொருள்கூறி தன்னை யணிந்தவர்களுக்கு நித்தியமான மகதைஸ்வர்யத்தைத்தரத் தக்கதெனவும் பொருள்கொள்வர். ஈண்டைஸ்வர்யமென்பது, ஐஸ்வர்யங்கள் எவற்றிற்கு மேலாகவும், நித்தியமாகவும் விளங்கும் சிவசாயுச்யப்பேறாகிய மகதைஸ்வர்யமேயாம். இங்ஙனமாக, "பூதயைகம் ப்ரமதிதவ்யம்" என்னும் யஜுர்வேதம் தைத்திரீயோப நிஷத்வாக்கியத்திலுள்ள பூதி யென்னுஞ் சப்தத்திற்கு ஒரு சாரார் அநித்திய திரவியமாகப் பொருள் விரிப்பர். அது சுருதி யுக்திகட்கொவ்வாமையேயாம். எனெனில், வேதத்திற்கண்ட கர்மகாண்டம் ஞானகாண்ட மென்னும் இருபிரிவினுள் மேற்குறித்த மகாவாக்கியம் ஞானகாண்டத்தி லுத்கோஷிக்கப்படுதலாலும், அஃது அநித்யமாகிய செல்வத்தை விரும்பும்படி விதியாதலாலும், மேற்கண்ட பூதிசப்தத்திற்குப் பஸ்மபரமாகப்பொருள் விரிப்பதே தகுதியென்க. மேலும், விநாயக னென்னுஞ் சப்தத்திற்குத் தனக்குமேல் ஒரு நாயகனில்லாதவன் எனப் பொருள் கொள்வதுபோல, விபூதியென்னும் சப்தத்திற்குந் தனக்குமேல் ஒரு ஐஸ்வர்யமுமில்லாதது எனப் பொருள் கொள்ளக்கிடத்தலின், தானே பரமைஸ்வர்யமாயுள்ளதென்பது ஏற்படும். ஆதலின், மோட்சசாம்பிராச்சியமாகிய பெருஞ்செல்வத்தைத் தரத்தக்க தென்பதே அதற்குச்சிறந்தவுரையாம். அன்றியும், விபூதி யென்பதற்கு வி-சிவபெருமான்; பூ-பாவனை; தி-அடைதல் எனப்பொருள்கொண்டு அது சிவத்வபாவனையை விளக்கும் இயல்புடையது எனவும் ஆகமங்கள் கூறும். இவ்வுண்மையை, "வேர்ப்பா நம்ய தோக்கியேஷா திக்நோதீதி விபூதிஹி, தஸ்மாத்சிவாத் மகத்வம்ச விபூதே: கீர்த்தியுதே சதா" என்னும் வாதுளாகமவாக்கியத்தாலு முணர்க.

பஸ்மம்: இது பஸ் என்னும் தாதுவினடியாகப் பிறந்ததாய் வறுத்தலென்னும் பொருளுடையதாம்; விபூதி-பாவம், ரோகம், மாயாபாசம் முதலியவற்றைத் தகித்து நீறுக்கலால் பஸ்மம் (பற்பம்) என்று சொல்லப்படும்; இது தமிழில் நீறெனவழங்கப்படும். மேல் விபூதி, பாவ முதலியவற்றை நீறுக்கி யொழிக்கவல்லதென்றமையால், அவை யொழிந்த விடத்துண்டாகும் மோட்ச சாம்பிராச்சியத்தைத் தருவதென்பதே அதன் பொருளாம்.

பசிதம்: இது பஸ் என்னும் தாதுவிற் றோன்றியதாய்ப் பிரகாசமென்னும் பொருளுடையதாம்; விபூதி-பாவம், ரோகம், மாயா பாச முதலியவற்றைப் போக்கிச் சிவத்துவத்தைப் பிரகாசிக்கச் செய்வதால், பசிதமென்று சொல்லப்படும்.

க்ஷாரம்: இதுக்ஷர என்னுந் தாதுவிற்றோன்றியதாய்ச்* சலனமென்னும்பொருளுடயதாம். விபூதி தன்னை யணிபவர்களின் மலமாசுகளையும், நோய் முதலியவற்றையும், சர்வ விபத்துக்களையும் அறவே களைந்து, நற்கதியைத் தருவதால் க்ஷாரமென்று சொல்லப்படும்.

இரட்சை: இது ரக்ஷ என்னுந் தாதுவிற்றோன்றிய தாய்க்†காத்தலென்னும் பொருளுடையதாம். விபூதியானது பூத வேதாள பைசாசங்களாலுண்டாகும் பயத்தையும், பற்பல தேவதைகளைக்கொண்டு அதர்வண வேத மந்திர பலத்தால் நடத்தும் ஏவல் முதலிய அஷ்டகர்மக்கிரியைகளாலுண்டாகும் அச்சங்களையும், பழிபாவங்களையும், அறியாமையால் வருந்தீங்குகளையும்போக்கி இரட்சிப்பதால்இரட்சை எனப்படும். மேலும், இவ்விபூதியைத் தமிழ்நூலார் நீறு எனவும், மங்களகரமான அடைமொழி சேர்த்துத் திருநீறு எனவும் கூறுவர். இதன்பொருள் தன்னையணிந்தவர்களின் சகல வினைகளையும் நீறுபடுத்துவதென்பதாம்; எனவே வினையறுங்காலத்து முத்தியடைதல் திண்ணமாதலின் மோட்சப்ரதாயகமா யுள்ளதென்பதே இதன் பொருளாம்; இதனை 'நீறுபுனைவார்' என மேற்காட்டிய செய்யுளாலுணர்க. ஆகவே, சமஸ்த விபூதிகளின் தத்துவப்பொருளையெல்லாம் ஆராயுங்கால், யாவும் சிவசாயுச்சியப் பேற்றைத்தரவல்லனவென்பதே அவற்றிற்குப் பொருளாதலறிக.

---

* சலனம் - ஈண்டுத் தள்ளுதல்.

† காத்தல் - பாலனம்.

மேற்குறித்த ஐவகை விபூதிகளுள், விபூதி - நித்தியக்கிரியைகட்கும், பஸ்மம்-நைமித்திகக் கிரியைகட்கும், பசிதம்-காமியக் கிரியைகட்கும், க்ஷாரம்-பிராயச்சித்தக் கிரியைகட்கும், இரட்சை-மோட்ச சாதனக் கிரியைகட்குமாம்.

## விபூதி விரதம்.

விபூதி விரதமாவது உத்தமவிலக்கண மமைந்த சைவாசாரியரிடத்துச் சிவதீட்சை விதிப்படி அமைந்துள்ள விபூதியை உருத்திராட்சங்களோடு சிவபெருமானுகவே சிந்தித்து, இடைவிடாது உத்தூளனமாகவும், திரிபுண்டரமாகவும் கிரமப்படி யணிந்து வருவதேயாம். இது, பசுபதிவடிவாகிய விபூதியைத் தரித்து வருவது எனவும், "பாசுபதம் பசுபாஸ விமோட்சாயா" என்னும் அதர்வசிரோபநிடதப்படி பசுக்களின் பாசத்தைக்கெடுத்து ஞானத்தை விளைப்பது எனவும் பொருள் படுதலின் பாசுபதவிரத மெனவும், உலகில் வழங்கும் சிவ விரதங்களெல்லாவற்றுள்ளும் மேலான விரதமாதலின் சிரோவிரத மெனவும், முற்றத்துறந்த முனிவராலும் விரும்பி அநுஷ்டிக்கப்படுவதாதலின் அத்பாஸ்ரமவாஸ விரதமெனவும் பெயர் பெறும், இதனை ஆதியில் பரமசிவனே யநுஷ்டித்தார்; பின்பு இஃது அப்பரசிவப் பிரபுவின் உபதேசத்தால், குபேரனுல் அநுஷ்டிக்கப்பட்டது; அப்பால் பிர்ம்ம விஷ்ணு ருத்ரேந்ராதி சமஸ்த தேவர்களாலும் மஹருஷிகளாலும் அநுஷ்டிக்கப்பட்டது. இதனை "மயாச்சை தத்வ்ரதஞ் சீணம் த்வயாச்சைவ நாரதிப, த்ருதீயம் புருஷோ நாஸ்தி பஸ்ச்சரேத் வ்ரதமீக்ருஸம்" என்பதனுலுமறிக; இவ்விரதம் - இம்மையில் சமஸ்த பாவங்களையும், வியாதிகளையும், பூதப் பிரேத பைசா சாதிகளால் உண்டாகும் பயங்களையும் நீக்கி மகதைஸ்வர்யத்தையும், மறுமையில் மோட்சாநந்தப் பேற்றையும் தருமென்று அதர்வசிரஸ் கூறுகின்றது. இதை அநுஷ்டிப்பவர் பாசுபதரென்றும், மாவிரதிய ரென்றுஞ் சொல்லப்படுவர். இவ்விரதத்திற்குரிய விபூதி - உருத்திராட்சம் - பஞ்சாட்சரம் - வில்வம்-சிவார்ச்சனை யென்னும் பஞ்ச முத்திரைகளுள் விபூதியே முக்கியமாகக் கொள்ளப்படுவதாம். ஆகவே, அது விபூதி விரத மென்னப்பட்டது.

## வருணச்சிரமங்கட்குரிய விபூதிகள்.

மேற்குறித்த கிரம விபூதிகள் கிடையாத பட்சத்தில், பிராமணர், க்ஷத்திரியர், வைஸ்யர்முதல் மூன்று வருணத்தவர்க்கும்

சிவபெருமான், விநாயகர், ஸ்கந்தர், வீரபத்திரர், உமாதேவி முதலிய தேவாலயங்களில் உற்சவாதிய விசேட காலங்களில் செய்யும் யாகசாலைகளிலுண்டாகிய அக்னிகோத்ரசபூதியும் சற்சூத்திரர் கட்குச் சிவாக்கினிபூதியும், அதீட்சதரான சூத்திரர்கட்கு ஷி தேவாலய மடாலயங்களின் மடைப்பள்ளியிலுண்டாகும் பஜனுக்கினிபூதியும், சங்கரஜாதியர்கட்குக் காட்டுத்தீயில் தானே யுண்டாவதாகிய தவாக்கினிபூதியு முரியனவாகும்.

அஃதன்றியும், அவ்வருணத்தவருள், பிரமசாரியர்க்குச் சமிதைகளில் ஆவாகனஞ்செய்வதாகிய சமிதாக்கினி பூதியும், கிருகஸ்தர்க்குச் சந்தியா காலங்களிற் செய்யும் நித்தியாக்கினியாகிய ஔபாசனுக்கினி பூதியும், வானப்பிரஸ்தர்கட்கு ஓமாக்கினி யென்னும் விரசானலாக்கினி பூதியும், சந்நியாசிகட்குத் தவாக்கினி முதலிய சகலாக்கினிபூதியும், அதீதாச்சிரமிகட்கு ஸ்மஸான பூதியும் உரியனவாகும். பொதுவாக நால்வகை வருணத்து எல்லா ஆச்சிரமிகட்கும் யாகாக்கினி பூதியும், தேவாலய பஜிதாக்கினி பூதியும் யோக்கியமாம். இதனை, "பாகத் தாலுறு நீற்றினை யின்னமும் பகர்வாம், யாகத் தானவெண் ணீறுநால் வருணர்க்கு மிடலாம், மோகத் தார்வினை களைதரு மீதன்றி முதன்மை, மாகத் தார்தொழு மியற்கைநீ றதிகுய்யம் வழுத்த" என்னுங் கடம்பவன புராணத்தாலுமுணர்க.

## விபூதி யேற்கு முறை.

ஆசாரியர், சிவனடியார், தாய், தந்தை, மாமன், மாமி முதலிய பெரியோர்கள் விபூதி கொடுக்கின், அதனை அவர்களை மூன்று அல்லது ஐந்துமுறை நமஸ்கரித்து எழுந்து நின்று இரண்டு கைகளாலும் தலைவணங்கிப் பெற்று, சிவபெருமான்-ஆசாரியர் முதலிய பெரியோர்கள் - அக்கினி - நடக்கும் வழி-அசுத்தபூமி இவைகளுக்கெதிரில் நின்று தரியாமல் முகந்திருப்பி நின்று நிமிர்ந்து சிவநாமோச்சாரணஞ் செய்து தரித்துக்கொண்டு, மறுபடியும் அவர்களை வணங்குதல்வேண்டும். குதிரை-சிவிகை-ஆசனம்- திண்ணை-சபை யென்பவற்றி லிருந்துகொண்டாவது விபூதி கொடுப்பவர் கீழ்நிற்கத் தான் மேலிடத்திலிருந்தாவது ஒரு கரத்தை நீட்டி நடுவிரல் மூன்றினுலும் வாங்கித் தற்சனியாகிய ஒரு விரலிற் கொண்டு தலையிறங்கி நிலத்திற் சிந்தும்படியாவது தரித்தல் கூடாது. அவ்வாறு தரித்தவர் நரகத்துன்ப மடைவர். இதனை,

"ஒருகரத்தை நீட்டிவிரன் மூன்றால் வாங்கி
யொருவிரலாற் பிடித்திரங்கி யொளிர்வெண் ணீறு
பெருநிலத்தில் விழப்புனைவோ ரிரவி சோமன்
பெருங்கால மருநரகிற் பேரா தாழ்வ
ரிருகரத்தாற் றொழுதேற்றங் கிறைவ னுசா
னெறிபறவை யசுத்தநிலத் தெதிர்பூ சாமற்
றிருவரைத்தோள் செவிவிரவப் புனைவோ ரென்றுந்
திருவருளா லிறைபுலகஞ் செறிந்து ளாரே"
என்னுஞ் சிவஞான தீபச் செய்யுளா லுணர்க.

## தரிக்கத்தகாத விபூதிகள்.

ஒருகையால் வாங்கிய விபூதியும், வைதிக சைவ விதிப்படி செய்யாது இஷ்டப்படி யமைத்த விபூதியும், விலைக்கு வாங்கிய விபூதியும், கருநிற விபூதியும், செந்நிற விபூதியும், கபிலநிற விபூதியும், புகைநிற விபூதியும், சிவதீட்சையில்லாதவர்கள் - அசைவர் முதலானவர்களின் வீட்டு விபூதியும், அன்னோர் தொட்ட விபூதியும் தரிக்கலாகாது. சிவதீட்சையில்லாதவர் சிவஸ்தல யாத்திரைசென்று கொண்டுவந்து கொடுக்கும் சிவப்பிரசாதமாகிய விபூதியை ஒருசுத்தமான பாத்திரத்திலிட்டு அதனைப் பத்திரபுட்பங்களால் அருச்சித்து மூலமந்திர ஜபம் செய்து, "புவநாத்பஜ் ஜகத்ஸர்வம் திரிபுண்டராத்மசதாசிவ: ஐஸ்வர்யப் ப்ராப்திபீஜாய தஸ்மை ஸ்ரீ பஸ்மனே நம:" என்று நமஸ்கரித்துத் தரித்தல் வேண்டும்.

## விபூதி தரிக்கவேண்டிய காலம்.

காலை, உச்சி, மாலையென்னுந் திரிசந்தியா காலங்களிலும், நித்திரைக்கு முன்னும் பின்னும், மலசல மோசனஞ்செய்து சௌசாசமனங்கள் முடித்த பின்னும், ஸ்நானஞ்செய்தவுடனும், அனுஷ்டானம் சிவபூஜை முதலிய சற்கருமங்கள் செய்வதற்கு முன்னும் பின்னும், போஜனத்துக்கு முன்னும் பின்னும், நீர் முதலியவற்றை அருந்தி ஆசமனஞ் செய்தவுடனும், அதிட்சநர்களையும் - நாய் பூனை - எலி - பன்றி-கொக்கு-காகம் முதலியவற்றையுந் தீண்டிய போதும், பிதுர் கர்மக்கிரியைகளிலும், ஜபம்-ஹோமம்-வைஸ்வதேவம் முதலிய நித்திய கர்மங்களுக்கு முன்னும் பின்னும், விசேஷ புண்ய காலங்களிலும், மழையில் நனைந்த காலத்தும், அவஸ்யம் விபூதி தரித்தல் வேண்டும். விபூதி தாரணமின்றிச் செய்யும் எவ்

விதமாய சற்கருமமும் பயனைத்தாராது. விபூதியணியாதவரது அறிவு-ஆசாரம்-சத்திபம்-தவ முதலியனவுங் கெடும். அவர்முகம் மயானத்தை யொக்கும். அவரைக் காணில்,

"பிணியெலாம் வரினு மஞ்சேன் பிறப்பினோ டிறப்பு மஞ்சேன், துணிநிலா வணியி னான்றன் றொழும்பரோ டழுந்தி யம்மால், திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீ, றணிகிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே" என்று தமிழ்வேதம் கூறுகின்றவாறு அஞ்சியகலுதல் வேண்டும். அவ்வாறின்றி, விபூதி தரிக்கவேண்டிய காலங்களில் தரியாவிட்டால், அன்றைக்கு உபவாசியாய்ப் பஞ்சகௌவியம் புசித்து, அகோர மந்திரஜபம் இருநூறு செய்தல் வேண்டும். தரியாதவரைக்காண நேரில், உடனே சூரியதரிசனமேனும் சிவத்யானமேனுஞ் செய்தல்வேண்டும்.

## விபூதிதாரண வகை.

விபூதிதாரணம்-விபூதிஸ்நானம், உத்தூளனம், திரிபுண்டரமென மூவகைப்படும்; அவற்றுள்,

## விபூதி ஸ்நானம்.

விபூதிஸ்நானம்: இதனை ஆக்நேய ஸ்நானமெனவுங் கூறுவர். ஏனெனின், "ஆக்நேயம் பஸ்மநா ஸ்நாநம்" என்னுஞ் சுருதி வாக்கியத்திற்கு, அக்நிசம்பந்தமான விபூதியுள் மூழ்கல் என்று பொருள்படுதலால், இந்த விபூதி ஸ்நாநம் நித்தியாங்கமாகச் செய்யத்தக்கதாம். அங்ஙனமிருக்கினும், இது முக்கியமாய் வியாதி முதலிய அசந்தர்ப்பங்களால் நீரில் மூழ்கக்கூடாத காலத்தும், நீரில் மூழ்குவதால் மாத்திரமே சுத்திகரிக்கப்படாத தோஷங்கள் நேர்ந்த காலத்தும் செய்யத்தக்கதாக இருக்கின்றது. 'பஸ்ம ஸ்நாநம் ஜலஸ்நாநாத் கோடிபுண்யகுணம்பவேத்" என்னுங் காமிகவசனப்படி இந்தஸ்நாநம் கங்கை முதலிய புண்ணிய நதிகளில் விதிப்படி மூழ்குவதைப் பார்க்கிலும் கோடிபங்கு பெரும்பயனைத்தருவதாம். விபூதி ஸ்நாநஞ் செய்பவன் விதிப்படி நீராடித் தேகசுத்தனாய் "உத்திஷ்டந்து பூதபிசாச்சா, ஏதேஷாம் விரோதே நப்ப்ரம்மகம்ம சர்மாரபே" என்று ஜலத்தால் ஸ்தலசுத்தி செய்து * வடக்கு முகமாய்ப்

---

* வடக்குத் திசைக்குச் சோமதிக்கென்று பெயராம். எனவே, அது சந்திரனுக்குரிய திசையாம்.

பத்மாசனத்தில் உட்கார்ந்து, மூன்றுதரம் ஆசமனமும் பிராணாயாமமுஞ் செய்து, விபூதியைக் குரங்க முத்திரையால் பஞ்சப்பிர்ம்ம மந்திரோச்சாரணத்துடன் எடுத்து இடக்கையில் வைத்து வலக்கையால் மூடிச் சிவமூல மந்திரத்தினாலாவது அக்கினி ரிதி முதலிய ஏழுமந்திரங்களினாலாவது ஏழுதரம் அபிமந்திரித்து, அஸ்திர மந்திரோச்சாரணத்தால் மஸ்தகத்திலிருந்து தூளிதத்தால் மலஸ்நானஞ் செய்து மறுபடியும் விதிஸ்நானஞ் செய்ய ஆரம்பித்து, ஈசாநமந்திரத்தால் சிரசையும், தற்புருஷ மந்திரத்தால் முகத்தையும், அகோரமந்திரத்தால் இருதயத்தையும், வாமதேவமந்திரத்தால் குய்யத்தையும், சத்தியோஜாத மந்திரத்தால் சமஸ்த அவயத்தையும், உத்தூளனஞ்செய்து, ஷடங்க மந்திரத்தால் சிரசு-முகம்-இருதயம்-குய்யம்-பாதம்-சர்வாங்கமென்னும் ஆறுஸ்தானங்களிலும் உத்தூளனஞ் செய்வதே விபூதி ஸ்நானமாம். அன்றியும், மாநஸ்தோகதே"என்னும் வேதமந்திரத்தாலுஞ் செய்கவென்றும், கிருகஸ்தன் சிவமூலமந்திரம் - பஞ்சப்ரம்ம மந்திரம் - ஷடங்கமந்திரம் முதலிய மந்திரங்களால் ஒருபிடி விபூதிக்குக் குறையாமல் எடுத்துத் தூளிதஞ்செய்கவென்றும் விதிக்கப்படுகின்றன.

பின்பு "பிராணாயாமபூர்வோக்த சிவப்ரீத்யர்த்தம்" காலை-உச்சி மாலைகளில்"சந்தியா, சந்தியாங்கம் யதாசக்திகாயத்ரீஜபம் கர்ஷயே" என்று சங்கற்பித்து "ஓம் பூர் புவ: சுவ: தத்ஸவிதுர்வரேண்யம்பர்க்கோ தேவஸ்ய தீமஹி தியோநப்ரசோதயாத்" என்னும் காயத்ரி மந்த்ர ஜபம் இயன்றவரையிற் செய்து விபூதிக்குள் மூழ்கி யிருப்பதாகப்பாவித்து, பஞ்சாக்ஷரத்துள், பதி - அருள் - ஆன்மாவென்னும் மூன்றெழுத்துக்களால் அமைந்த "சிவய" என்னும் சிவமூலமந்திர ஜபமுஞ் செய்தல் வேண்டும். இம்மந்திரப் பிரபாவம் "அதபுசுண்டகாலாக்நி ருத்ரம்பஸ்ம ஸ்நாநவிதீம்" என்றற்றொடக்கத்தனவாக ப்ருகத்ஜாபாலோப நிஷத் ஆறுவது பிராம்ஹணத்துள் கூறப்பட்டிருக்கிறது. அம்மந்த்ர ஜபத்திற்கு அருகரல்லாதவரும், அதை உபதேசக் கிரமத்தில் அடையாதவரும், திருஞானசம்பந்த சுவாமிகளருளிய திருநீற்றுப் பதிகஸ்தவத்தால் அம்மந்திர ஜபம்செய்யக்கடவர்.

## * உத்தூளனம்.

ஆன்மாக்கள் ஆணவம், கன்மம், மாயை, வைந்தவ்யம், திரோதானம் எனும் ஐவகை மலங்களால் பந்திக்கப்பட்டவர்களாயிருத்தலின்,

* உத்தூளனம்-பாவப்பூசுதல்.

* பசுக்க ளெனப்படுவார். அவற்றை யொழித்தற்கு ஐவகைச் † சம்ஸ்காரங்கள் விதிக்கப்பட்டன. அவை ஸ்தூல சம்ஸ்காரம், சூக்ஷ்மம சம்ஸ்காரம், அதி சூக்ஷ்மம சம்ஸ்காரம், காரண சம்ஸ்காரம், மஹாகாரண சம்ஸ்காரம் என்பனவாம். அவற்றுள், ஸ்தூலம்-விபூதி தாரணமாம்; சூக்ஷ்மம்-உருத்ராக்ஷதாரணமாம்; அதிசூக்ஷ்மம்-யக்ஞோபவீததாரணமாம்; காரணம்-சிவதீக்ஷை யடைதலாம்; மஹாகாரணம்-சிவார்ச்சனை புரிதலாம்; இவ்வைந்தனுள் ஸ்தூல சம்ஸ்காரமாகிய விபூதிதாரணத்துள் உத்தூளனமாவது விதிப்படி ஸ்நானஞ் செய்து, மடிபுடுத்திச் சுத்தமான அநுஷ்டான மண்டபத்துட்சென்று, "ஓம் ஹ்ராம் ப்ருதிவியாத்மநே நிவர்த்திகலாயை நம" என்று ஸ்தான சுத்தி செய்து, த்ரயம்பகமந்த்ரோச் சாரணத்துடன் சுத்த பீடத்தில் கிழக்கு முகமாக இருந்து, கிரமப்படி அமைத்த ஆதாரத்திலிருக்கும் விபூதியைச் சுகந்த கந்த புஷ்பாதிகளாலர்ச்சித்துத் தூபதீபங்கொடுத்துப் பிறகு, அவ்விபூதியை விதிப்படி யெடுத்து அநுஷ்டான இயலில் கண்டபடி சுத்திசெய்து, அதற்கு மேலும் அக்நிரீதி முதலிய ஏழு மந்திரங்கள், திரியம்பக மந்திரம், த்ரியாயுஷ மந்திரம் முதலியவற்றாலும் ஆசாரியன் உபதேசித்த வண்ணம் அபிமந்திரித்து, பிராம்மணருள் நால்வகை ஆச்சிரமிகளும் சர்வாங்கமும், அரசர், முகம் நீங்கிய ஏனைய அங்கங்களிலும் வைசியர், நெற்றி-மார்பு-புயம் இவ்விடங்களிலும், சூத்திரர், நெற்றியில் மாத்திரமும் உத்தூளனஞ் செய்தல்வேண்டும். அங்ஙனமின்றி உத்தூளனத்தைப் பிராமணர் சர்வாங்கமும், க்ஷத்திரியர் நாபிவரையிலும், வைஸ்யர் மார்புவரையிலும், சூத்திரர் கண்டம்வரையிலும், அநுலோமர் வைஸ்யரைப்போலவும், பிரதிலோமர் சூத்திரரைப் போலவும் செய்தல்வேண்டு மென்பதும், பிராமணர் முதலிய நான்கு வருணத்தாரும் பொதுவாக, சிரசு, முகம், ஹிருதயம், குய்யம், பாதம், சர்வாங்கமென்னும் ஆறிடங்களிலுஞ் செய்தல் வேண்டு மென்பதும் ஆகம பேதங்களாற்பெறப்படுகின்றன. அவ்வாறு செய்யுங்கால், செய்பவர் திரிசந்தியாகாலங்களுள் ஒவ்வொரு சந்தியிலும், பஞ்சப்பிர்ம்ம முதலிய மந்திர வகைகளால், ஐந்து, எட்டு,

---

* யஜமானன் பசுக்களைக் கயிற்றாற் கட்டுவதுபோலச் சிவன் ஆன்மாக்களை மலாதிபாசங்களாலே கட்டுகின்றமையால், ஆன்மா பசுவெனப்படும்; பாச சம்பந்தமுடையது பசுவாம்.

† சம்ஸ்காரம்-சடங்கு நிறைவேற்றல்,

பதின்மூன்று தரத்திற்குக் குறையாமல் உத்தூளனஞ் செய்தல் வேண்டும்; செய்யுங்கால், வடக்குமுகமாக இருந்து செய்வதே உசிதமாம். இவ்வாறு செய்பவர் சிவபெருமானோடு வேற்றுமையின்றிக் கலத்தலாகிய சுத்த சிவாத்வைத முத்தியையடைவர்.

புண்டரவகை.

புண்டரம் என்பது ஊர்த்வ புண்டரம், அங்காரக புண்டரம், திரிபுண்டரமென மூவகைத்தாம். அவற்றுள்,

ஊர்த்வ புண்டரதாரணம்.

ஊர்த்வ புண்டரம் என்பது மேல்நோக்கியிடப்படுங் குறியாம். அது கோபீ சந்தனோர்த்வ புண்டரம், மிருத்திகாதி சித்ரோர்த்வ புண்டரமென்னும் விகற்பங்களையுடையது.

அங்காரக புண்டரதாரணம்.

அங்காரக புண்டரமாவது கோபி சந்தனத்தால் ஊர்த்வ புண்டரமணிந்து, அதன்மேல் திரியக்புண்டரமாகக்கரிக்கோடணிவதாம்.

திரிபுண்டர தாரணம்.

திரிபுண்டரமாவது திரி-மூன்று; புண்டரம்-குறி; எனவே, விபூதியை முக்குறியாகத் தரிப்பதாம். இதனைத் திரியக்புண்டரம் எனவுங்கூறுவர். திரியக்-விலங்கு, (மிருகம்); புண்டரம்-குறி; எனவே விலங்கு குறுக்கு வடிவினதாகலின் அதுபோலக் குறுக்காக இடப்படுங் குறி என்பது அதன் பொருளாம். மேற்குறித்த முக்குறிகள் பதி-பசு-பாசம் என்னும் மூன்று பொருளாகவும், அகார-உகார மகாரமென்னும் வியஷ்டிப்ரணவங்களாகவும், பதி-அருள்-ஆன்மாவென்னும் திரியாக்ஷரமந்த்ர சொரூபமாகவும், அருவம்-அருவுருவம்-உருவம் என்னும் வடிவங்களை யுடைய சிவன்-சதாசிவன்-மகேசுவரன் என்னும் மூர்த்திகளாகவும், சத்தன் - உத்தியுக்தன்-பிரவிருத்தன் என்னும் லய போக அதிகார கர்த்தர்களாகவும், குரு லிங்க ஜங்கம வடிவங்களாகவும், இன்னும் பலவித சொருபங்களாகவும் அமைந்தனவெனச் சிவாகமங்கள் விஸ்தரித்தோதுகின்றன. இத்திரிபுண்டரதாரணம் வேதாகமஸ்மிருதி புராணேதிகாசங்களால் மிகச்சிறப்பித்துரைக்கப்படுகின்றது; ஆதலால், இத்தகைய திரிபுண்டரம் தரிக்கவேண்டிய கிரமமாவது விதிப்படி விபூதி சுத்தி செய்து, அவ்விபூதியுள் சிறிதெடுத்து உத்தூளன விதியிற் கண்டபடி உத்தூளனஞ் செய்து, நின்றவிபூதியைப் பெருவிரல் நடுவிரல்களாற் சிறிது நீரெடுத்துவிட்டுப் பிரதக்ஷிணமாகக் குழைத்து, தற்சனி-மத்திமை-அநாமிகையென்னும் மூவிரல்களையும் அகார உகார

மகாரங்களாகப் பாவித்துத் திருநீற்று முத்திரையாகக்கொண்டு, 38, 32, 25, 16, 12, 10, 9, 8, 5 என்னு மித்தானங்களில் முக் குறியாகத் தரித்தல்வேண்டும்; அவ்வாறு தரிக்குங்கால் முதற்குறி: அகாரம், ருக்வேதம், இராசதகுணம், சீவாத்மா, பாதலவுலகம், கிரியாசத்தி, உருத்திரமூர்த்தி, காருகபத்யாக்நி, பூதகாலம் எனவும், இரண்டாவது குறி: உகாரம், யஜுர்வேதம், சாத்மீககுணம், அந்த ராத்மா, பூலோகம், இச்சாசத்தி, மஹேஸ்வரமூர்த்தி, தக்ஷிணாக்நி, பௌஷ்யகாலம் எனவும், மூன்றுவது குறி: மகாரம், சாமவேதம், தாமதகுணம், பரமாத்மா, சுவர்க்கலோகம், ஞானசத்தி, சதாசிவ மூர்த்தி, ஆகவநீயாக்நி, வர்த்தமானகாலம் எனவும் கூறப்படும். இதனைத் தேவதாத்ரியாத்மகமான அநுசந்தானத்துடன் தரித்தல் வேண்டுமென ஆகமங்கள் கூறுகின்றன. திரிபுண்டரத்தை மேற் குறித்தவாறு திருநீற்று முத்திரையால் தரித்தலே யன்றி அநு லோம விலோமமாகவுந் தரிக்கலாம். அஃதாவது அங்குஷ்ட அநா மிகை மத்திமை விரல்களை முறையே அகார உகார மகாரங்களாகப் பாவித்து, மத்திமை அநாமிகை யென்னும் இருவிரல்களால் இடப் பக்கந் தொடுத்து முதல் ரேகை மூன்றுவது ரேகைகளையிழுத்து, அங்குஷ்ட விரலால் வலப்பக்கந் தொடுத்து நடுரேகையை யிழுத்த லாம். இதனை அநுலோமப் பிரதிலோம தாரணமெனவுங்கூறுவர். இவ்வாறு அணிபவர்க்கு

> "மத்யமா நாமிகாங் குஷ்டைரநுலோம விலோமத:
> அங்குஷ்டே நக்ருதாரே காத்ரிபுண்டரம் பஸ்மநாக்ருதம்
> தத்த்ரிபுண்ட்ரம் பவேச்சஸ்தம் மகாபாதக நாஸகம்"

என்றபடி மகாபாதகங்களனைத்தும் சூரியன்முன் பனிபோலகலும்.

இவ்வாறு விபூதியை நெற்றியில் தரிக்குங்கால் இருபுருவக் கடையளவு நீளமும், மார்பிலும் புயங்களிலும் அவ்வாறங்குல நீள மும், மற்றைய இடங்களில் ஒவ்வோரங்குல நீளமுமாக, ஒவ்வொரு ரேகையின் மத்தியில் ஒவ்வோரங்குலம் இடம்விட்டுத் தரித்தல் வேண்டும்.

இங்ஙனமேயன்றி, விபூதியைப் பிராமணர் எல்லாவிடங்களி லும் அவ்வாறங்குல நீளமும், க்ஷத்திரியர் நந்நான்கு அங்குல நீளமும், வைஸ்யர் இரண்டிரண்டங்குல நீளமும், சூத்திரர் ஒவ்வோ ரங்குல நீளமுமாகத் தரிக்கலாமென்னும் விதியுமுண்டு.

மேற்குறித்த அளவுகளில் உயரினும், குறையினும், இரேகைக ளிடைவெளியின்றி யொன்றோடொன்று சேரினும் குற்றமேயாம். விதிக்கப்பட்ட அளவில் குறையின், ஆயுள்குன்றும்; மிகில் தவ முதலியனகெடும்.

இஃதன்றியும், சிவபெருமானது படையாகிய சூலவடிவாகவும், அவரதுவாகனமாகிய இடபவடிவாகவும், பொன் வெள்ளி முதலிய வற்றாற் குறிகள் செய்து, அவற்றால் தோள் முதலிய ஸ்தானங் களில் விபூதியைத்தரிப்பதுமுண்டு. இதனைத் திருவிலச்சினை தாரணமென்பர். முன் திருநாவுக்கரசு சுவாமிகள் சமணமதச் சார்பி னின்றும் நீங்கிச் சைவ சித்தாந்தவுண்மை நிலையினுற்று, திருத்தூங் கானை மாடச் சிவபரஞ்சுடரை நோக்கிப் பெருமானே! பொய்ச்சமயப் படுகுழியில் வீழ்ந்து வருந்திய இவ்வுடற் குற்றநீங்கத் தேவரீரது திருவிலச்சினையைப் பதித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித் தோதிய திருத்தூங்கானை மாடத் தேவாரப்பாசுரமாகிய "பொன் னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றி செய்யும், என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல, மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல், துன்னார் கடந்தை யுட் டூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே" என்னும் திருப்பதிகத் தானும், "நீடுதிருத் தூங்கானை மாடத்து நிலவுகின்ற, வாடகமே ருச்சிலையா னருளாலோர் சிவபூதம், மாடொருவ ரறியாமே வாகீசர் திருத்தோளிற், சேடுயர்மூ விலைச்சூலஞ் சினவிடையி னுடன் சாத்த" என்னும் பெரியபுராணச் செய்யுளானும், "திரிசூலத் தாலுந் திருநீ றணிவா, ரொருவார் சிவலோகத் துற்று" என்னுஞ் சைவசமயநெறித் திருக்குறளானும் இதனை அறிக. இவ்விலச்சினை தாரணஞ் செய்யப்பெற்றவரெத்தகைய பாதகரேனும், சகல பாவங் களினின்றும் நீங்கிச் சிவலோகத்தமர்ந்து சிவானந்த முறுவர்.

இத்திரிபுண்டர தாரணஞ் செய்யும்போது இதனைப் பிரமசரிய ரும், சந்நியாசிகளும், வானப்பிரஸ்தரும், சிவதீட்சையில்லாத வரும், கன்னிகைகளும் ஆகியவிவர்கள் உச்சிக்குமுன் நீர்சேர்த்தும், உச்சிக்காலத்திற்குப்பின் நீர் சேர்க்காமலும், தீட்சாவான்களாயுள்ள கிருகஸ்தரும், ஸ்திரீகளும், காலை-மாலை-உச்சி யென் னுந் திரிசந்தியா காலங்களினும் நீர் சேர்த்தும் மற்றைக் காலங்களில் நீர் சேர்க்காமல் உத்தூளனமாகவும் அணிதல் வேண்டும். சந்நியாசிகளெப்பொழு தும் விபூதியை உத்தூளனமாகத் தரிப்பதே யுசிதம்.

அன்றியும், * சமயி பிராதக்காலசந்தியில் மாத்திரமும், † புத்திரன் காலை-மாலை யென்னு மிருசந்தியாகாலங்களிலும், ‡ சாதகன் அவ்விருசந்தியோடு உச்சிக்கால சந்தியினும், $ ஆசாரியன் அம்முச்சந்திகளோடு அர்த்தராத்ரி சந்தியினும் நீர்சேர்த்துத் திருநீறு இடக் கடவனெனவும் விதியுண்டு. விலக்கிய காலங்களிலெவரேனும் விபூதியை நீர்சேர்த்துத் தரிப்பராயின், அந்நீர் பனிநீரை (மதுவை) யொக்குமெனச் சிவாகமங்கள் கூறுகின்றன. ஈரவஸ்திரத்துடனாவது ஒற்றைவஸ்திரத்துடனாவது கௌபீனமின்றியாவது விபூதி தாரணஞ்செய்யலாகாது; செய்யின், நிஷ்பலனும்.

விபூதியால், உத்தூளனம்-தாரண முதலியன செய்பவர் செய்யும்போது நிலத்தில் விபூதியின் எத்தனை அணுக்கள் சிந்துகின்றனவோ அத்தனை வருடம் இரௌரவநரகில் வருந்துவர். வாயைத் திறந்துகொண்டும், தலையையசைத்துக்கொண்டும், பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும், தலையிறங்கியும், கண்ணாடிபார்த்தும் விபூதி தரித்தலாகாது. ஒருகால் நிலத்தில் விபூதிசிந்துமாயின், உடனே மூலமந்திரத்தைச் சிந்தித்து, அதனை யெடுத்துவிட்டு, அவ்விடத்தில் சலந்தெளித்து மெழுகித் தாளத்திரயம் செய்து, சங்கார முத்திரையினாலே அதனைத் தன்னிடத்தில் ஒடுக்கல்வேண்டும்.

## திரிபுண்டர தாரணதான விவரமும் பலனும்.

## முப்பத்தெட்டிடங்கள்.

விபூதி சிவவடிவ மாதலின், அதனைத் தரிப்பவர் தந்தேகத்தைச் சிவரூபமாகப் பாவித்து, அச் சிவபெருமான் அங்கப் ப்ரத்தியாங்க சாங்கோபாங்கங்களாகிய முப்பத்தெட் டுறுப்புக்களை யுடையவராதலின், தாமும் சிகை, சிரம், நெற்றி, மார்பு, உந்தி, முழந்தாள்கள், தோள் மூலங்கள், தோள்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள், புருவங்கள், கண்கள், வலப்பக்கநாசி, இடப்பக்கநாசி, நாசித்துவா

---

* சமயி என்பவன் சமயதீட்சை பெற்றுச் சிவாகம விதிப்படி நித்திய கர்மாநுஷ்டானஞ் செய்பவன்.

† புத்திரன் என்பவன் - சமய விசேஷ தீட்சைகளடைந்து, தர்ப்பணம், சிவபூஜை, அக்கினிகாரிய முதலியன செய்பவன்.

‡ சாதகன் என்பவன் சமய விசேஷ நிர்வாண தீட்சைகளைப் பெற்று, நித்த நைமித்திக காமியகர்மங்களைச் செய்து, சாதனையால் தன்மல மறுப்பவன்.

$ ஆசாரியன் என்பவன் அம்மூவகைத் தீக்கைகளடைந்து அவற்றிற்குமேலாசார்யாபி ஷேகமும் பெற்றவன்.

ரங்கள், உதடுகள், செவிகள், செவித் தொளைகள், கபோலங்கள், மோவாய், கண்டத் திருபுறங்கள், ப்ருஷ்டங்கள், விலாக்கள் என்னும் முப்பத்தெட்டிடங்களிலும் விபூதி தரித்தல் வேண்டுமென்று "சிவஞான சரீரந்து சிவதேகத்வகல்பநே" எனத் தொடங்கி "ஸ்தான மஷ்டௌத்த, த்ரிம் சத்பூதிதாரண யோக்யகம்" என முடிவாக விம்பாகம வசனங்களியம்புகின்றன.

இந்த முப்பத்தெட் டிடங்களிற் றரிக்குந் திரிபுண்டரமாகிய

## முக்குறிகளின் அதிதேவதைகள்.

| எண். | நடுக்குறி. | பக்கக்குறிகள். |
|---|---|---|
| 1 | சிகை—அநாகதசிவம் | வாகீஸ்வரி—மனோன்மநி |
| 2 | சிரம்—ஈசானர் | இந்தியை—தீபிகை |
| 3 | நெற்றி—தற்புருடர் | உரோசிகை—மூசிகை |
| 4 | மார்பு—அகோரர் | வியாபிநி—ஊர்த்தவியாபிநி |
| 5 | உந்தி—வாமதேவர் | அநந்தை—வியோமரூபை |
| 6—7 | முழந்தாள்கள்-சத்யோஜாதர் | அநாதை—அநாஸ்ரதை |
| 8—9 | தோள்மூலங்கள்—ஆதிசத்தி | வாமை—ஜ்யேஷ்டை |
| 10—11 | தோள்கள்—இச்சாசத்தி | இரௌத்ரி—காளி |
| 12—13 | முழங்கைகள்—ஞானசத்தி | பலப்பிரமதநி--சர்வபூததமநி |
| 14—15 | மணிக்கட்டுகள்—கிரியாசத்தி | கலவிகரணி—பலவிகரணி |
| 16—17 | வலப் புருவம்—அங்குஷ்ட [புவநேசர் | இடப்புருவம்—புவநேசர் [இரகபிங்கேக்ஷனர் |
| 18—19 | கண்கள்—ஈஸ்வரர் | |
| 20—21 | வலப்பக்கநாசி—உற்பவர் | இடப்பக்கநாசி—பவர் |
| 22—23 | ஷை வலத்வாரம்—மகாதேவர் | இடத்துவாரம்—மகாதேசநி |
| 24—25 | மேலுதடு—சிகேதநர் | கீழுதடு—ஏகவீரர் |
| 26—27 | வலச்செவி—பஞ்சாந்தகர் | இடச்செவி—சூரர் |
| 28—29 | வலச்செவித்தொளை—சம் [வர்த்தகர் | இடச்செவித்தொளை-சோதி |
| 30—31 | வலக்கபோலம்—சண்டர் | இடக்கபோலம்—கிராதேசர் |
| 32 | மோவாய்—ஏகஜீவர் | |
| 33—34 | வலப்பக்கக்கழுத்து—அநந்தர் | இடப்பக்கக்கழுத்து—அஜர் [உமாபதி |
| 35—36 | வலப்பிருஷ்டம்—பிரசண்டர் | இடப்பிருஷ்டம்—உக்கிரர் |
| 37—38 | வலவிலாப்புறம்—ஸ்ரீ கண்ட [ருத்திரர் | இடவிலாப்புறம்—உமாதேவி [உருத்திரர் |

## முப்பத்திரண்டிடங்களின் விவரம்.

சிரசு, நெற்றி, இருகண்கள், இருசெவிகள், நாசியி னிருதுவாரங்கள், இருதோள் மூலங்கள், இருபுயங்கள், இருமுழங்கைகள், இரு மணிக்கட்டுகள், இருஸ்தனங்கள், இருதயம், வயிறு; இரு விலாக்கள், நாபி, கண்டம், இருதொடைகள், இருமுழங்கால்கள், இருகணைக்கால்கள், இருவிலாப்புறங்கள் என்னு மிம்முப்பத்திரண் டிடங்களிலும், அவைகட் கதிதேவதைகளாய அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், ப்ரத்யூசன், ப்ரபாசன் என்னும் அஷ்ட வசுக்களுக்கும், சிவதத்வ வாசிகளாய அநந்தர், சூட்சுமர், சிவோத்தமர், ஏகநேத்ரர், ஏகருத்ரர், த்ரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி என்னும் அஷ்ட வித்யேஸ்வரர்களுக்கும், இந்திரன், அக்நி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் அஷ்டதிக் பாலகர்களுக்கும், சூரியன், சந்திரன், ஆன்மா, ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னும் அஷ்ட மூர்த்திகளுக்கும் ப்ரீதி கரமாக விபூதி தரிக்கப்படும்; இருஸ்தனங் களை நீக்கி, குத குய்யங்களைக் கொள்வதுமுண்டு. இது காமிகாக மத்திற்கண்டது. இது 32 கலாசத்தி பாவனைக்காமெனவுங் கூறுவர்.

## பதினாறிடங்களின் விவரம்.

சிரசு, நெற்றி, மார்பு, நாபி, இருமுழந்தாள்கள், இருபுயங்கள், இருமுழங்கைகள், இருமணிக்கட்டுகள், இருசெவிகள், முதுகு, கழுத்து என்னும் பதினாறுறுப்புக்களிலும் அவைகட் கதிதேவதைகளாகிய சதாசிவன், மஹேஸ்வரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன், அக்நி என்னுஞ் சிவாக்நி மூர்த்திகளும், வாமை, ஜ்யேஷ்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்ரமதனி, சர்வபூத தமனி என்னும் அஷ்ட சத்திகளும், நாதன், தத்தியன் என்னும் அஸ்வநி தேவர்களும் வசிப்பராதலின், அவர்கட்குப் பிரீதியாக விபூதி தரிக்கப்படும். காதுகளை நீக்கி விலாப்புறங்களைக் கொள்வது முண்டு.

அங்ஙனமின்றி, விபூதியைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் பாதங்களுன்கும் ஒவ்வொன்று நந்நான்காய்ப் பதினாறு மாகலின், அவற்றுலாம் சிவானந்த முத்திப்பேற்றை யடைவான் வேண்டித் தரித்தல் வேண்டும் என்பதும், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் என்னும் நான்கவஸ்தைகளும் ஒவ்வொன்று நந்

நான்காய்ப் பதினாறுமாகலின் அவற்றைக் கடந்து துரியாதீத முத்திப்பே றடைவான் வேண்டித் தரித்தல்வேண்டும் என்பதும் சில வாகமங்களாற் பெறப்படுகின்றன.

பின்னும், ப்ராண வாயுவைப் பதினாறுமாத்திரை பூரித்து உகாரத்தியானஞ் செய்து, அறுபத்துநான்கு மாத்திரை கும்பித்து அகாரத்தியானஞ்செய்து, மகாரஸ்வரூபராகிய சிவபெருமானைத் தியானிக்கும்போது மேற்குறித்த பதினாறிடங்களிலும் ப்ரத்யாகாரஞ் செய்வது மரபாமாதலின், அவ்வுண்மையைத் தெரித்தற் குறியாகவும், தாரணையில் நிற்கும்போது ஷ தானங்களி லததற்குரிய அதிதேவதைகளைத் தரித்தல் யோகவான்கட்குரிய தென்பதை யுணர்த்துதற்பொருட்டாகவும், புருடசூக்தத்திற்குறித்த பதினாறு மந்திரங்களையும் முறையே இடக்கை, வலக்கை, இடக்கால், வலக்கால், இடமுழந்தாள், வலமுழந்தாள், இடமருங்கு, வலமருங்கு, நாபி, இருதயம், கழுத்து, இடப்புயம், வலப்புயம், வாய், கண்கள், சிரசு என்னும் பதினாறு உறுப்புக்களினும் நிறுத்தி, சர்வ வியாபகராகிய சிவபெருமானிடத்தில் மனத்தை வைத்துத் தியானித்தவர்கள் சிவசாயுச்சிய மடைவரென்பதை யுணர்த்துதற்காகவும் விபூதி தரிப்பரென்பது மொருசாரார துகொள்கையாம். இவ்வாறு விபூதி தரிப்பவரின் சகல பாவங்களும் நசிக்கும். எவ்வாறெனின், விபூதியைச் சிரத்திற் றரிப்பதால் கழுத்துக்கு மேற்பட்ட வுறுப்புக்களாற் செய்த பாவங்களும், மார்பிற் றரிப்பதால் மன முதலிய வந்தக் கரணங்களாற் செய்தபாவங்களும், நாபியிற் றரிப்பதால் குறியினால் நேர்ந்த பாவங்களும், இருவிலாக்களிற் றரிப்பதால் பரஸ்திரீகமன தோஷங்களும், குதத்தின் மேலிடங்களிற் றரிப்பதால் குதத்தளவான வுறுப்புக்களாற் செய்த பாவங்களும், இரு புயங்களிலணிவதால் கரங்களால் நேர்ந்த பாவங்களும், முழந்தாள்களிற்றரிப்பதால் காலாற்செய்த பாவங்களும், நெற்றியிற் றரிப்பதால் பிரமதேவனால் எழுதப்பட்ட லிகிததோஷங்களும், கழுத்திற் றரிப்பதால் அபட்சிய பட்சணாதி தோஷங்களும் நிவர்த்தியாகுமென ஸ்காந்தம் கூறுகின்றது.

"சிரத்த ணிந்திடிற் கழுத்தள வுறுபவந் தீரும்
உரத்திற் பூசிடி னுள்ளத்தால் வரும்பவ மொழியும்
தரிக்கி னுபியி னிலிங்கத்தால் வருபவந் தணியும்
பொருத்து பாரிசத் திடின்மடந் தையைப்புணர் பவம்போம்."

"குதத்தி னுக்குமேற் பூசிடிற் குதத்தறு பவம்போம்
விதித்த திண்புயத் திடிற்கையாற் செயும்பவம் வீடும்
கதித்தி டும்முழங் தாளினி லணிந்திடிற் காலான்
மதிக்க வேவரும் பவங்கதிர்ப் பனியென மாறும்"
என்று கடம்பவன புராணம் கூறுகின்றது.

### பதினைந்திடங்களின் விவரம்.

விபூதியைச் சிரசு, நெற்றி, மார்பு, நாபி, இருபுயங்கள், இரு முழங்கைகள், இருமணி பந்தங்கள், பிடர்கள், கழுத்து, * குகுத் தேசம், இருகாதுகள் ஆகிய பதினைந்திடங்களிலும் தரிக்கலாம். இதனை,

"சென்னியொளிர் நுதல்செவிகள் களம்புயங்க ளகலிதயஞ் சிறந்த வுந்தி, மன்னுபிட ரிருவாகு வொடுகுகுத்தே சங்கவின்கூர் மணிபந் தங்க, வென்னவரு மூவைந்து தானத்தும் புனல்கலந்த வினிய நீற்றால், உன்னலரும் புகழ்த்திரிபுண் டாமிடுவர் மூலமனு வுரைத்து நல்லோர்" என்னுஞ் சித்தாந்த சிகாமணிச் செய்யுளானுணர்க.

### பன்னிரண்டிடங்களின் விவரம்.

விபூதியைச் சிரசு, நெற்றி, மார்பு, நாபி, இருபுயங்கள், இரு தோள்கள், இருகாதுகள், கழுத்து, குதஸ்தானம் என்னும் பன்னிரண்டிடங்களிலும் தரிக்கலாம். இது, பன்னிரு முக்குறி முப்பத்தாறுகலின், ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்னும் முப்பத்தாறு தத்துவங்களையும் நேதிகளைந்து விபூதி தரிக்கின் முத்திநிலை சித்தியாமென்பர் பெரியோர்.

### பதினேரிடங்களின் விவரம்.

விபூதியைச் சிரசு, நெற்றி, மார்பு, நாபி, இருபுயங்கள், நாசி, இருகாதுகள், கழுத்து, பிருஷ்டம் என்னும் பதினேரிடங்களும் தரிக்கலாம். பதினேரிடங்களில் தரிப்பதால், அவற்றிற் கதிதேவரான பரமாப்தர், சிவர், மகேஹசுவரர், ருத்ரர், ஸ்ரீகண்டர், சம்பு, ஈசுவரர், மஹாதேவர், பசுபதி, சங்கரர், ருஷபத்துவஜர் என்னும் பதினே ருருத்திரர்களும் பிரீதியடைவாராதலின், அப்பதினேரிடமே விபூதி தரித்தற்கு முக்கிய விடமா மென்பர்.

### பத்திடங்களின் விவரம்.

விபூதியைச் சிரசு, நெற்றி, நாசி, இதழ்கள், காதுகள், கண்கள், கழுத்து என்னுமிப்பத்திடங்களில் தரிக்கலாம். அவ்விடங்களிற் றரிப்பவர் தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆத்மரூபம், ஆத்மதரிசனம், ஆத்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவபோகம், சிவாநந்தம் என்னுந் தசகாரியங்களையு மடைந்து அவற்றுறும் பேற்றினுக்குமுரியராவர். மேற்சொல்லிய 15-12-11-10, இந்த ஸ்தான விசேடங்களைக் கிரியாவிவரணமென்னும் நூல் விரித்துக் கூறுகின்றது.

---

* குகுத்தேசம்—குய்யம்பற்றிய நாம்பு ஸ்தானம்.

### எட்டிடங்களின் விவரம்.

விபூதியைச் சிரசு, நெற்றி, மார்பு, இருபுயங்கள், இருகாதுகள், (நாபிக்குப் பின்புறமாகிய) முதுகின் கீழ்ப்பக்கம் என்னுமெட்டிடங்களிற் றரிக்கின், அஃது அவ்விடங்கட்கதிதேவர்களான பிரமனும், அத்திரி, ஆங்கிரசர், கௌதமர், ஜமதக்நி, பரத்துவாசர், வசிஷ்டர், விஸ்வாமித்திரர் என்னும் சப்த ருஷிகளுமாகிய எண்மருக்கும் பிரீதிகரமாகும். ஷை ரிஷிகளுள் அத்திரி, ஜமதக்கினி, பாரத்துவாஸர், விஸ்வாமித்திரர் என்னுமிவர்களை நீக்கி, அகஸ்தியர், காசிபர், புலஸ்தியர், மார்க்கண்டர் என்னுமிவர்களைச் சேர்த்துக் கணக்கிடுவது முண்டு.

### ஐந்திடங்களின் விவரம்.

விபூதியை நெற்றி, மார்பு, நாபி, இருகைகள் என்னுமைந்திடங்களிற் றரிக்கின், அஃது அவற்றிற் கதிதேவர்களான சிவன், மஹேசுவரன், ருத்ரன், விஷ்ணு, பிரமன் என்னுமைவருக்கும் பிரீதிகரமாம். இந்த எட்டு, ஐந்து என்னுமிடங்களுங் காமிகத்திற் கண்டனவாம். இவற்றுள் நாபியை நீக்கிச் சிரசினைக் கொள்வது முண்டு.

இவ்வாறன்றி, பிராமணர் சிரசு, நெற்றி, மார்பு, புயங்களாகிய வைந்திடத்தும், க்ஷத்திரியர் அவ் வைந்திடங்களோடு இருதோள்கள்-இருதொடைகள் ஆகிய வொன்பதிடத்தும், மற்றையோர் ஷை ஐந்திடங்களோடு இருமுழங்கைகள் - இருமணிபந்தங்கள் - இருமுழந்தாள்கள் - முதுகு - இருகாதுகள் - இருகண்கள் ஆகிய பதினுறிடங்களிலும் விபூதியைத் தரிக்கக்கடவ ரெனவுங் கூறுப. இதனை,

"மறையோர் சிரம்வா ணுதன்மருமம் வாகு விரண்டு மவற்றொடுமெண், ணிறையோர் செகில்வார் தொடைநான்கு மிவற்றோடேனை யோர்முழங்கை, செறிசீர் முன்கை முழந்தாள்வெந் செவி கண் பதினென் றினுநீறு, குறையா தணிவர் செகிற்றுடையுங் கூட்டி மறையோ ரணிதலுமாம்." என்னும் பேரூர்ப் புராணச் செய்யுளாலுணர்க.

### விபூதி யணிவதாலுண்டாகும் இகலோக பலன்.

விதிப்படி யமைந்த நிர்மலமான விபூதியைச் சிரத்திலணியின், அது நவரத்நமய கிரீடாதிகளைக் கொடுக்கும்; நெற்றியிலணியின், அது பட்ட வர்த்தனராகச் செய்யும்; கண்டம், இதயம், முச்சந்திகள், விலாப்புறங்கள் என்னு மிவ்விடங்களிற் றரிக்கின், அது நவரத்நமாலை, பொன்னரைஞாண் முதலிய திவ்யா பரணங்களைக் கொடுக்கும்; தொடைகளிற் றரிக்கின், அது ரதகஜதுரக சிவிகாதி வாகன போகங்களைத் தரும்; கரங்களிற்றரிக்கின், அது தங்கக் கடகாதிகளைத்தரும்; முழங்கால்களிற் றரிக்கின், அது நூபுர முதலிய பாதாபரணங்களைத் தரும்; மற்றைய வுறுப்புக்களிற் றரிக்கின், அது தனதானியம்-பசு-புத்திரர்-மித்திரகளத்திராதி பல போகப்பிராப்திகளைத் தரும். இஃதன்றி மறுமையில் மோட்ச சாம்பிராச்சியத்தையுந் தரும்.

## விபூதி யணிவதாலுண்டாகும் பரலோக பலன்.

விபூதியை மந்திர சகிதமாகச் சிரசிற்றரித்தால், அது சந்திர சூடாதரனுகச் செய்யும்; நெற்றியிற்றரித்தால், அது திரிநேத்திரங் களை யுண்டாக்கும்; கண்டத்திற்றரித்தால், அது நீலகண்ட ஸ்வ ரூபியாகச் செய்யும்; இருதயத்திற்றரித்தால், அது சர்வஞ்ஞத்வம் (எல்லாமறியுந்தன்மை) உண்டாக்கும்; விலாக்களிற்றரித்தால், அது திவ்ய ஸ்திரீகளைத் தரும்; நாபி-முச்சந்திகள் முதலிய பிறவுறுப்புக் களிற்றரித்தால், அது விருஷபாரூடம்-சர்மாம்பரம் (புலித்தோ லாடை)மான்-மழு-சூலம்-டமருக முதலிய திவ்யாயுதங்கள் முதலிய வற்றைத்தரும்; ஸ்ரீ கைலாச வாசத்தையும் தரும். எனவே இது சிவசாரூப்பியத்தைத் தருமென்பது கருத்து. இது பிர்ம்மகைவர்த்த புராணத்திலும், நிர்மலமணி வியாக்கியான சஹிதமாயுள்ள சைவ பூஷணத்திலும் கூறப்படுகின்றது.

## விபூதி மஹாத்மியம்.

மகா தேவனுகிய சிவபெருமானது திவ்ய மங்களஸ்வரூபமா யும், வேத மந்திர ஸ்வரூபமாயும், "பஸ்மநாபதமபிவடதி சாந்த்யா" என்னும் யஜுர்வேத வசனப்படி, கார்ஹபத்யம், தக்ஷணுக்நி, ஆகவநீயம் முதலிய சமஸ்தாக்நிகளையுஞ் சுத்திகரிக்கத் தக்கதாயும், அக்நிஷ்ட் டோமாதி சகல யக்ஞங்களால் நேரும் தோஷங்களைப் பரிகரிக்க வல்லதாயும், மற்றும் சமஸ்த பாதஹ ஹரமாயும், சிவ பரஞ்சுடரைப்போல் சகப்பொருள்களனைத்தையும் தன்மயப்படுத்த வல்லதாயும், மோட்ச காமிகளாலும் சீவன் முத்தர்களாலும் கொண்டாடத்தக்கதாயும், பாசுபதவிரதயோக்யமாயுமுள்ள விபூதி யின் மகிமையைச் சகல தர்மங்களுக்கும் மூலப்ரமாணமாயுள்ள இருக்கு-யஜுர்-ஸாமம்-அதர்வண மென்னும் நான்கு வேதங்களும், வேதாந்த மெனப்படும் நூற்றெட்டுபநிஷத்துக்களுள் முக்கியமாய் எண்பத்தேழாவது உபநிஷத்தாயும், அதர்வண வேத சம்பந்தமா யும், புசுண்டமகாருஷிக்கு ஸ்ரீ காலாக்நி ருத்ரபகவானல் உபதேசிக் கப்பட்டதாயுமுள்ள பஸ்ம ஜாபாலோப நிஷத்தும், ப்ருஹஜ்ஜாபா லோப நிஷத்தும், சுக்ல யஜுஸ் ஸம்பந்தமான அவிமுக்த ஜாபாலம், ஸாமவேத சம்பந்தமான ருத்ராட்ச சாபாலம், ஜாபாலவுபநிடதம் முதலிய பஞ்சஜாபாலங்களும், மற்றும் முத்திகோபநிஷத், பாசுபத ப்ரம்மோபநிஷத், இராமரகஸ்யோபநிஷத், காலாக்நிருத்ரோபநிஷத், அதர்வஸ் ஸிகோபநிஷத், சாண்டில்யோபநிஷத், தைத்திரியோப நிஷத், ஸ்வேதாஸ்வதரோபநிஷத், வாஸுதேவோபநிஷத் முத லிய வுபநிஷத்துக்களும், காமிகம்-சிந்தியம் - வாதுளம் முதலிய இருபத்தெட்டுச் சிவாகமங்களும், அவற்றின் பேதங்களாகிய சாரோத்தரம் - பைரவோத்தரம்-காலபேதம்-சசிமண்டலம்-காலத ஹன முதலிய இருநூற்றெட் டுபாகமங்களும், பாரத்துவாஸ ஸ்மிருதி-சாதாதபஸ்மிருதி-மனுஸ்மிருதி-பாராசரஸ்மிருதி முதலிய

சமஸ்த ஸ்மிருதிகளும், போதாயன குஹ்யம்-மத்யந்தன குஹ்யம்-சாங்கியாயன குஹ்யம்-காத்யாயன குஹ்யம் முதலிய வேதசார சூக்தங்களும், சைவம்-ஸ்காந்தம்-கூர்மம்-வராஹம்-காரூட முதலிய பதினெண் புராணங்களும், சநற்குமாரம் - நாரசிங்கம் - தூர்வாசம்-நாரதிய முதலிய பதினெட்டுப புராணங்களும், இராமாயணம் - பாரதம்-சிவரகஸ்ய முதலிய இதிகாசங்களும், நீலகண்டபாஷ்யம்-சங்கரபாஷ்யம்-சோமநாத பாஷ்ய முதலிய வியாஸ ஸூத்திர பாஷ்யங்களும், ஸ்மிருதி முக்தாபலம்-ஸ்மிருதி பாஸ்கரம்-தர்மசார சுதாநிதி-கிரியா விவரணம்-கிரியாபைரம்-ஆந்கிகத் த்ருதலோகாக்ஷி-ஜயமுனி சூத்திர முதலிய தர்ம சாஸ்திர பேதங்களும், தூர்வாசசிவர்-பைங்கள சிவர்-உக்ரஜ்யோதி-ஸ்ரீகண்டர் - விஷ்ணு கண்டர்-சுபோதர்-வித்யா கண்டர்-இராமகண்டர்-ஞானசிவர்-ஞானசங்கரர் -சோமசம்பு-பிரம்மசம்பு-த்ரிலோசன சிவர்-அகோர சிவர்-வருண சிவர்-ப்ரசாத சிவர்-இராமநாத சிவர்-ஈசான சிவரென்னும் பதினெண் சைவத் தலைவர்களால் செய்யப்பட்ட பதினெண் பத்ததிகளும், விவேக சிந்தாமணி-வீரசைவ நளின கண்டாபரணம்-சடுத்ஸ்தலாகமம்-வீரபத்திர பத்ததி-நந்திகேசுவர பத்ததி-பசவ புராணம்-ஆராத்ய புராணம்-தத்வநிஜானு போகசாரம்-பண்டித பாஷ்யம்-சித்தாந்த சிகாமணி-வீரசைவ கௌமதி முதலிய எண்ணிறந்த வீரசைவ சமய சாஸ்திரங்களும், தமிழ் வேதங்களாகிய தேவாரம்-திருவாசகம் முதலிய பன்னிரண்டு திருமுறைகளும், ஆயுள் வேத முதலிய உபவேதங்களும், கடம்பவன புராணம்-பேரூர்ப் புராணம் முதலிய அநேகபுராணங்களும், மற்றும்சகல சாஸ்திரங்களும் விஸ்தரித் தோதுகின்றன.

அன்றியும், இவ் விபூதி மகாத்மியத்தை மேற்காட்டிய சாஸ்திரங்களும், மற்றுப் பல நூல்களும் விஸ்தரித்துக் கூறுதலின், அவை யனைத்தும் எழுதப்புகின், விரியு மென்றஞ்சி அவற்றுள் நம்மவ ரனைவரும் அத்தியாவஸ்யகமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய முக்கிய விஷயங்களை மாத்திரம் ஒருவாறு எடுத்து எழுதி முடித்தனம். இதனுள், நூற்குற்றம், சொற்பொருட் குற்றம் முதலிய எக்குற்ற மிருப்பினும் அவற்றினை உலகம் பொறுக்க.

விபூதி மஹாத்மிய வசனம் முற்றிற்று.

---

சுபம் ! சுபம் !! சுபம் !!!

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# விபூதி விளக்க அரும்பதவுரை.

## பாயிரம்.

செய்யுள் எண்.

க. இபமுகனை—யானைமுகக்கடவுளை.

உ. யாக்கைநோக்கு—தேகாபிமானம்.

ச. எந்தப்பவமும் இரிவதனல்—எந்தப்பாவமும்ஒழிவதனல்.

ரு. இமையார்—அழகமைந்த.

சா. பொருப்பரசி—மலையரையன்மகள்.
அருக்கம் அறு—குற்றமற்ற.
வில்லார்—ஒளிபொருந்திய.

எ. இன்னம்—(இனிமை-நம்) இனிய நமது.

கூ. மொய்தாள்—(அழகு) பொருந்திய திருவடி

க0. முன்னவன்—திருஞான சம்பந்த சுவாமிகள்.
மென்மனம்—(மென்மை-மனம்) இளகியமனம்.

கக. பேரறிவார்—திருநாவுக்கரசு சுவாமிகள்.

கச. சாந்தஇயல்—விபூதி இலக்கணம்,

கஅ. மானம்—பெருமை அல்லது பிரமாணம்.

உஉ. வித்துவராய—புலவராயுள்ள.

உச. சொல்விற்பனம்—சொற்றிறம்.
உத்தரகிரி—மேருமலை.

உசா. கல்லேறு—கல்லாலாகிய இடபம்.
கடலை—நவதானியத்தொன்று.
சொல்லேர்—சொல்லழகு.
எல்லார்—விளக்கம் பொருந்திய.

உஅ. பழமலைக்கண்—விருத்தாசலத்தில்.
நாத்திகழ்—(அறிவுடையோரது) நாவின்கண் விளங்குகின்ற.

செய்யுள்
எண்.

[மாலையை.

ந0. வண்டமிழ் அலங்கல்—வளவிய தமிழ்ப்பாடலாலாகிய
வனைவாரை—(தனக்குத்) தரிக்கும் அடியார்களை.

நக. பன்னம்—இலை.
பலம்—பழம்.

நஉ. ஓதி—ஞானம்.

நந. போத—மிகவும் அல்லது போதத்திருவடி—ஞானத்

நச. மெய்யை—உடம்பை. [திருவடி

நஎ. இருமை வகைதெரிந்தோர் — (பிறப்பு - வீடென்னும்)
இரண்டனது (துன்பவின்பக்) கூறுபாடுகளை
ஆராய்ந்துணர்ந்த பெரியோர்.

## நூல்.

க. ஓதா—சொல்லி.
ஏகமனத்தால்—ஒருமனத்தால்.

ரு. அக்கினி பூதேசன்—(அக்கினி + பூத + ஈசன்) அக்கினி
பூதவடிவக் கடவுள்.

சு. எரிமேனி—அக்கினி வடிவசரீரம்.
உயக்கொள—(நம்மனோர்) கடைத்தேற.

எ. வேதிகை—(யாக) மேடை.
அவி—(ஓமாக்கினியில் விடும்) நெய்முதலியன.
குண்டம்—ஓமகுண்டம்.

அ. முச்சீவர்—விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்.

கூ. நிகமாகமம்—(நிக + ஆகம) நிகமம்—வேதம், ஆகமம்—
ஆதரத்தின்—அன்பினாலே. [சிவாகமம்.

கசு. கோமயம்—சாணம் (கோ-பசு, மயம்—மலம்.)

கஎ. நுதற்கண்—நெற்றியிலே.
எஞ்சியதை—மிச்சமாகிய விபூதியை.
நந்நுதல் உமைக்கு—நமது வணக்கத்திற்கு (உரிய) நெற்றி
யையுடைய உமாதேவிக்கு.

ககூ. வியன்—பெரிய.
மன் ஆவினங்கள்—நிலைபெற்ற பசுக்கூட்டங்கள்.

உ0. தாவா—கெடாத.
தாலத்தின்கண்—மண்ணுலகத்திலே.

செய்யுள்
எண்.

உக. ஆனனத்தில்—முகத்தில்.
அங்கத்தில்—(தமது) உறுப்பின்கண்.
உஉ. ஐதின்—அழகாக.
உச. வேட்ட—விரும்பிய.
ஈட்டு—(நான்காகப்) பொருந்திய.
உசு. ஐவாய்—அழகுவாய்ந்த.
உஎ. தந்திரமுறையில்—ஆகமக்கிரமத்தில்.
தாண்டரிய—கடத்தற்கரிய.
உகூ. வாலா—பாற்பசு.
கஞ்சவிலை—தாமரையிலை.
கௌவியத்தால்—பஞ்சகௌவியத்தால்.
௩0. கோசலம்—கோ (பசு) மூத்திரம்.
முன்மறுவை—முன் சொல்லிய பஞ்சப்பிரமமந்திரத்தை.
பரித்து—எடுத்து.
பவம்—பிறப்பு அல்லது பாவம்.
௩க. மேனவிற்று மந்திரத்தால்—மேற்கூறிய பஞ்சப்பிரம [மந்திரத்தால்.
தாணு—ஸ்திரம்.
௩௩. தானேநண்ணு—தானேயுண்டாகிற.
எஞ்சாது—குறையாது.
௩ச. நலகற்பம்—நல் + அகற்பம்.
௩ரு. சனிக்கும்—உண்டாகும்.
௩சு. கபிலை—கருமையும் மஞ்சளும் கலந்ததோர் நிறம்.
௩அ. பைத்த—அழகிய.
கழுவாய்—பிராயச்சித்தம்.
பன்—சொல்லப்படுகின்ற.
ச0. தேன்—அழகு.
வான்—வானுலகம் (தேவர்)
சக. அதில்—பை, குடுக்கை, சம்புடம், மட்கலம் என்னும் இவற்றுள் ஒன்றில்.
தொன்மனு—பழமையான மந்திரம்.
சஉ. நாற்சந்நியாசிகள் என்றது:—
குடீசகசந்நியாசி, பகூதகசந்நியாசி, ஹம்சசந்நியாசி, பரமஹம்ச சந்நியாசிகளே.

செய்யுள்
எண்.

குடீசக சந்நியாசம்:—யாத்திரை செய்யச் சக்தி யின்மையால் எங்கேனும் ஒரு குடிசை ஏற்படுத்திக் கொண்டிருத்தல்.

பகூதக சந்நியாசம்:—சந்நியாச ஆசிரமத்தின் கர்மத்தைச் செய்துகொண்டு யாத்திரை செய்தல்.

ஹம்ச சந்நியாசம்:—அக்கினியால் சாதிக்கப்படும் கர்மத்தினை விட்டுப் பிரணவ ஜப முதலியவற்றை அநுஷ்டித்தல்.

பரமஹம்ச சந்நியாசம்:—விவிதிஷை-வித்வத் என்றிரு வகையாகும்; அவற்றுள்,

ஞானத்திற்கு முன் தோஷதிருஷ்டியா லுண்டாகும் தீவிரதர வைராக்கியத்தால் ஜிஞ்ஞாசுவினுற் செய்துகொள்ளப்படும் சந்நியாசம் (துறவு) விவிதிஷை சந்நியாசமாம்;

ஞானத்திற்குப்பின் தோஷதிருஷ்டியாலும் மித்யாத்துவ திருஷ்டியாலும் தோன்றும் தீவிரதா வைராக்கியத்தால் வித்வானுல் (ஞானியால்) செய்துகொள்ளப்படும் சந்நியாசம் வித்வத் சந்நியாசமாம்.

நைட்டிகர்—(மரண பரியந்தம்) பிரமசாரியாகவே யிருப்பவர்.

சங. அபிமந்திரித்த—நன்றாகமந்திரித்த.

அக்நிரீதிப் பற்ப மந்திரம்—"அக்நிரிதிபஸ்ம—வாயுரிதி பஸ்ம—ஜலமிதி பஸ்ம — ஸ்தலமிதிபஸ்ம — வ்யோமேதி பஸ்ம — சர்வாங்கம் வாளதம் பஸ்ம — மநாயதாநி சட்சுக்ம்ஷி பஸ்மாநி" என்பதாம்.

சச தானமறிந்து—இடந்தெரிந்து.

பஞ்சப்பிரம மந்திரம்—"ஓம் ஈசாநாயநம:, ஓம் தற்புருடாய நம:, ஓம் அகோராய நம:, ஓம் வாமதேவாய நம:, ஓம் சத்தியோசாதாய நம:" என்பதாம்.

திரியாயுஷ மந்திரம்—"திரியாயுஷ்ம ஜமதக்நே:—கஸ்யபஸ்ய—திரியாயுஷம்—யதைவாநாம் அகஸ்தியஸ்ய திரியாயுஷம் திரியாயுஷம்—ந்மயயஸ்து திரியாயுஷம் என்பதாம்.

செய்யுள்
எண்.

திரியம்பக மந்திரம்—"த்ரயம்பகம் யசாமகே சுகந்திம் புஷ்டிவர்த்தநம், உர் வாருக மிவ பந்தநாந்ம் ருத்யோந் மிருக்ஷியயா மாமிர்தாத்!"

மாநஸ்தோகே மந்திரம்—"மாநஸ் தோகே தநயே—மாந ஆயுஷி—மாநோ கோஷு மாநோ அஸ்வேஷு ரீரிஷ:—வீராந் மாநோருத்ரபாமி தோவதீ—அவிஷ்மதோ நமசாவி தேமதே!!"

சடு. அபிமந்த்ரமநு என்றது அக்நிரிதி முதல் மேற்காட்டிய மந்திரங்களை-

பஞ்சாத்திரம் என்றது சிவாஸ்திரம், வியோம அஸ்திரம், பாசு பதாஸ்திரம், க்ஷுரிகாஸ்திரம், அகோராஸ்திரம் என்னும் அத்திரமந்திரம் ஐந்தினை. அவை:—"ஓம்அ: அநந்த சத்திதாமநே சோதி ரூபாய சிவாஸ்திராய படு; ஓம் ஆம், ஈம் ஊம் வியோம வியாபிநே வியோமாஸ்திராய படு; ஓம் ஸிவிம் பஹு ஹும் படு; சிற்சிகிம், சிற்சிகிமேஷு பாசத சூரிகாஸ்திராய படு; ஓம் விரஸ்புர கோர கோர தம தனு ரூப சட சட பிர சட பிரசட கஹ கஹ வம வம காதாய காதாய ஹும்பட்" என்பனவாம்.

கலைகள் என்றது பஞ்சகலா மந்திரங்களை; அவை:—"ஓம் நிவர்த்தி கலாயை நம:; ஓம் பிரதிஷ்டா கலாயை நம:; ஓம் வித்தியாகலாயை நம:; ஓம் சாந்திகலாயை நம:; ஓம் சாந்தியதீதகலாயை நம:" என்பனவாம்.

ஐப்பிராசாதம் என்றது பஞ்சப்பிராசாத மந்திரத்தை; அது.

"ஹ்ரம், அம், ஆம், ஹம், ஸ." என்பதாம்.

துன்னு—பொருந்திய.

மன்னு—நிலைபெற்ற.

சசு. ஆரியன்—குரு.
தீக்கையேதில்—தீக்ஷையாகிய காரணத்தினலே.

சஎ. மந்திரநூல்—மந்திர சாத்திரம்.

செய்யுள்
எண்.

ஐந்து சுத்தியாவன—பூதசுத்தி, ஆன்மசுத்தி, திரவிய சுத்தி, மந்திரசுத்தி, இலிங்க சுத்தியாம்; இவற்றை, "புவிமுதனு லொன்பதுவுஞ் சடமா மென்றல் பூதசுத்தி யுயிரருளைப் பொருந்த ருனே, யவமகலு முயிர்ச்சுத்தி யெல்லா மிந்த வருளெனவே காண்டறிர வியநீள்சுத்தி, சிவமுதலாய் மாறிமலந் திரோதை நீங்கித் திருவருளா லுயிரரனைச் சேர்ந்தொன் றாகிப், பவமறன்மந் திரசுத்தி யிலிங்க சுத்தி பரனி றைவுட் புகுதல்பஞ்ச சுத்தி யாமே" என வரும் சிவஞானதீபத் திருவிருத்தத்தா லுணர்க.

சகூ. ஏய—பொருந்த.

ருஉ. செய்கென்று—செய்கவென்று.

ருந. உரம்—மார்பு.
நாபி—கொப்பூழ்.

ருரு. மகம்—யாகம்.

ருகூ. "நீற்றிடையி னிற்றிகழு நித்தனென நக்கீரன் போற்றி" யதை நக்கீர தேவநாயனுர் அருளிச்செய்த கோபப் பிரசாதத்தின் 72-ஆவது வரியிற் காண்க.
புணையாக—(பிறவிக்கடலைக் கடத்தற்கு) மரக்கலமாக
அணியாவார்—அலங்காரமாவார்.

ருஅ. அனகன்—பாவமற்றவன்.

ருகூ. ஈண்டு—இவ்வுலகத்தில்.

கூO. கோளறுக்கும்—இடையூற்றை யொழிக்கும்.

கூஉ. பவம் என்னும்—பிறப்பு யாதுபயன் தருவதாம்.

கூந. பதி—கணவன்.
ஈமத்து—சுடுகாட்டுள்.
ஓம்பி—மறவாது எண்ணி.

கூரு. அற்றமின்றி—சோர்வில்லாமல்.
பூதவுடம்பு—ஸ்தூலதேகம்.

கூஎ. கம்பலை—அழுகையொலி அல்லது நடுக்கம்.

கூஅ. எய்த்துமே—அறிந்துமே.

கூகூ. சிட்டனென—மேலோனென்று.
வானுதி—சுவர்க்காதிலோகத்தார்.

எO. வில்—பிரதாபம்.
உமர்மண்—உழமண்.
வாகாய்—அழகாய்.

செய்யுள்
எண்.

எக. புலை—இழிவு.
எ௩. பராமரியாது—அசட்டை செய்யாது.
எச. வன்னி—நெருப்பு.
தேசு—அக்கினி.
எ௫. அனல்—நெருப்பு.
நீறு—திருநீறு.
எ௬. சிந்தனை—சிந்தித்தல்.
எஅ. சீர்த்தி—புகழ்.
தேசிகன்—குரு.
அ௦. ஆய்தல்—சிந்தித்தல்.
சகத்திறந்த—உலகநோக்கொழிந்த.
அ௨. பேதைகுணம்—அறியாமையை யுண்டாக்குந் தீக்குணம்.
ஏய—பொருந்த.
அ௩. அலகில்—அளவில்லாத.
அ௫. திரஞானம்—திடஅறிவு.
அஅ. காண—நிறைய.
விரவ—பொருந்த.
அ௯. போழ்து—காலம்.
௯௦. அமலமுற—பரிசுத்தமடைய.
திமிரம்—அஞ்ஞானவிருள்.
மாசுபட—பாவமுண்டாக.
௯க. தைவந்து—குழைத்து.
௯௨. மாதுகதை—பெண்கதை (ஆயாள் கதை.)
௯௩. முரணுக—மாறுபாடாக.
உலகநூல்—பொருளின்பங்களைப் பெறுமுறை கூறு நூல்.
முன்னவன்—கடவுள்.
நூல்—வேதாகமம்.
௯ச. வெம்மைமொழி—கொடுஞ்சொல்.
௯௫. நன்று—உறுதி.
௯அ. பாமரன்—அவிவேகி.
௯௯. போதாதி—மலர்முதலியவற்றை.
தாதாவாய்—ஈகையுடையோராய்.
தூற்றூர்—பழியார்.
க௦௦. புன்மை—தவறுதல்.
க௦க. உணர்வதனை—சின்மாத்திரமாயுள்ள சிவத்தை.
அண்ணல்—தலைமை.

செய்யுள் எண்.

கOஉ. சிந்துண்முனி—(சிந்து + உண் + முனி) கடல்நீரையுண்ட அகத்திய முனிவர்.
காதகர்—தீயவர்.

கOரு. உத்தூளனம்—பொடியாக.
உற்று—அடைந்து.
மெய்ஞ்ஞானத்து உரவர்—உண்மையான திடஞானிகள் (உரவு—திடம்.)

கOச. பேணுது—பாதுகாவாது.
குலவும்—(மாறி மாறித்) தோன்றுகின்ற.

கOரு. ஈரெண்கருமம் — பதினறு கருமச்சடங்கு; அவை:— (1) இருது சங்கமனம், (2) கருப்பாதானம், (3) புஞ்சவனம், (4) சீமந்தம், (5) சாதகன்மம், (6) உத்தாபனம், (7) நாமகரணம், (8) அன்னப் பிராசனம், (9) பிரவாசம், (10) பிண்டவிர்த்தி, (11) சௌளம், (12) உபநயனம், (13) காண்டோபக்கிரமணம், (14) காண்டமோசனம், (15) சமாவர்த்தனம், (16) விவாகம் என்பனவாம்.

1. இருது சங்கமனம்—நாயகியை அவளது ருதுகாலத்தில் நாயகன் கூடும்படி செய்யுங் கிரியை.
2. கருப்பாதானம்—கருப்பந்தரிக்கும்படி செய்யுங் கிரியை.
3. புஞ்சவனம்—ஆண்மகவு பிறக்கும் மருந்து பிழியுங் கிரியை.
4. சீமந்தம்—மூன்றிடத்து வெளுப்புள்ள பன்றி முள்ளினுல், தலைமயிரை வகிர்ந்து செய்யுங்கிரியை.
5. சாதகன்மம் — புத்திரோற்பத்தியாய காலத்தில் செய்யுங் கிரியை.
6. உத்தாபனம்—அசுத்தமாகிய அறைவீட்டினின்றும் சுத்தமாகிய உயர்ந்த இடத்தில் குழந்தையைச் சேர்ப்பிக்குங் கிரியை.
8. அன்னப் பிராசனம்—சோறூட்டுதலில் செய்யுங் கிரியை.
7. நாமகரணம்—பேரிடுதலில் செய்யுங் கிரியை.
9. பிரவாசம்—குழந்தையை எடுத்துக்கொண்டு ஆலயத்திற்குச் செல்லுங் கிரியை.

செய்யுள்
எண்.

10. பிண்டவிர்த்தி — சரீரத்தை விர்த்திசெய்யுங் கிரியை.

11. சௌளம்—மயிர்வினைக்குச் செய்யுங் கிரியை.

12. உபநயனம் — பரமசிவத்தைத் தரிசிப்பதற்குச் சமீபமாகிய நயனத்தையுண்டாக்கும் வேதமோதுதற் பொருட்டாக முப்புரிநூல் தரிக்குங் கிரியை.

13. காண்டோபக்கிரமணம்—வேதபாகங்களை அத்தியயநம் பண்ண ஆரம்பிக்குங் கிரியை.

14. காண்டமோசனம்—அத்தியயநத்தை விடச்செய்யுங் கிரியை.

15. சமாவர்த்தனம்—பிரமசரிய விரதத்தை ஒழித்தற்குச் செய்யுங் கிரியை.

16. விவாகம்—திருமணம்.

கoஎ. நிகழாவாம்—விளங்காவாம்.

கoஅ. ஏக்குறுவார்—(ஏக்கம்+உறுவார்.) ஏக்கமடைவார்.
உண்மாசு—மனக்களங்கம்.

கக௨. ஏசும்—இகழத்தக்க.
மிருகக்கிணையா — (மிருகத்திற்கு+இணையா) மிருகங்களுக்கொப்பாக.

கக௩. புன்மை—சிறுமை.

கக௪. உய்தி—ஈடேறுதல்.

ககஎ. சிரீதேவி } பூதேவி } இலக்குமி.

ககஅ. சிக்கு—விவாதம்.

ககக. நந்தல்—கெடுதல்.
மாஞகம்—(மால்+நாகம்) பெருஞ்சர்ப்பம்.

க௨o. நித்தியகர்மம்:—எதனைச் செய்யாமையால் பாவமுண்டாகிறதோ, செய்வதால் புண்ணிய முண்டாகிறதோ, எது எப்போதும் விதிக்கப்பட்டிருக்கிறதோ அது நித்திய கர்மமாம்; அக்கருமம் ஸ்நானம் சந்தியாவந்தன முதலாயினவாம்.

நைமித்திககர்மம்:—எதனைச் செய்யாமையால் பாவமுண்டாகிறதோ, செய்வதாற் புண்ணிய முண்டாகிறதோ, எது எப்போதும் விதிக்கப்படாது, ஒரு நிமித்தத்தைக்கொண்டு விதிக்கப்பட்டிருக்கிறதோ அது நைமித்திககர்மமாம்; அக்கர்மம் கிரகண காலத்தில் செய்யும் சமுத்திர ஸ்நானம் சிரார்த்த முதலாயினவாம்.

செய்யுள் எண்.

காமியகர்மம்:—பயனையடைதற் பொருட்டு விதிக்கப்பட்ட கர்மம் காமிய கர்மமாம்; அக்கர்மம் மழையை யிச்சிக்கின்றவன் செய்யும் காரீரியாகம், சுவர்க்கத்தை யிச்சிக்கின்றவன் செய்யும் அக்கினி ஹோத்திரம் சோமயாக முதலாயினவாம்.

பிராயச்சித்தம்:—பாவ நாசத்தின் பொருட்டு விதிக்கப்பட்ட கர்மம் பிராயச்சித்த கர்மமாம்; அக்கர்மம் சந்நியாசி யொருவன் சோர்வினுலே பிறருடைய திரவியத்தைக் கிரகித்துப் பாவத்தைச் சம்பாதித்த விடத்து அவன் அந்தப் பாவந்தொலைய அத்திரவியத்தைத் தியாகஞ் செய்து மூன்றுநாள் உபவாசமிருத்தல் முதலாயினவாம்.

36136

கஉக. ஓத்து—வேதம்.

கஉஉ. வினைக்கட்டு—வினையால் விளையும்பந்தம்.

கஉங. பரிந்து—விரைந்து.

கஉச. செற்றம்—பகை.
தண்டாது—ஒழியாது.

கஉரு. ஆசி—வாழ்த்து.
ஒள்வாழ்வு—சிறந்த வாழ்க்கை.

கஉஎ. கருமமலக்காட்டை—சம்சாரவனத்தை.
கருக்க—(எரித்துக்) கருக்க.

கஉஅ. நல்லாறு—நன்னெறி.

கஉகூ. மயல்—யான் எனதென்னுஞ் செருக்கு.
மலர்மாதர்—இலக்குமி, சரஸ்வதி.

கஙஉ. ஒல்லா—பொருந்தாத.

கஙஎ. ஆன்—இடபம்.
அந்தம்—அழகு.

கஙஅ. கற்று—கன்றையுடைய பசு.

கஙகூ. பல்லூழி—பலகாலம்.

## வாழ்த்து.

அக்கமணி—உருத்திராக்கம்.

பரணவழுத்தெழுத்து—பரமசிவ சொரூபமாகச் சொல்லப்படுகிற ஸ்ரீ பஞ்சாக்கரம்.

ஸ்ரீ. ஐயாக்கண்ணுத் தேசிகமூர்த்திகளின் திருவடிகளே சரணம்.


NORTON & Co

தயாவிருத்தி பரிபாலனம்.

ஸ்ரீமத். தே. அ. சாமிகுப்புசாமி யவர்களியற்றிய

# புத்தகங்கள்.

| | | அணா. |
|---|---|---|
| 1. | குருஸ் தவம் .... .... .... | 1 |
| 2. | போத விளக்கம் .... .... .... | 2 |
| 3. | சொரூபாநந்த விளக்கம் .... .... .... | 1 |
| 4. | அநுபவாநந்த விளக்கம் .... .... .... | 1 |
| 5. | சாமி விளக்கம் .... .... .... | 1 |
| 6. | திருவள்ளுவர்தோத்திர விளக்கம் .... .... | 1 |
| 7. | கற்பு விளக்கம் .... .... .... | 3 |
| 8. | அன்னதான விளக்கம் .... .... .... | 2 |
| 9. | கருணை விளக்கம் .... .... .... | 2 |
| 10. | நன்மதி தீபம் .... .... .... | 4 |
| 11. | விபூதி விளக்கம் .... .... .... | 4 |
| 12. | ஞானசார விளக்கம் .... .... .... | 1 |
| 13. | துறவுநிலை விளக்கம் .... .... .... | 4 |
| 14. | இல்லறவொழுக்க விளக்கம் .... .... .... | 4 |
| 15. | அறிவுநிலை விளக்கம் .... .... .... | 4 |

ஷை விளக்கங்களும் தீபமும் அரியபெரிய தத்துவ ஆராய்ச்சி களையும், நீதிகளையும், பல வித்துவான்களின் அபிப்பிராயங்களையும் பெற்று, வெகுஜன சமுகத்தில் புலவர் பலரால் அரங்கேற்றஞ் செய்யப்பட்டனவாம்.

இந்நூல்களின் விக்கிரயப் பொருள், இந்நூல்களின் ஆசிரியர் நடாத்தும் ஸ்ரீ. ஈசூர். சச்சிதாநந்தசுவாமிகளின் குருபூஜைகைங் கரியத்திற்கே உபயோகிக்கப்படுவதால், இவற்றை யாவரும் வாங்கிப் பெரும் புண்ணியத்திற் காளாவார்களெனத் திருவருளைச் சிந்திக் கின்றனன்.

## புத்தகங் கிடைக்கும் இடங்கள்.

1. ரிப்பன் பிரஸ், சென்னை.
2. ஸ்ரீமத். ஆசிரியர். கோ. வடிவேல் செட்டியார் அவர்கள், வேதாந்த சங்கம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
3. ஸ்ரீமத். ஞாநாநந்த மணவாள முனிவரவர்கள், ஸ்ரீ. சாது நாராயண தேசிகர் மடாலயம், தண்டையார்பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்கருகு, திருவொற்றியூர் ஐரோட், சென்னை.
4. ஸ்ரீமத் தே. அ. சாமிகுப்புசாமியவர்கள்
36, ஸ்ரீ. சச்சிதாநந்த விலாசம்,
வெங்கடேச பத்தன் வீதி,
பெருமாள்பேட்டை,
வேப்பேரி போஸ்டு, சேன்னை.

இங்ஙனம்.

புராணிகர். காளத்தி - இ. சிதம்பரசாமி பாண்டியர்,

8, மணியக்கார சௌல்ட்ரி ரோட்,

வண்ணாரப்பேட்டை போஸ்டு, சென்னை.